**செய்தி வரைவுகள் :**

ஆ1. வானொலி, தொலைக்காட்சி, இதழ்கள் ஆகியவற்றில் 1. மாநகரச் செய்திகள் 2. மாநிலச் செய்திகள் 3. குறிப்பிட்ட முக்கிய சிறப்பான அவசரச் செய்திகளைத் தருதல் 4. அன்றாடச் செய்திகளை வழங்குதல்.

**இலக்கிய வரலாறு**

இ1. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

2. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்

3. நாட்டுப்புற இலக்கியம்

**அலகு 5 : படைப்பாற்றல்**

**1. கோட்பாட்டுத் தொடர்கள்**

அ. முழக்கங்கள் அமைத்தல் : பொது இடங்களை பாதுகாத்தல். சுற்றுச்சூழல், குடும்பநலம், கூட்டுறவுச் சேமிப்புத்துறை, நாட்டுப்பற்று, சாலைவிதிகள், குழந்தைகள் மகளிர் முதியோரை நேசித்தல், கடமைகள் பொறுப்புகளைச் செவ்வனே உணர்ந்து செயல்படுதல் போன்ற அடிப்படைகளில் கோட்பாட்டுத் தொடர்களை அமைத்தல்.

(எ.கா)

சேமிப்புத்துறை 1. கையளவு சேமிப்பு கடலளவு செழிப்பு
2. சிறுதுளி பெருவெள்ளம்

ஆ. புதுமொழிகள் அமைத்தல் :

பழைய பழமொழிகளைச் சார்ந்து நின்று சூழல் (அ) துறைகளுக்கு ஏற்றவாறு புதுமொழிகளாக அமைத்தல்.

(எ.கா)

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
செயலின் அழகு விளைவில் தெரியும்.

2. பழைய கதைகள் (இலக்கியக் கதைகள் – நாட்டுப்புறக் கதைகள் – புராணக் கதைகள் காப்பியத்திலுள்ள கிளைக்கதைகள் இலக்கிய நிகழ்வுகள் (நலங்கிள்ளி நெடுங்கிள்ளி, கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார், பாரியும் கபிலரும், ஔவையும் அதியமானும் இவை போன்ற இடைக்கால இலக்கிய நிகழ்வுகளைத் தற்காலத்திற்கு ஏற்ப நீதி, அறம் புலப்படும்படியாக மறு ஆக்கம் செய்தல்).

3. மொழிபெயர்ப்பு – பொதுநிலை

# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)

**கோயம்புத்தூர் – 641 018**

## முதற்பருவம்

## பொதுத்தமிழ் தாள் – 1

**இளங்கலை – அறிவியல் பட்டம் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்குரியது**

(2015–2016 ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது)


பதிப்பாசிரியர்கள்

முனைவர் சந்திரா கிருஷ்ணன்
முனைவர் இரா. செல்வராஜ்
முனைவர் மா. சுப்புரத்தினம்
முனைவர் சோ. குருசாமி
முனைவர் ச. கலைச்செல்வன்
முனைவர் இ. சேனாவரையன்



வெளியீடு

தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் – 641 018

# முதலாமாண்டு – இளங்கலை – முதல் பருவம்

## பாடத்திட்டம்

## தமிழ் – தாள் - I

(விழுமியம் : செய்யுள், சிறுகதை – மொழித்திறன் – படைப்பாற்றல்)

**(Credits = 3 மதிப்பெண் : 75 + 25 = 100)**

**அலகு 1 : செய்யுள்**

1. பாரதியார் – கண்ணன் என் சேவகன்
2. பாரதிதாசன் – பிசிராந்தையார் விடை
3. கவிமணி – கோவில் வழிபாடு
4. ஈரோடு தமிழன்பன் – தயக்கங்கள்
5. சிற்பி – ஓ... சகுந்தலா
6. எழில் முதல்வன் – வினைமுற்று வேண்டாத வீட்டுக் கவிதை

**அலகு 2 : செய்யுள்**

7. புவியரசு – தந்தை மகற்காற்றும் உதவி
8. வைரமுத்து – காந்தியம்
9. மு. மேத்தா – சுதந்திரக் குதிரை
10. அப்துல் ரகுமான் – ஆறாத அறிவு
11. பொன்மணி வைரமுத்து – தாய்ப்பல்லாண்டு
12. சுரதா – நெய்தல் நீர்

**அலகு 3 : சிறுகதை**

(தேர்ந்தெடுக்கப்பட்ட 8 சிறுகதைகளின் தொகுப்பு, தமிழ்த்துறை வெளியீடு)

**அலகு 4 : இலக்கணம்**

அ1. வல்லினம் மிகும் இடம், வல்லினம் மிகா இடம், படிமம், குறியீடு.

2. படித்துக் குறிப்பெடுத்தல் : (பாடப்பகுதியிலுள்ள சிறுகதையைப் படித்துக் கருத்தைச் சிதைக்காமல் ஒரு பக்க அளவில் குறிப்புகள் தயாரித்தல்)

## 1. கண்ணன் – என் சேவகன்

கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாந் தாமறப்பார்;
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்;
'ஏனடா, நீ நேற்றைக் கிங்குவர வில்லை' யென்றால்
பானையிலே தேளிருந்து பல்லாற் கடித்ததென்பார்;
வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்ததென்பார்;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாளென்பார்;
ஓயாமற் பொய்யுரைப்பார்; ஒன்றுரைக்க வேறுசெய்வார்;

தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்;
உள்வீட்டுச் செய்தியெலாம் ஊரம் பலத்துரைப்பார்;
எள்வீட்டி லில்லையென்றால் எங்கு முரசறைவார்;
சேவகராற் பட்ட சிரமமிக வுண்டு, கண்டீர்;
சேவகரில் லாவிடிலோ, செய்கை நடக்கவில்லை.
இங்கிதனால் யானும் இடர்மிகுந்து வாடுகையில்,
எங்கிருந்தோ வந்தான், 'இடைச்சாதி நான்' என்றான்;
'மாடுகன்று மேய்த்திடுவேன், மக்களைநான் காத்திடுவேன்;

வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்;
சொன்னபடி கேட்பேன்; துணிமணிகள் காத்திடுவேன்;
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்;
காட்டுவழி யானாலும், கள்ளர்பய மானாலும்,
இரவிற் பகலிலே யெந்நேர மானாலும்,
சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர், தம்முடனே
சுற்றுவேன், தங்களுக்கோர் துன்பமுறா மற்காப்பேன்;
கற்றவித்தை யேதுமில்லை; காட்டு மனிதன், ஐயே!
ஆனபொழுதுங் கோலடி குத்துப்போர் மற்போர்
நானறிவேன்; சற்றும் நயவஞ் சனைபுரியேன்'
என்றுபல சொல்லிநின்றான். 'ஏது பெயர்? சொல்' என்றேன்.
'ஒன்றுமில்லை; கண்ணனென்பார் ஊரிலுள்ளோர் என்னை'
என்றான்.

கட்டுறுதி யுள்ளவுடல், கண்ணிலே நல்லகுணம்,
ஒட்டுறவே நன்றா வுரைத்திடுஞ்சொல்–ஈங்கிவற்றால்



# அலகு – I
# செய்யுள்

## மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (11.12.1882-12.09.1921)

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 11.12.1882 |
| ஊர் | : | எட்டயபுரம் (நெல்லை மாவட்டம்) |
| பெற்றோர் | : | சின்னசாமி - இலக்குமியம்மாள் |
| இளமைப்பெயர் | : | சுப்பிரமணியன் |
| செல்லப்பெயர் | : | சுப்பையா |
| பெற்ற பட்டம் | : | பாரதி |
| வேறு பெயர்கள் | : | 1. ஷெல்லிதாசன் 2. சக்திதாசன் |
| துணைவியார் | : | செல்லம்மாள் |
| முதல் பாடல் | : | ''தனிமை இரக்கம்'' (மதுரை விவேகபாநு இதழில் வெளிவந்தது) |
| பணி | : | 1. துணையாசிரியர் (சுதேசமித்திரன் நாளிதழ்)<br>2. பொறுப்பாசிரியர் (சக்கரவர்த்தினி திங்களிதழ்)<br>3. ஆசிரியர் (இந்தியா வார இதழ்)<br>4. ஆசிரியர் (பாலபாரதம் ஆங்கில இதழ்) |
| படைப்புகள் | : | 1. கண்ணன் பாட்டு 2. குயில் பாட்டு<br>3. பாஞ்சாலி சபதம் |
| மறைவு | : | 12.09.1921 |

சின்னசாமி - இலட்சுமியம்மாள் புதல்வராக எட்டயபுரத்தில் பிறந்தார். இயற்பெயர் சுப்பிரமணியம். பெற்றோர் செல்லமாகச் சுப்பையா என அழைத்தனர்.

இளமையில் பாப்புனைந்ததால் இவர் நாவில் கலைமகள் வீற்றிருப்பதாகக் கருதி எட்டயபுர அரசவையினர் இவருக்குப் “பாரதி” என்ற சிறப்புப் பெயரை வழங்கினர். இவர், ஆங்கிலப் புனைவியல் கவிஞர் ஷெல்லி மீது கொண்ட ஈடுபாட்டினால்,



ஷெல்லி கழகம் (Shelleyan guide) என்ற இலக்கியக்கழகம் அமைத்ததோடு, தமக்கு ‘ஷெல்லிதாசன்’ என்று புனைப்பெயரும் வைத்துக்கொண்டார்.

காசியில் தமது அத்தை வீட்டில் தங்கியிருந்தபோது சமஸ்கிருதம், இந்தி மொழிகளி தேர்ச்சி பெற்றார். பின் எட்டயபுரம் திரும்பி வந்து எட்டயபுர அரசவைக் கவிஞர் ஆனார். அதன் பின்னர், மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சிறிது காலம் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

இந்தியர்களுக்கு நாட்டுப் பற்றினை ஊட்டுவதற்காக ‘சுதேசமித்திரன்’ இதழின் துணை ஆசிரியராகவும், ‘சக்ரவர்த்தினி’ ‘பாலபாரதி’ ‘இந்தியா’ ‘விஜயா’ ‘கர்மயோகி’ ஆகிய இதழ்களின் ஆசிரியராகவும் பொறுப்பேற்று இதழியல் பணியாற்றினார்.

இவருடைய எழுதுகோலுக்கு பிரிட்டீஷ் பீரங்கிகளை விட மிகுந்த வலிமை இருந்ததை உயர்ந்த ஆங்கிலேயர் இவரைச் சிறையிட முனையும்போது, பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த புதுவைக்குச் சென்றுவிட்டார். அங்குதான் இவருக்கு அரவிந்தர் தொடர்பு கிட்டிற்று. பிரெஞ்சு மொழி கற்றார்.

முதன்முதலில் ‘புனைவியல் இயக்கம்’ (Romantic Movement) தொடங்கியவர் பாரதிதாம். இவரே தமிழின் முதல் உரைநடைக் கவிதையை உருவாக்கியவர். மரபுக்கவிதையும், புதுக்கவிதையும் முதன்முதலில் கலந்த இடம் பாரதியார் பாடல்களில்தாம். கதைகள், கட்டுரைகள் ஆகியனவற்றையும் எழுதியுள்ளார். இருப்பினும், இவரது கவிதைகளே சிறப்புடன் விளங்கி இவருக்கு ‘மகாகவி’ என்ற சிறப்பினை அளித்தன.

நாட்டுப்பற்று, தமிழ்ப்பற்று, பொதுவுடைமை, கடவுள் பற்று, இயற்கை நாட்டம், இசைப்பாங்கு, புதுமைப்பெண், ஒருமைப்பாட்டுணர்வு, தத்துவம், அளவையியல், புதுமை, எளிமை ஆகிய கூறுகளைக் கொண்டவை இவரது பாடல்கள்.

கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய முப்பெருங் காவியங்கள், இவர்தம் புலமையைக் காலம் கடந்து, நாடுகடந்து, மொழிகடந்து போற்றச் செய்கின்றன.

ஈண்டு பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள “கண்ணன் என் சேவகன்” இவருடைய கடவுள் பற்றை உணர்த்தும்வண்ணம் அமைவனவாகும்.

இணைந்து தென் திருவிதாங்கூர்ப் போராட்டத்தில் ஈடுபட்டவர். இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றவர். பள்ளித் தலைமை ஆசிரியராகவும் கல்லூரிப் பேராசிரியராகவும் பணிபுரிந்தவர்.

“உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத்தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை”

என்பது அவர் கவிதைக்குத் தந்த பொதுவிலக்கணமாகும்.

“மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா”

என்று பெண்ணினப் பெருமை கொள்ளப் போற்றியுள்ளார். உமர்கய்யாம் பாடல்கள், இளந்தென்றல், காதல் பிறந்த கதை, மலரும் மாலையும், ஆசிய ஜோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், தேவியின் கீர்த்தனங்கள், கவிமணியின் உரைமணிகள், காந்தளூர்ச்சாலை முதலிய படைப்புகளை உருவாக்கியுள்ளார். குழந்தை இலக்கியப் படைப்புக்கு முன்னோடி இவர். குழந்தைக் கவிஞர் என்னும் சிறப்புக்கும் உரியவர்.

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள “கோவில் வழிபாடு” என்னும் படைப்பு இறைவன் உள்ளத்தில் உள்ளான் என்னும் உண்மையை உணர்த்துகின்றது.

## 3. கோவில் வழிபாடு

கோவில் முழு துங்கண்டேன் – உயர்
கோபுரம் ஏறிக்கண்டேன்
தேவாதி தேவனையான் – தோழி!
தேடியுங் கண்டிலனே. 1

தெப்பக் குளங்கண்டேன் – சுற்றித்
தேரோடும் வீதி கண்டேன்,
எய்ப்பில்வைப்போம் அவனைத் – தோழி!
ஏழையான் கண்டிலனே. 2



தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்,
‘மிக்கவுரை பலசொல்லி விருதுபல சாற்றுகிறாய்;
கூலியென்ன கேட்கின்றாய்? கூறு’கென்றேன். ‘ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிக ளேதுமில்லை;
நானோர் தனியாள்; நரைதிரைதோன் றாவிடினும்
ஆன வயதிற் களவில்லை; தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதனக்குப் காசுபெரி தில்லை’ யென்றான்.
பண்டைக் காலத்துப் பயித்திய லொன்றெனவே
கண்டு, மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன். அன்று முதற்கொண்டு,
நாளாக நாளாக, நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன்; கண்ணனால்
பெற்றுவரும் நன்மையெலாம் பேசி முடியாது.
கண்ணை யிமையிரண்டும் காப்பதுபோல், என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான்; வாய்முணுத்தல் கண்டறியேன்.
வீதி பெருக்குகிறான்; வீடுசுத்த மாக்குகிறான்.
தாதியர்செய் குற்றமெலாந் தட்டி யடக்குகிறான்;
மக்களுக்கு வாந்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்,
ஒக்கநயங் காட்டுகிறான்; ஒன்றுங் குறைவின்றிப்
பண்டமெலாஞ் சேர்த்துவைத்துப் பால்வாங்கி மோர்வாங்கிப்
பெண்டுகளைத தாய்போற் பிரியமுற ஆதரித்து
நண்பனாய், மந்திரியாய், நல்லா சிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி யென்றுசொன்னான்.
இங்கிவனை யான்பெறவே என்னதவஞ் செய்துவிட்டேன்!
கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவு மவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்,
தெளிவே வடிவாஞ் சிவஞானம், என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவரு கின்றனகாண்!
கண்ணனைநான் ஆட்கொண்டேன்! கண்கொண்டேன்
கண்கொண்டேன்
கண்ணனெனை யாட்கொள்ளக் காரணமு முள்ளனவே!

## பாவேந்தர் பாரதிதாசன் (29.4.1891-21.4.1964)

*பாரதிதாசனின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம். புதுவையில் கனகசபை - இலக்குமியம்மாள் புதல்வராகப் பிறந்தார். பாரதி வழியை விரும்பிப் பின்பற்றியதால் 'பாரதிதாசன்' என்ற சிறப்புப் பெயரினை வைத்துக்கொண்டார். புலவர் பட்டம் பெற்றவர். மரபுக் கவிஞர்.*

*தமிழாசிரியராக 1909 முதல் 1946 வரையில் பணிப்புரிந்தார். பாவேந்தர், புரட்சிக் கவிஞர் ஆகிய சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர். இவர்தம் 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கு சாகித்ய அகாடெமி பரிசு பெற்றார். பெரியார், அண்ணா, குன்றக்குடி அடிகளார் போன்றோருடன் நெருக்கம் கொண்டிருந்தார்.*

*தமிழ்ப்பற்று, சமூகச் சீர்திருத்தம், பகுத்தறிவு, பொதுவுடைமை, அழகுணர்ச்சி, நாட்டுப்பற்று, இசைப்பாங்கு, சொல்நயம் போன்றவை இவரின் பாடல்களில் அதிகமாக ஆளுமை செலுத்துவதைக் காணமுடியும்.*

*நான்கு கவிதைத் தொகுதிகளுடன் சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய், தமிழச்சியின் கத்தி, எதிர்பாராத முத்தம், குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, கடற்மேற் குமிழிகள், சேரதாண்டவம், தேனருவி, தமிழியக்கம், மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம், குறிஞ்சித் திட்டு, இசையமுது, இருண்ட வீடு, முல்லைக்காடு, படித்த பெண்கள், காதலா? கடமையா? போன்ற நூல்களைப் படைத்துள்ளார். தமிழ்த் திரைப்படங்களில் திரைக்கதை, உரையாடல் மற்றும் பாடல்கள் எழுதியுள்ளார்.*

*பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள "பிசிராந்தையார் விடை" சான்றோர் சிறப்பினை உணர்த்தும்வண்ணம் அமைந்துள்ளது.*

### 2. பிசிராந்தையார் விடை

மிகப்பல ஆண்டுகள் ஆகியும் மேனியில்
நரையே இல்லையே! இந்த நன்னிலை
எப்படி எய்தினீர் என்று கேட்டோர்க்குப்
பிசிராந்தையார் இசைப்பாராயினார்
மாட்சிமைப்பட்ட குணங்குள் வாய்ந்தஎன்



மனைவி அறிவு நிரம்ப வாய்ந்தவள்!
அன்புறு புதல்வரும் அத்தகையோரே
என்னுடை ஏவலாளர் தாமும்
யான் எண்ணியது அவர் எண்ணும் இயல்பினர்!
இறைவனோ முறைசெய்து காக்கும் மேலோன்!
என்னூ ரின்கண் இருக்கும் குடிகள்
பணியத்தருமிடம் பணிபவர் நன்றே!
அமையத் தகுகுணம் அனைத்தும் அமைந்தவர்
கல்வி நிறைந்தவர்; கற்றதன் பயனாய்
நாவைச் சுவைக்கே அடிமை ஆக்கார்
உடம்புபலன் மடந்தைக்கே என்னார்;
கண்ணில் காட்சி வெறிகொண்டு திரியார்
மூக்கு நறுமணம் தோய்த்துக் கவிழார்
காதை இசையினில் அளவோடு கவிப்பவர்
எனவே,
ஆன்றவிந்தடங்கிய கொள்கையுடைய
சான்றோர் மிகப்பலர்! ஆதலால்
ஏன் எனக்கு நரைக்கும்? இயம்புவீரே!

❄❄❄

## கவிமணி தேசிக விநாயகம்
(28.7.1876 - 26.9.1954)

*கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாஞ்சில் நாட்டுத் தேரூரில் சிவதாணு - ஆதிலட்சுமியம்மாள் ஆகியோருக்குப் புதல்வராகப் பிறந்தார். பள்ளிப் பருவத்திலேயே பாட்டெழுதினார். 24.12.1940 இல் தமிழறிஞர் உமாமகேசுவரர் இவருக்குக் 'கவிமணி' என்ற பட்டத்தினை வழங்கினார்.*

*பன்மொழி பாவலராக விளங்கினார். இவருக்கு மலையாளம், ஆங்கிலம், சமஸ்கிருதம், தமிழ் போன்ற மொழிகளில் வித்தகராக விளங்கினார். கல்வெட்டறிஞர், இசைப் பேரறிஞர், மீராவின் கீர்த்தனைகளுக்கு இசையமைத்தவர். காந்திய நெறியாளர். செட்டிநாட்டரசர் சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் பொன்னாடைப் போர்த்தப்பட்டவர். 1950இல் சிலம்புச் செல்வர் மா.பொ. சிவஞானத்துடன்*

## கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்

*ஆத்துப் பொள்ளாச்சியில் பொன்னுசாமி - கண்டியம்மாள் புதல்வராக 1936இல் பிறந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. ஆனர்ஸ் (தமிழ் இலக்கியம்) கற்று, 1958 முதல் பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தவர். 1989-இல் கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று 1997 வரை சிறப்புறப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.*

*இவரது முதல் கவிதை 1956இல் வெளிவந்தது. இவரது கவிதை நூல்களுள் குறிப்பிடத்தக்கவை : நிலவுப்பூ, சிரித்த முத்துக்கள், ஒளிப்பறவை, சர்ப்பயாகம், புன்னகை பூக்கும் பூனைகள், மௌன மயக்கங்கள், சூரிய நிழல், வண்ணப் பூக்கள்.*

*இவரது கவிதையான ‘ஒரு கிராமத்து நதி” 2002ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருது பெற்றது. மேலும் இவர் பாவேந்தர் விருது, பாஸ்கர சேதுபதி விருது, தமிழ் நெறிச் செம்மல் விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க விருது, கம்பன் கலைமணி விருது, ராணா இலக்கிய விருது குன்றக்குடி ஆதீனம் கபிலர் விருது, திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க மகாகவி உள்ளூர் விருது, மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது போன்ற பரிசுகளைப் பெற்றுள்ளார்.*

*உரைநூல்கள், மொழிபெயர்ப்புகள், வரலாற்று நூல்கள் வெளியிட்டுள்ளார்.*

### 5. ஓ சகுந்தலா...

கண்வ குமாரீ! சகுந்தலே!
கல்யாண முருங்கைச் செம்பட்டு நிழலில்
தங்கத் தகட்டு வயிறு நிலந்தோய
குத்து விளக்குத் தண்டுக் கால்களின்
செம்பஞ்சு விரல்கள் சூனிய வெளியின்



சிற்பச் சிலைகண்டேன் - நல்ல
சித்திர வேலைகண்டேன்,
அற்புத மூர்த்தியினைத் - தோழி!
அங்கெங்கும் கண்டிலனே. 3

பொன்னும் மணியுங்கண்டேன் - வாசம்
பொங்கும் பூமாலை கண்டேன்,
என்னப்பன் எம்பிரானைத் - தோழி!
இன்னும்யான் கண்டிலனே. 4

தூப மிடுதல் கண்டேன் - தீபம்
சுற்றி எடுத்தல் கண்டேன்
ஆபத்தில் காப்பவனைத் - தோழி!
அங்கேயான் கண்டிலனே. 5

தில்லைப் பதியுங்கண்டேன் - அங்குச்
சிற்றம் பலமுங் கண்டேன்,
கல்லைக் கனிசெய்வோனைத் - தோழி!
கண்களாற் கண்டிலனே. 6

கண்ணுக் கினியகண்டு - மனத்தைக்
காட்டில் அலையவிட்டு,
பண்ணிடும் பூசையாலே தோழி!
பயனொன்றில்லை, அடி! 7

உள்ளத்தில் உள்ளான், அடி! - அது நீ
உணர வேண்டும், அடி!
உள்ளத்தில் காண்பாய் எனில் - கோயில்
உள்ளேயுங் காண்பாய், அடி! 8

❊❊❊

## ஈரோடு தமிழன்பன்

*புதுக்கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர். தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் பிறந்தவர். பெற்றோர், செ. இரா. நடராசன் - வள்ளியம்மாள். புனைப்பெயர்கள் :*

*தமிழன்பன், ஈரோடு தமிழன்பன், விடிவெள்ளி என்பன. தனிப்பாடல் திரட்டு - ஓர் ஆய்வு என்ற ஆராய்ச்சிக்காக முனைவர் (பி.எச்டி) பட்டம் பெற்றவர். சென்னை புதுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். மரபுக் கவிதை எழுதிப் புதுக்கவிதைக்கு வந்த தமிழ்ப் பேராசிரியர், பதினைந்துக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார். திறனாய்வாளர், ஓவியர், சிறந்த சொற்பொழிவாளர் என பன்முகப்பட்ட ஆளுமைகளைக் கொண்டிருப்பவர்.*

## 4. தயக்கங்கள்

முயற்சிப் பாதையில்
பாதங்களே
பூசும் பசை
சோம்பலின் சுவாசம் -
அதைரியத்தின் தொட்டில்,
அதுவே
தயக்கம்!

தயக்கம் தன்
கையில் வைத்திருக்கும்
காரணங்கள்
சமாதானங்கள் -
தோல்வியின் தூதுகளே!

அவசரம் என்ன?
இந்த வினாக்குறிக்கீழ்
விழும் புள்ளி
வெற்றி உனக்கென
விட்ட
கண்ணீர்த்துளி.

ஆலோசனைக் கெனத்
தயக்கம்
பாய் விரித்துவிட்டு
அச்சத்தின் பலாத்காரத்திற்கு
ஆட்பட்டு விடுகிறது.



இந்த நொடிகளில்
இதழ் விரிக்கும்
பூக்களைப் புறக்கணித்துவிட்டுச்
சருகுகளோடு
உருகுவதே
தாமதத்தின் மதம்

பாறைகளை உரித்துத்
தங்கச் சுளைகளை
எடுக்கும்
விரல்கள்
வாழைப் பழத்திடம்
வாய்தா கேட்பதா?

நிதான விதானத்தின்கீழ்
ஊக்கம்
உறங்கும்போது
சடலமாய்விடும்
எதிர்காலத்தின் மீது
ஈக்கள் உனக்கு இரங்கல்
பாக்கள் இசைக்கும்!

தயக்கம் தவிர்-உன்
ஆன்மாவிலிருந்து
ஆகாயத்திற்கு - நீ
விடியல்களை
விநியோகம் செய்!
வேகப்படு...
வினைகள்
நீண்ட வரிசையில்
நிற்கின்றன.

❇❇❇

வீட்டைக் கலையின்
விளக்கமாய் மாற்றி....

வாசலில் விழுந்த
பாலிதீன் பைகளில்
நிரம்பிய பாலை
நேருறக் காய்ச்சி
மணி 3.00 ஆக
அவசரமாக...

முகம் கழுவி,
கூந்தல் திருத்தி,
திலகமிட்டு,
உடை சரிசெய்து...

பிள்ளைகள் வந்ததும்
பிரியமோடணைத்து
வேண்டுவன தந்து
விளையாட அனுப்பி
இரவு உணவுக்கு
ஏற்றன செய்து...

‘‘உன் கவிதை
முடியவே முடியாதா?
வினைமுற்று எங்கே?’’
என
வினவாதே நண்பா!

இது
வினைமுற்று வேண்டாத
வீட்டுக் கவிதை.

❉❉❉



தென்றல் பாதையில் தாளங்கள் போட
கட்டுக் கொண்டையின் கூந்த லவிழ்ந்து
தொட்டதால் பூமியின் தோள்கள் புல்லரிக்க
ததும்பிய கொங்கைத் தடங்கள் குழைய

இடது பதுமவிரற் கொழுந்தை,
காதலில் பசித்த உதடுகள் ருசிக்க
அதிசயமாய் விரிந்த வனபுஷ்ப விழிகள்
ஆசைச் சுடரின் தீபங்களாக
மரகதத் தாமரை இலைத் தாளில்
வரைவ தென்னடீ?
காதல் லிகிதமோ?

நெகிழ்ந்த தவத்துக்கு தேவ சௌந்தர்யம்
கவிழ்ந்து கொடுத்த அம்ருத கவிதையே!
புள்ளிமான் தோழீ! கானகப் பச்சை
வெள்ளத்தில் நீந்தும் விந்தை மந்தாரையே!
வானத்தை அளந்தும் மண்ணைக் கீறியும்
வரைவ தென்னடீ?
காதல் லிகிதமோ?

தேவபோகமும் மோகயாகமும் தந்த
அபூர்வ மனித ராகம் நீ! ஆனால்
ஞானச் சடைமுடி புனைந்த கௌசிகன்
மேனகைப் பானகம் அருந்தி உன்னைத்
தானம் தரும்வரை முத்தப் பித்தன்
உன் அழுகுரல் தேனில்
ஆரண்யம் நனைகையில்
அவனோ கருங்கல் வைராக்ய சித்தன்!

மறுக்கப்பட்ட மழலை நீ
புறக்கணிக்கப் பட்டபூவின் மொக்கு
இன்று
வரைவ தென்னடீ?
காதல் லிகிதமோ?

முன்னம் விசுவாமித்ரன் கைமறிப்பு
பின்னர் துஷ்யந்தராஜன் காதல் மறப்புக்கு

ஒரு முன்னோட்ட ஒத்திகையடி!
ஒருவன்
வேதத்தைக் காதலாக்கினான்
இன்னொருவன்
காதலை வேதனையாக்குவான்!
தங்கத் தாம்பாளமாய்
விரித்த கரத்தில் வைரமணி போல்
மேனகைத் தாடி முகத்தைத் திருப்பினான்
உன் தந்தை!

ராஜ சபையில் ஒரு நாள்
பச்சை நரம்போடும் அரசிலை வயிற்றில்
பரத புத்ர ரத்தினம் சுமந்து
திரையிட்ட கண்களுடன் - மோதிரமிழந்த
வெறும் கை பிசைந்து நீ நிற்கையிலும்
தரித்த மகுடத் தலைதிருப்புவான்
உன் காதலன்!

ஆயினும் வெட்க அபிநயம் இழைய
வரைவ தென்னடீ!
காதல் லிகிதமோ?

காளிதாசனின் மானசிக புத்ரியே!
வசந்த உற்சவத்துக்கு
முதல் தாம்பூலம் வாங்கி
இலையுதிர் காலத்தில் வாய்
கொப்புளித்து உமிழும்
விசுவ எத்தர்களும்
துரோக துஷ்டந்தர்களும்
இன்னும் எங்களில் இருக்கின்றார்கள்
ஆனால் எமது சகுந்தலைகள்
இப்போது தொலைப்பது
மோதிரங்களை அல்ல! - பொருந்தாத
காதலரை!

❉❉❉



## எழில் முதல்வன்

### 6. வினைமுற்று வேண்டாத வீட்டுக் கவிதை

காலையி லெழுந்து
வாசல் தெளித்து
முதல்நாட் பாத்திரம்
முற்றத் துலக்கி
காப்பி கலந்து
அனைவர்க்கும் அளித்து....

குழந்தைகள் மூன்றைக்
குளிப்பாட்டி விட்டு
உடைகள் பூட்டி
ஒப்பனை செய்து
பாசத்தோடு பள்ளிக்கனுப்பி....

கூட்டு பொரியல்
குறைவற முடித்து
மதிய உணவும்
மனதறிந்து நிறைத்து
கலத்தை வைத்துக்
காத்திருந்து நின்று...

காலை உணவு
கணவர்க்குப் படைத்து
நாலுபேர் ஆடையைத்
தானே துவைத்து
குளித்துமுழுகி
வழிபாடு முடித்து.....

ஓரிரு கவளம்
உண்டு பொருட்களை
ஒழுங்குபடுத்தி
ஒவ்வொன்றாய் வைத்து...

4. தமிழுக்கு நிறமுண்டு
5. இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல
6. இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்
7. சிற்பியே உன்னை செதுக்குகிறேன்
8. இதனால் சகலமானவர்களுக்கும்
9. இதுவரை நான்
10. கொஞ்சம் தேனீர் நிறைய வானம்
11. பெய்யென பெய்யும் மழை
12. நேற்று போட்ட கோலம்
13. ஒரு போர்க்களமும் இரண்டு பூக்களும்
14. ஒரு மௌனத்தின் சப்தங்கள்

**நாவல்கள்**

1. தண்ணீர் தேசம்
2. கள்ளிக்காட்டு இதிகாசம்
3. கருவாச்சி காவியம்

**விருதுகள்**

1. சாகித்ய அகாதமி விருது
2. தேசிய விருதுகள் - 6
3. கலைமாமணி விருது
4. பத்மஸ்ரீ

## 8. காந்தியம்

நீந்திவந்த நெருப்பலைக்குள் நின்று குளிர்ந்துவிட்ட
காந்திமகான் எங்கள் கனவிருட்டின் வெளிச்சநிலா!

அடைக்கோழி போல்நம்மை அணுவணுவாய் ஆதரித்தான்
நடைப்பிணங்கள் உயிர்வாழ ஞானமகன் உயிர்துறந்தான்

மகரந்தப் பூந்தேவன் மனிதகுலம் வாழுதற்கு
ரகசியத்தை வெளிப்படுத்தி ரத்தத்தில் புதைந்துவிட்டான்



# அலகு – II
# செய்யுள்

## புவியரசு

### 7. தந்தை மகற்காற்றும் உதவி....

இதைப் பார் மகனே!
மனதில் பதிய வைத்துக் கொள்!
எதற்கும் படமெடுத்துக் கொள்!

இது மண் சாலை அன்று,
ஒரு காலத்தில்
நீரோடிக் கொண்டிருந்த
உனது நதி....

நீ அமெரிக்காவுக்கு
சம்பாதிக்கப் போயிருந்தபோது
இதை விற்று விட்டார்கள்.

என்னை அவர்கள் கேட்கவே இல்லை.
நான் காய்ச்சலில்
படுத்திருந்தபோது நடந்திருக்க வேண்டும்.

உன் அம்மா சொல்லித்தான்
தெரிந்தது,
ஆற்றங்கரையில் குளிக்கப் போனபோது
அது காணாமற் போனதைக்
கண்டுகொண்டு வந்து சொன்னாள்.
சந்தேகமே படவேண்டியதில்லை
கொஞ்சம் இறங்கி நடந்து பார்!

காலில் இறந்தகால ஈரம் தெரியும்.

நன்றாகப் பார்த்துப் படமெடுத்துக் கொள்.
வருங்கால வரலாற்று
ஆவணப் பதிவுக்குப் பயன்படும்.

மகனே, அதோ,
அந்த மலையைக் கூடப்
படம் பிடித்துக்கொள்!



அதுவும் நீ அடுத்தமுறை
வரும்போது இல்லாமற் போகலாம்!

இந்தப் பாழுங் கிணற்றையும்
படம் பிடித்துக் கொள்
பிளாஷ் போட்டு.

அன்பு மகனே, குறிப்பாக
இந்த மரத்தை விட்டுவிடாதே!

இதுதான்
நமது ஊர் விவசாயிகள்
தூக்குப் போட்டுக் கொள்வதற்காக
ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

❇❇❇

## கவிஞர் வைரமுத்து

*தேனி மாவட்டம் பெரியகுளம் அருகில் உள்ள வடுகப்பட்டியில் ஜுலை 13-1953ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் இராமசாமி - அங்கம்மாள். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்றார். 1980ல் "நிழல்கள்" திரைப்படத்தில் "இது ஒரு பொன்மாலைப் பொழுது" எனத் தொடங்கும் பாடலை முதன்முதலில் இயற்றினார். இவருடைய மனைவியின் பெயர் பொன்மணி. இவருக்கு மதன் கார்க்கி, கபிலன் என இரு மகன்கள்.*

*புகழ்ப்பெற்ற தமிழ்த்திரைப்பட பாடலாசிரியர், கவிஞர். சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதை ஆறு முறை பெற்றுள்ளார்.*

**படைப்புகள்**

**கவிதைத் தொகுப்புகள்**

1. *வைகறை மேகங்கள்*
2. *சிகரங்களை நோக்கி*
3. *திருத்தி எழுத்தி தீர்ப்புகள்*

எங்கள் குதிரையிலிருந்து
அவர்கள்
இறங்கினார்கள்.

☆☆☆

இழந்த குதிரையை
அடைந்து விட்டோமென்ற
எக்களிப்போடு
பாய்ந்தேறி அதன்மீது
பயணம் தொடங்கினோம்.

☆☆☆

காலங்கள் கொஞ்சம்
கடந்த பிறகு
எங்கள்
முதுகெலும்புகள்
முறியத் தொடங்கின.

காரணம் தெரியாமல்
கலங்கினோம்.

☆☆☆

கூட்டங்கள் போட்டோம்
மாநாடு கூட்டினோம்
எலும்புகள் முறிகிற
சத்தம்
காதில் விழாதபடி
கைதட்டினோம்.

☆☆☆

கடைசியில் ஒரு வழியாகக்
கண்டு பிடித்தோம்:

குதிரையின் மீது
நாங்கள்
சவாரி செய்யவில்லை...



எங்கள் மனக்கடலில் எண்ணப் படகுவிடும்
தங்க மணித்தலைவன் தாங்கிநின்ற தத்துவமே!

மேலான விடுதலைக்கு மெத்தைகட்டித் தந்துவிட்டுத்
தூளான எலும்புமகன் சொல்லிவைத்த சுவைப்பாட்டே!

சமுதாய வேள்வியில்நீ சத்தியத்தின் தீக்குளிப்பு!
அமுதான நிலவின்மேல் அசைகின்ற பூக்களிப்பு!

ஆனால் இன்று...

காந்தியம் இன்றென்ன காலைநிலாச் சிந்தனையா?
பூந்தேனைச் சிதறுகின்ற பொன்வீட்டுத் தோரணமா?

இல்லை... இல்லை...

சாம்பல் கனவுகளின் சந்திப்பு மாநாடு!
தேம்பி அழுவதற்குத் தேர்ந்தெடுத்த தீமேடு!
அரசியலின் நாடகங்கள் ஆடுகின்ற பொதுமேடை!
விரக்திமழை பொழிகின்ற வெப்பமனக் கடுங்கோடை

மனிதமனச் சாதியிலே மங்கிவிட்ட மௌனமதம்!
தனிமனிதத் தோட்டத்தில் சாய்ந்துவிட்ட வேதமரம்!

இங்கேநம் வாய்க்கரையில் எச்சில் நதிக்குள்ளே
நங்கூரம் இட்டுவைத்த நாக்குக் கப்பல்கள்
தாங்கிப் பிடித்திருக்கும் தத்துவத்துச் சுமைமூட்டை!
நாங்கள் இப்பொழுது நடத்துகின்ற நரிவேட்டை!

இருட்டைச் சுமக்கின்ற எம்நாட்டுச் சேரிகளின்
வருத்தங் களைகின்ற மாக்குற்றம் செய்ததனால்
நாடுகடத் தப்பட்ட நம்நாட்டுப் பழம்பாட்டு
கேடு முடியுமுனம் கிழிந்துவிட்ட பழஞ்சீட்டு!

நெஞ்சில் விழுந்துவிட்ட நெருப்புத் துகளினையே
பஞ்சில் துடைத்துவிடப் பார்க்கின்றோம் தாயகமே!

காந்திக்குக் கல்லறையைக் கட்டி கொடுத்தகைகள்
காந்தியக் கல்லறையும் கட்டி முடித்தனவே!

கண்பரப்பில் எழுதிவைத்த காந்தியமே! நீதானா
கண்ணீர்க்கு ஆளானாய்? கனவுகளின் சுவடானாய்?

பூந்தாது தரும்மலரே புதைமேட்டுச் சருகானாய்?
காந்தியத் திரௌபதியின் கருத்துத் துகிலுரியும்
துச்சா தனரையிங்கு தோள்கிழிக்க ஆளிலையோ?
அச்ச நதிகளிலே ஆபத்தின் அலையொலியா?

கண்ணீரின் சுவடுகளின் கனவுகளின் ஊர்வலமாய்ப்
பொன்வனத்துப் புதுப்பூக்கள் புதைந்தழிய விடுவோமா?

சேரிச் சுடுகாட்டில் சிக்கிவிட்ட உயிர்ப்பிணங்கள்
மாறும் மனிதனுக்கோ மௌனத்தின் நித்திரைகள்

சமுதாயம் விடுதலையைச் சந்திக்க வேண்டுமெனில்
அமைதி தரும் காந்திவழிக்(கு) அடிமைகளாய் நாமிருப்போம்.

❊❊❊

## மு. மேத்தா

*பெரியகுளத்தில் 1945இல் முகமதுவாவா - அமீதாபீவி அவர்களுக்கு மகனாகப் பிறந்தார். தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். வானம்பாடிகளுள் முன்னணிக் கவிஞர்.*

*நானூறுக்கு மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார். தமிழக அரசின் பாவேந்தர் விருது, கலைமாமணி விருது, இலக்கிய வேந்தர் விருது ஆகியவற்றைப் பெற்றவர். இவருடைய 'ஊர்வலம்' கவிதைத் தொகுதிக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது. இவருடைய வரலாற்றுப் புதினம் 'சோழ நிலா' ஆனந்த விகடன் பரிசு பெற்றது.*

*கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம் மனச்சிறகு, அவர்கள் வருகிறார்கள். முகத்துக்கு முகம், நடந்த நாடகங்கள், காத்திருந்த காற்று, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், நந்தவன நாட்கள், என்னுடைய போதி மரங்கள், ஒற்றைத் தீக்குச்சி, மனிதனைத் தேடி ஆகியன இவரது குறிப்பிடத்தக்க கவிதைத் தொகுப்புகளாகும்.*

*இவரது கவிதைகள் ஆங்கிலம், இந்தி, மலையாளம் ஆகிய பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மலேசியா, சிங்கப்பூர், ஈழம், அமெரிக்கா, துபாய், ஐக்கிய அரபு, எமிரேட் ஆகிய நாடுகளில் தமிழ்ச்சங்கங்களில் சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.*

### 9. சுதந்திரக் குதிரை

எங்களிடமொரு
குதிரை
இருந்தது.
நாங்கள்
அயர்ந்த சமயத்தில்
வந்த
அன்னியர்கள்
அதை
அபகரித்துக் கொண்டார்கள்.

சுலபமாக
வசப்பட்ட குதிரை
அவர்கள்
சொன்னபடி கேட்டது.

அப்போது நாங்கள்
மயக்கத்தி லிருந்தோம்.

☆☆☆

கண்ணீரைத் தெளித்தே
மயக்கத்தைக் கலைத்தோம்
எங்கள்
குருதியைச் சொரிந்தே
ஒரு
யாகத்தை வளர்த்தோம்!

☆☆☆

செங்கோட்டையில்
எங்கள் கொடி
ஏறியபோது....

ஆறாவது அறிவு என்பது
கிறுக்குத்தனமா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
அரசியல் கலையைக்
கண்டுபிடித்தவன்
ஆறாவது அறிவு என்பது
வஞ்சக வலையா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
சகமனிதனின்
காலில் விழுந்து வணங்குபவன்
ஆறாவது அறிவு என்பது
சுயமரியாதையின் கல்லறையா?

உயிரினங்களில்
மனிதனைத் திருத்தத்தான்
தூதர்களும்
அவதாரங்களும்
வேதங்களும்
நீதி நூல்களும்
தேவைப்படுகின்றன

ஆறாவது அறிவு என்பது
நோயா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
ஆறாவது அறிவைப்
பெற்றிருக்கிறான்
அதற்காக அவன் பெருமைப்படுகிறான்.

❆❆❆



எங்கள் மீதுதான்
அது
சவாரி செய்கிறது
என்று!

❆❆❆

## அப்துல் ரகுமான்

*அப்துல் ரகுமான் 1937ல் பிறந்தார். இவர் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புதுக் கவிதையாளர். மரபிலும் தோய்ந்தவர். வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர். பால்வீதி, தீபங்கள் எரியட்டும் முதலிய ஏழு புதுக்கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.*

*5 கட்டுரைத் தொகுப்புகளையும், 2 ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.*

*இவரது முனைவர்ப் பட்ட ஆய்வேடான "புதுக்கவிதையின் குறியீடு" சிறந்த நூலாகப் போற்றப்படுகிறது.*

*எழுதுகோலை ஆறாவது விரலாகப் பெற்ற இவர்தம் ஏழாவது கவிதைத்தொகுப்பான "ஆலாபனை" 1998ல் சாகித்திய அகாடமி விருது பெற்றது. "கவிக்கோ" என அழைக்கப் பெறும் இவர், "கவிக்கோ" என்ற இதழையும் நடத்தி வருகிறார்.*

*இவரது நடை எள்ளலும், துள்ளலும் கருத்தாழமிக்க படிமக் கவிதையாகவும் காட்சியளிக்கும்.*

*இவரது படைப்புகள் சில : 1. பசி எந்த சாதி 2. காற்று என் மனைவி 3. முட்டைவாசிகள் 4. நேயர் விருப்பம் 5. உறங்கும் அழகி 6. சுட்டுவிரல் 7. சொந்த சிறைகள் 8. அவளுக்கு நிலா என்று பெயர் 9. தொலைபேசிக் கண்ணீர் 10. பூப்படைந்த சப்தம் ஆகியன.*

### 10. ஆறாத அறிவு

உயிரினங்களில்
மனித மட்டும் தான்

ஆறாவது அறிவைப்
பெற்றிருக்கிறான்
அதற்காக அவன் பெருமைப்படுகிறான்.

ஆனால்....

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான் கவலைப்படுகிறான்
ஆறாவது அறிவு என்பது
அவன் சுமக்கும் சிலுவையா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான் அழுகிறான்
ஆறாவது அறிவு என்பது
காயமா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
வார்த்தைகளால்
காயப்படுத்துகிறான்
ஆறாவது அறிவு என்பது
வேட்டை வில்லா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான் திருடுகிறான்
ஆறாவது அறிவு என்பது
கன்னக்கோலா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
பாவம் செய்கிறான்
ஆறாவது அறிவு என்பது
சாத்தானின் எச்சிலா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான் பிச்சை எடுக்கிறான்
ஆறாவது அறிவு என்பது
தரித்திரமா?



உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
சுரண்டிப் பிழைக்கிறான்
ஆறாவது அறிவு என்பது
அநியாயத்தின் கருப்பையா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
கொலைக் கருவிகளைக்
கண்டுபிடித்தான்
ஆறாவது அறிவு என்பது
கொடூரத்தின் விளைநிலமா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
கடவுளின் பேரால்
சண்டை போடுகிறான்
ஆறாவது அறிவு என்பது
கண்ணை மூடும் இருளா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
பாலுணர்வையும்
பிரச்சினையாக்கிக் கொண்டவன்
ஆறாவது அறிவு என்பது
சிக்கல் விழுந்த நூலா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
சக மனிதனைத்
தீண்டத்தகாதவன் என்றவன்
ஆறாவது அறிவு என்பது
மாறு கண்ணா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
பூமியில் கோடுகள் கிழித்துப்
பகைமை பாராட்டுபவன்

சிறியகண் ணாடி மீதில்
ஊதிடும் ஆவி போன்று
மறைந்திடும் உலர்ந்த மண்ணில்

விண்வெளி இவ்வை யத்தின்
விரிகுடை புவியில் வாழும்
பெண்களின் கண்கள் இட்ட
பிச்சையே கடலின் நீலம்
பண்கடல் உண்டே யன்றிப்
பாற்கடல் இருந்த தில்லை
உண்டெனில் கதையி லின்றி
உலகினில் காட்டு வார்யார்?

விரிகடல் வழங்கும் முத்தே
மேகமும் வழங்கும் முத்தே
திரைநுரை நீரின் நோயே
நிறுநிலாத் தழும்பும் நோயே
கருங்கடல் உடலும் உப்பே
காதலர் உறவும் உப்பே
விரிந்தநீர் நெய்தல் நீரே
விரிகடல் பெயர்முந் நீரே!

அணிமணிக் கடலின் காட்சி
அரும் பொருட் காட்சி யாகும்
துணையொடு கப்பல் நிற்கும்
துறைமுகம், சுற்றம் சூழ
மணவறை மீது தோன்றும்
மங்கையைப் போன்ற தாகும்
கணவனை இழந்த பெண்ணும்
கலமற்ற கடலும் ஒன்றே!

அலையோசை சிறந்த ஓசை
ஆதலின் அதனை யன்றிப்
புலியோசை பூசை யோசைப்
போர்க்களம் வழங்கும் ஓசை
எலியோசை இவற்றை யெல்லாம்



## பொன்மணி வைரமுத்து

*12-வது வயதில் இசைப்பாடல்கள் எழுத ஆரம்பித்தவர். மலைவாசம், அவளுக்கு மேலே ஒரு வானம், இரண்டு நாவல்களும் பொன்மணி வைரமுத்து கவிதைகள். மீண்டும் சரஸ்வதி என்னும் முழு கவிதைத் தொகுதி வந்துள்ளது. சங்க இலக்கியத்தில் புதுக் கவிதைக் கூறுகள் என்ற ஆய்வு நூலை எழுதியவர். தொடர்ந்து வெகுஜன இதழ்களில் எழுதி வருபவர்.*

### 11. தாய்ப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்!

இல்லாண்ட பெண்ணாள் மணித்தாயே! உன்
தாய்மை மண்ணிற்குத் தனிக்காப்பு!

கருத்தாங்கி மகவைக் கண்மணியாய்க் காத்திருந்து
தானே வளர்க்கின்ற தாய்மைக்குப் பல்லாண்டு!

உருத்தாங்கி வந்தமகன் ஒருநூறு பிழைசெயினும்
உயிர்கொடுத்துக் காக்கின்ற உயர்ந்தவளே பல்லாண்டு!

வருத்தம் பலஉறினும் வயிற்றில் பிறந்த உயிர்
வாடாமல் ஆளாக்கும் வல்லவளே பல்லாண்டு!

அருத்தம் தன்வாழ்வில் மகப்பேறால் வந்ததென்று
ஆனந்தம் கொண்டாடும் அன்னைக்குப் பல்லாண்டு!

கள்ளிப்பால் ஊற்றிக் கருவழிப்பார் மத்தியிலே
பெண்மகவைக் கொண்டாடும் தாய்மைக்குப் பல்லாண்டு!

பிள்ளைப்பால் ஊட்டுதற்குப் பிறபால் பிழையென்று
தாய்ப்பால் ஊட்டுகின்ற தாய்மைக்குப் பல்லாண்டு!

துள்ளிவரும் பிள்ளைக்குத் தொட்டிலிட்டுத் தாலாட்டுத்
தானே பாடுகின்ற தாய்க்கிங்கு பல்லாண்டு!

வெள்ளிப்பால் நிலவை வேடிக்கை காட்டியிங்கு
வீரக் கதைசொல்லும் அன்னைக்குப் பல்லாண்டு!

பதவிபல பெறினும் விருதுபல உறினும்
பாசம் கனிந்திருக்கும் தாய்மைக்குப் பல்லாண்டு!

நிதமும் புகழ் பெறினும் நிர்வாகம் மேற்கொளினும்
நேசம் நிறைந்திருக்கும் நித்திலமே பல்லாண்டு!

அதிகாரம் கொண்டு அகிலம் வளர்த்திடினும்
அன்பு வளர்த்திருக்கும் அன்னைக்குப் பல்லாண்டு!

அதிகாரம் கொண்டு அகிலம் வளர்த்திடினும்
அன்பு வளர்த்திருக்கும் அன்னைக்குப் பல்லாண்டு!

புதியதோர் உலகம் உருவாக்கும் போதினிலும்
பொறுமை காத்திருக்கும் தாய்மைக்குப் பல்லாண்டு!

எந்திர யுகத்தில் எத்தனையோ பணிநடுவில்
இதயம் தொலைக்காத தாய்மைக்குப் பல்லாண்டு!

இந்திர லோகத்து ஏற்றங்கள் வந்தாலும்
பிள்ளைவரம் பெரிதென்னும் பெரியவளே பல்லாண்டு!

வந்தனை செய்தாலும் நிந்தனை செய்தாலும்
வாரிசை வாழ்த்துகின்ற அன்னைக்குப் பல்லாண்டு!

இந்திய மண்மகிமை எத்திசையும் உயரக்
காரணமாயிருக்கும் கருணைக்குப் பல்லாண்டு!

❉❉❉

## சுரதா

*இவர் நாகை மாவட்டம் பழையனூரில் பிறந்தார். இவர் பிறந்த ஆண்டு 1921. இவரது பெற்றோர் திருவேங்கடம், செண்பகம். இவரது இயற்பெயர் ராஜகோபால். பாவேந்தர் மேல் கொண்ட ஈடுபாடு காரணமாகச் சுப்புரத்தினதாசன் எனத் தம்மை அழைத்துக் கொண்டவர். அடிக்கொரு உவமை இவர் பாடலில் இயல்பாக அமையும். எனவே எழுத்தாளர்*



*ஜெகசிற்பியன் இவருக்கு 'உவமைக் கவிஞர்' என்ற பட்டத்தைச் சூட்டினார். பாரதிதாசனின் உதவியாளராகப் பணியாற்றினார். அவரது நாடகங்களில் நடித்தார். 1969இல் இவரது முதல் கவிதைத் தொகுப்பு தமிழக அரசின் பரிசைப் பெற்றது. 1973 இல் தமிழக அரசின் இயல், இசை, நாடகத் துறைக்கான கலைமாமணி பட்டத்தைப் பெற்றார்.*

*1978ல் பாவேந்தர் பாரதிதாசன் விருது இவருக்கு வழங்கப்பட்டது. சிங்கப்பூர், மலேசியா, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இலக்கியப் பயணம் மேற்கொண்டுள்ளார். இவர் மொத்தமாகப் பாடிய பாடல்கள் ஏறத்தாழ 5000 ஆகும்.*

## 12. நெய்தல் நீர்

தமிழ்மொழிக் குதவும் செல்வம்
தானாக வளர்தல் போலும்
கமழ்நறு மணத்தைப் பூக்கள்
கருவிலே பெற்றாற் போலும்
இமிழ்கடல் வயிற்றின் வெள்ளம்
இயற்கையாய்ப் பெருகும் வானின்
அமிழ்தமாம் மழைநீர்க் கெல்லாம்
அடிப்படைக் கடல்நீர் அன்றோ!

அலைவளர் கடலே ஆழம்
அலைகளே அதன்கைத் தாளம்
கலம்பகக் கடலின் செல்வம்
கைவிரல் தொகைபோல் ஐந்தே
மலைபடு பொருள்கள் யாவும்
மலர்போன்று மணத்தை வீசும்
ஒலிகடல் வழங்கும் செல்வம்
ஓங்கிய ஒளியை வீசும்

ஆதி நீரான முந்நீர்
அச்சத்தைக் கொடுக்கும் தண்ணீர்
பாதிநீர் காற்றை மோதும்
பாதிநீர் கரையை மோதும்
சீதநீர்த் துளிகள் எல்லாம்

# 1. மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து

**- வல்லிக்கண்ணன்**

மூக்கப்பிள்ளையின் மனசாட்சி திடீரென்று உறுத்தல் கொடுக்க ஆரம்பித்தது.

அது அப்படி விழிப்புற்று அரிப்புத்தருவதற்குப் பத்திரிகைகளில் வந்த சில செய்திகள் தான் காரணமாகும்.

சுகமாய் சவாசனம் பயின்று கொண்டிருக்கிற மனசாட்சி சிலபேருக்கு என்றைக்காவது திடும்விழிப்புப் பெற்று, குடை குடை என்று குடைந்து, முன் எப்பவோ பண்ணிய பாபத்துக்கு - அல்லது தவறுக்கு - பரிகாரமாக இருப்பது செயல்புரியும்படி தூண்டித் துளைப்பது ஏனோ தெரியவில்லை. மனித மனம், மனசாட்சி என்பதெல்லாம் விசித்திரமான தத்துவம் என்றோ எளிதில் விளங்கிக் கொள்ள முடியாத புதிர் என்றோதான் எண்ண வேண்டி இருக்கிறது. மூக்கப்பிள்ளை அப்படித்தான் நினைத்தார்.

“வடக்கே ஒரு ஊரில்” எவனோ ஒருவன் எப்பவோ ஒரு காலத்தில் ரயிலில் டிக்கெட்டு வாங்காமலே பிரயாணம் செய்திருந்தானாம். பலப்பல வருடங்களுக்குப் பிறகு இப்போ அவன் தனது தவறை உணர்ந்து வருத்தப்பட்டு ரயில் கட்டணமும் அபராதத் தொகையும் சேர்த்து ரயில்வே நிர்வாகத்துக்கு அனுப்பி நல்ல பேரும் பத்திரிகைப் பிரபலமும் பெற்றுக் கொண்டான்.

தெற்கே ஒரு நபரும் அதே மாதிரி மனசாட்சியின் தொந்தரவுக்குப் பணிந்து எந்தக் காலத்திலோ இலவசமாகச் செய்திருந்த பிரயாணத்துக்கு உரிய பணத்தையும் அதற்கான வட்டியையும் சேர்த்து ரயில்வேக்கு அனுப்பி வைத்தான் இதுவும் பத்திரிகைச் செய்திதான்.

இவையும் இவை போன்ற வேறு சில தகவல்களும் மூக்கப் பிள்ளையின் கவனத்தைக் கவர்ந்து, மனத்தில் ஆழமாய்ப் பதிந்து, உள்ளூற வேலை செய்யலாயின.

“தன்னெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்தபின் தன்னெஞ்சே



யாப்புநூல் ஏற்கவில்லை
கலையாத கடல் நீர் ஓசை
கலிப்பாவின் ஓசையன்றோ?

உரையிடை யிட்ட செய்யுள்
ஓவியச் சிலம்பு தந்தோன்
நரைதிரை வாரா முன்பே
நாட்டிலோர் துறவி யானான்
விரிகடல் பிறந்த போதே
வெண்நரை பெற்றி ருந்தும்
கருநிற உடைமை மாற்றிக்
காவியேன் கட்ட வில்லை?

கிளம்பிற்குக் கப்பல், வீரர்,
கிளம்பினர், அவர்க ளோடே
இளம்பெரு வழுதி சென்றான்
என்னானான்? உலகின் வீரம்
அளந்தவன் கடலுள் மாய்ந்தான்!
அனைவரும் வெறும்கூ டானார்
விளம்பரக் கடலின் கோபம்
விட்டதோ முச்சங் கத்தை!

பொடிமணல் உலகைச் சூழ்ந்த
போர்க்கடல், மாந்தர் தன்மை
வடிந்திடா நீரி னாலே
வஞ்சிக்கும் அதுபோல் வண்ணக்
கொடிநமை வஞ்சிக் காது
கொல்லாதென் றறிந்தும்: நாமோ
கொடியினை யன்றோ வஞ்சிக்
கொடியென்று கூறுகின்றோம்.

❈❈❈

# அலகு – III

# சிறுகதை

விசேஷம் வரப்போகுது. நாம ஊர் கூட்டிச் சாப்பாடு போடப் போறோம்' என்று அவர் எண்ணினார்.

ஆனாலும் போகப் போக அவருடைய மனமும் ஆட்சேபிக்கவில்லை. மூக்கப்பிள்ளையும், 'ஊர் வழக்கங்களை வாங்கி அனுபவித்துக் கொண்டிருந்தார்'.

இப்போது அவருடைய மனசாட்சி உதைத்துக் கொண்டது. தொந்தரவு கொடுத்தது.

முந்திய தினம் ஒரு வழக்கம் வந்தது. வசதியான வீடு. 'மறுவீடு வீட்டுப் பலகாரம்' என்று நிறையவே கொடுத்து அனுப்பியிருந்தார்கள். இனிப்புகளும் காரங்களுமாய் வகை வகையான தின்பண்டங்கள்.

'எனக்கு வேண்டாம்; இனிமே நான் ஊர் வழக்கத்தை வாங்கப் போறதில்லே' என்று அறிவித்தார் மூக்கப்பிள்ளை.

'இதென்ன புது வழக்கம்? எப்பவும் போலே வாங்கி வையுங்க. பலகாரமெல்லாம் தினுசு தினுசாயிருக்கு; சும்மா சாப்பிடுங்க. நான் வேணும்னா காப்பி போட்டுத் தரட்டுமா?' என்றாள் அதைக் கொண்டு வந்தவள். அவள் கொஞ்சம் வாயாடி.

அங்கே அப்படி, இங்கே இப்படி என்று வாயடி அடித்து, கொண்டு வந்ததை அவருக்கே விட்டு விட்டுப் போனாள்.

அதுமுதல் அவர் மனம் அரித்துக் கொண்டேயிருந்தது.

இதெல்லாம் 'வட்டி இல்லாக் கடன்' என்பாக, இப்ப ஒருத்தர் செய்தா, மற்றவர் பிறகு எப்பவாவது திரும்பச் செய்யணும். அவர் இல்லாவிட்டாலும், அவர் பேரைச் சொல்லி அவருடைய மகனோ மகளோ பேரப்பிள்ளைகளோ செய்வாங்க. எதுவுமே செய்யாத என் போன்றவர்கள் - நானாக எதுவும் ஊருக்குச் செய்யப் போவதில்லை. எனக்குப் பிறகு என் பேராலே செய்றதுக்கும் யாருமில்லை. அப்படி இருக்கையிலே ஊர் வழக்கங்களை வாங்கி அனுபவிப்பது எப்படி நியாயம் ஆகும்?

ஒருத்தர் இல்லாவிட்டால் இன்னொருவர் எப்பவாவது பழிச்சொல் உதிர்ப்பாங்க. பொம்பிளைகள் சில சமயம் வகையாப் பேசுறதும் வழக்கமாகத்தானே இருக்கு - நாங்க



தன்னைச் சுடும். திருவள்ளுவர் பெரிய ஆளு தான் சரியாத்தான் சொல்லி வச்சிருக்காரு" என்று அவர் எண்ணிக் கொண்டார்.

ஆனா இந்த நெஞ்சு அதாகப்பட்டது மனசாட்சி, ஏன் உடனுக்குடனே சுடுவதில்லை? அநேகம் பேருக்குச் சுடுவதே இல்லை போல் தெரியுதே! சில பேருக்கு மட்டும் குழிப்பிள்ளையை எடுத்து மடியிலே வச்சு அழுகிற கணக்கிலே, அதுவும் புள்ளை மக்கி மண்ணாகி எலும்புகள் கூட உருமாறிப் போவதற்குப் போதுமான காலம் ஆகிவிட்ட பிறகு, தன்னெஞ்சறிவது பொய்த்ததற்காக இத்தன்னெஞ்சு திடீர்ச்சுடுதல் பண்ணுவானேன்?....

இந்த ரீதியிலே மூக்கப்பிள்ளையின் மனத்தின் ஒரு பகுதி எண்ண வளையங்கள் அதிரப் பண்ணவும், 'சீ மூதி, நீ சும்மா கிட!' என்று அவர் அதன் மண்டையில் ஓங்கி அடித்தார்.

மூக்கப்பிள்ளை டிக்கட் வாங்காமல் பிரயாணம் செய்ததில்லை. அவர் அதிகமாகப் பயணம் போனதே கிடையாது. அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம் என்கிற மாதிரி, அவருக்குச் சொந்த ஊரான சிவபுரம்தான் சொர்க்கம் ஆகும்.

பரபரப்பு மிகுந்த கடைகளில் சாமான்கள் வாங்கிவிட்டு, பில்படி பணத்தைக் கொடுக்காமல் அவர் நைசாக நழுவியதில்லை அல்லது நோட்டுக்குச் சில்லறை கொடுக்கிறபோது ஓட்டல்காரனோ ஷாப்காரனோ அல்லது வேறு எவனுமோ கவனப்பிசகாக அதிகப்படியாக ஒரு ரூபா ரெண்டு ரூபா தாள்களைக் கொடுத்து விடுகிறபோது, நம்ம அதிர்ஷ்டம் என்று எண்ணி அதை அமுக்கிக் கொண்டு வந்ததில்லை அவர். நின்று, பில்படி பணம் இவ்வளவு; பாக்கி இவ்வளவு தான் உண்டு; ஆனால் தரப்பட்டுள் தொகையோ இவ்வளவு இருக்கு என்று எடுத்துச் சொல்லி அதிகப்படியாக வந்ததைத் திருப்பிக் கொடுத்து விட்டுத்தான் அவர் வெளியேறுவார். "ஊரான் காசு நமக்கென்னத்துக்கு?" என்ற பாலிசி அவருடையது.

ஆகவே பொதுச்சொத்து எதையும் மூக்கப்பிள்ளை சுரண்டியதிலலை. தனிநபர் எவரையும் அவர் ஏமாற்றியதில்லை. பின்னே அவருடைய மனசாட்சி குரங்குத்தனம் பண்ணுவானேன்?

சுகவாசிகள் மிகுந்த சிவபுரத்தில் சுத்த சுயம்பிரகாசச் சுகவாசியாக வாழ்ந்த மூக்கப்பிள்ளை மற்றவர்களிலிருந்து கொஞ்சம் மாறுபட்டவராக நடந்து வந்தார். சமூக ஜீவியாக அவர் அந்த ஊரில் வசித்து வந்த போதிலும் சமூகத்தோடு ஒட்டி உறவாட விரும்பாதவர் போல் விலகியிருந்தார். சொந்தக்காரர்கள் வீடுகளுக்குப் போவதில்லை; மற்றவர்களோடு நெருங்கிப் பழகுவதில்லை; ஊர்ப் பொது விவகாரங்களில் அக்கறை கொள்வதில்லை; கோயில் திருவிழாக்கள், விசேஷ பூசைகள் போன்ற சந்தர்ப்பங்களில் ஊராரோடு சேர்ந்து கோவிலுக்குப் போவதில்லை; இப்படி எவ்வளவோ சம்பிரதாயங்கள் இல்லையா - அவற்றில் எதையுமே அவர் அனுஷ்டிப்பதில்லை.

ஆனால் ஊர் இழவு, ஊர் கல்யாணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அவசியம் - 'தலையைக்காட்ட வேண்டும்' என்ற சமூகநியதி வரையறை செய்துள்ள பொதுக்காரியங்களுக்கு வேண்டா வெறுப்பாக அவரும் போகத்தான் வேண்டியிருந்தது. அப்போது கூட 'பேருக்குத் தலையைக் காட்டி விட்டு வருகிற' வேலைதான். இன்னொருத்தன் வீட்டிலே கையை நனைக்கிற சோலியே கிடையாது. அதாவது விருந்துச் சாப்பாட்டில் பங்கு பற்றுவது இல்லை. ரொம்ப நேரம் இருந்து கலகலப்பாகப் பேசி, உற்சாகமாகச் சிலரைப் பரிகசித்தும் சிலரால் கேலி செய்யப்பட்டும் பொழுது போக்குவது என்பதெல்லாம் அவருடைய வாழ்க்கை நியதிக்கு அப்பால்பட்ட விஷயங்கள்.

ஊர் இழவு என்றால், சாவு வீட்டுக்குப் போவது, நீர்மாலையில் கூட்டத்தோடு கூட்டமாக வாய்க்கால் வரை போய் வருவது, பிணத்தைத் தூக்குகிற வரையில் இழவு வீட்டில் காத்திருந்து அப்புறம் பாடையோடு சுடுகாடு வரை போய் ஆக வேண்டியதை எல்லாம் முடித்துக் கடைசியில் ஆற்றில் குளித்துவிட்டுத் திரும்புவது என்பது தலைமுறை தத்துவமாகக் கையாளப்படுகிற வழக்கமாகும்.

வரவர சில சுகவாசிகள் இதையெல்லாம் ஒழுங்காகச் செய்வதில்லை. சும்மா தலையைக் காட்டி விட்டுத் திரும்பி விடுவார்கள். மூக்கப்பிள்ளையின் வழக்கமும் அதுதான்.

ஆனால் 'ஊர் வழக்கம்' ஒன்றை அவர் தட்ட முடியாமல் போயிருந்தது.



ஒரு வீட்டில் கல்யாணம் நடந்தால் பல தினங்களுக்குப் பிறகு 'நல்ல மாசத்துப் பழம்' என்று வாழைப் பழங்களும் சிறிது சீனியும் ஊர் பூராவுக்கும் வழங்குவார்கள். "மறு வீடு வீட்டுப் பலகாரம்" என்று மைசூர் பாகு, லட்டு மற்றும் சில இனிப்புத் தினுசுகள், முறுக்கு, மிக்ஸர் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் வைத்து சொந்தக்காரங்களுக்கு (சொக்காரங்களுக்கு) வழங்குவர். இது 'ஊர் வழக்கம்' ஆகும்.

பெரியவர் யாராவது இறந்து போனால், மகன் அல்லது பேத்தி ஊருக்கு 'கடலை போடுவது' வழக்கம். அரைப்படி கடலை - வசதி மிகுந்தவர்கள் 1 படி கடலை கூட - 'ஊர் வழக்கம்' ஆக உறவுக்காரர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைப்பார்கள்.

அநேகமாக எல்லா வீட்டாரும் இம்மாதிரி 'ஊர் வழக்கங்களைத் தட்டாமல் வாங்கிக் கொள்வார்கள்'. ஒன்றிரண்டு பேர்தான் 'நாங்கள் என்னத்தைத் திரும்பச் செய்யப் போகிறோம் எங்களுக்கு ஊர் வழக்கம் வேண்டாம்' என்று மறுத்து விடுவார்கள்.

மூக்கப்பிள்ளை ஒன்றிரு தடவைகள் மறுத்துப் பார்த்தார். 'வழக்கம்' கொண்டு வருகிற பெண்கள், "சும்மா வாங்கித்தின்னு வையிங்க. ஊர் வழக்கத்தை விடுவானேன்?" என்று கொண்டு வந்ததை அவர் வீட்டிலேயே வைத்துவிட்டுப் போனார்கள். அதன் பிறகு அவர் மறுத்ததில்லை. சடங்கு வீடுகளிலிருந்து 'சர்க்கரைப் பொங்கல் (பாச்சோறு)' வரும். கோயில் திருவிழாக்காலங்களில் புளியோதரை, பருப்புப் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், சுண்டல் பிரசாதம் வரும். கல்யாண வீட்டுப் பணியாரங்கள் வரும்.

''சும்மா சாப்பிட்டு வையிங்க'' என்று பெண்கள் தாராளமாகக் கொடுத்து விட்டுப் போனார்கள்.

இதை எல்லாம் வாங்குறமே நாம ஊராருக்கும் உறவுகாரங்களுக்கும் திருப்பிச் செய்ய சந்தர்ப்பம் வரவா போகுது? என்று அவர் மனம் ஆதியில் குறுகுறுத்தது. 'இதுக்காகவே, வசை இருக்கப்படாதுன்னே, நான் விசேஷ வீடுகளில் சாப்பிடுகிறது இல்லை. நம்ம வீட்டிலே என்ன

ஒன்பதே கால்...

திரும்பவும் ஆறுமுகத்தை அனுப்பி வைத்தார்.

சுகவாசிகள் மிகுந்த சிவபுரத்தில் விசேஷமான பழக்க வழக்கங்கள், கட்டுப்பாடுகள், எத்தனையோ உண்டு. ஒரு வீட்டில் விசேஷம், விருந்து என்றால் ஊரார் எதிர்பார்க்கிற சம்பிரதாயங்கள் பலவாகும்.

முதலில் விசேஷ வீட்டுக்காரரே நேரில் ஒவ்வொருவரையும் கண்டு விஷயத்தைச் சொல்லி அழைக்கவேண்டும். “சாப்பாட்டையும் நம்ம வீட்டிலே வச்சுக்கிடுங்க” என்று வற்புறுத்தவேண்டம். விசேஷ நாளுக்கு முதல் நாள் அழைப்புக்காரன் வீடு வீடாகப் போய், ‘நாளைக்கு இன்னார்’ வீட்டு விசேஷம் - தாம்பூலத்துக்கும் சாப்பாட்டுக்கும் அழைச்சிருக்கு’ என்று சொல்லிப் போக வேண்டும். அப்புறம் விசேஷத்தன்று சாப்பாட்டு நேரத்தில் “ஐயா, சாப்பாட்டுக்கு வாங்க, இலை போட்டாச்சு” என்று அறிவிக்க வேண்டும்.

சுகவாசி வருகிறாரோ வரவில்லையோ, அழைக்கத் தவறக்கூடாது. அழைப்பு விட்டுப் போனால் அதுபெரும் தவறாகக் கருதப்படும்.

ஊர் மரபு அப்படி இருக்கையில்

இந்த மூக்கப்பிள்ளை என்ன நெனச்சுப்போட்டான்? பெரிய லார்டு ரிப்பன் பேரனோ? வீட்டில் இருந்துகிட்டு ஆள் மூலம் சொல்லி அனுப்புவானாம் நாம் ஓடிப்போகணுமாம் சாப்பிடறதுக்கு! நாம என்ன சோத்துக்கு அலைந்துபோயா கிடக்கிறோம்? என்று கொதிப்புற்றனர் சிலர்.

“இந்த மூக்கப்பிள்ளை புத்தி போனதைத்தான் பாரேன். சித்ரா பௌர்ணமி.... நயினார் நோன்பு - வருஷத்திலே ஒரு நாள் விரதம் ஆச்சே? இட்லி, உப்புமா இப்படிச் சாப்பிடுவாங்களா? சோறு வகைகளைத் தின்னப் போவாங்களா?” என்றனர் சில பேர்.

‘அவன் யார் வீட்டு விருந்துக்கு வந்தான். நாம அவன் அழைச்ச உடனே அவன் வீட்டுக்குப் போகணும் என்பதுக்கு?’ என்று கேட்டார்கள் பலர்.



அதைச் செய்தோம், இதைச் செய்தோம் ஊர்க்காரங்க வயணமா வாங்கிச் சாப்பிட்டாங்க. இந்த ஊரு எங்களுக்கு என்ன செஞ்சுதுயின்னு நீட்டி முழக்குவாங்க...

சிலபேரைப் பற்றிச் சில சமயங்களில் அநேகர் பேசுவது உண்டே! ஊர் சாப்பாடுன்னு சொன்னா பந்திக்கு முந்தி வந்திருவான். வாய்க்கு ருசியா வழிச்சு வழிச்சுத் தின்பான். ஒரு கல்யாண வீடு கருமாதி வீடு எதையும் விட்டுவிட மாட்டான். அவன் வீட்டிலே இதுவரைக்கும் எந்த விசேஷமும் செய்ததில்லை. யாருக்கும் சாப்பாடு போட்டதில்லே. என்னத்தைச் செய்யப்போறான்? அப்படியே செய்தாலும், ரொம்பச் சுருக்கமாச் செய்து ஊர்ச்சாப்பாடு போடாம ஒப்பேத்திடுவான்.

இப்படி நினைக்க நினைக்க மூக்கப்பிள்ளையின் மனம் சங்கடப்படலாயிற்று.

‘என்னைப் பத்தியும் நாலு பேரு நாலைச் சொல்லத்தானே செய்வான்? இப்பவே யார் யாரு என்னென்ன பேசுறாங்களோ?’ என்று முணுமுணுத்தார் அவர்.

மூக்கப்பிள்ளை வீட்டில் விசேஷ என்று எதுவும் வந்ததில்லை. இனிமேல் செய்வதற்கு வாய்ப்பும் இல்லை.

‘நம்ம வீட்டில் கல்யாணம், கார்த்திகை, ஆண்டு நிறைவு, சடங்கு என்று எதுவும் நடக்கப்போவதில்லை. பெண்டாட்டிக்காரி இருந்தா, போன வருஷம் நமக்கு அறுபது வயது நிறைஞ்சதுக்கு சட்டிப்பரிதி (சஷ்டியப்பூர்த்தி) கொண்டாடியிருக்கலாம். அதையே ஒரு கல்யாணம் மாதிரி நடத்தி ஜாம் ஜாம்னு ஊரை அழைச்சுச் சாப்பாடு போட்டிருக்கலாம்.’

காலையிலே இட்லி பலகாரம். மத்தியானம் பாயசம், வடையோடு சாப்பாடுன்னு தடபுடல் பண்ணியிருக்கலாம். அதுக்குத்தான் கொடுத்து வைக்கலியே! இப்படி இருக்கையிலே ஊர் வழக்கத்தை மட்டும் வாங்கிக்கிட்டேயிருந்தால் என்ன அர்த்தம்? ஊருக்கு நாமளும் செய்யிறதா இருந்தால், சரீன்னு சொல்லலாம். அதுதான் இல்லைன்னு ஆயிட்டுதே! அப்புறம்? என்று அவர் ‘நெஞ்சோடு கிளத்தல்’ பண்ணினார்.

உறுத்திக் கொண்டே இருந்த மூக்கப்பிள்ளையின் மனசாட்சி பரிகாரமாக ஒன்று செய்யவேண்டும். ஊருக்கு நாமும் சிறிது பணம் செலவு பண்ணிக் கடனைத் தீர்க்கணும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

- என்ன செய்யலாம்.

அவருக்குத் 'திடீர்னு ஒரு ஐடியா' உதயமாயிற்று. ஊரை அழைத்து ஒரு விருந்து கொடுக்கலாம். சித்திரா பௌர்ணமிச் சிறப்பு விருந்து என்று காரணம் கூறலாம். சித்திரா பௌர்ணமி எல்லோருக்கும் முக்கியமான நாள். அன்று நயினார் (சித்திரபுத்திர நயினார்) நோன்பும் கூட. பௌர்ணமியின் போது உல்லாச விருந்து உண்பது மக்களுக்குப் பிடித்தமான விஷயம். சித்திரான்னங்களை உண்ண ரொம்ப பேர் பிரியப்படுவார்கள். சிவபுரம் வாசிகள் சித்திரா பௌர்ணமியன்று ஒரு சிறப்புச் சித்திரான்ன விருந்து உண்டு மகிழட்டுமே என்று எண்ணினார் அவர்.

இந்த எண்ணம் கிளைவீசி வளர வளர மூக்கப்பிள்ளைக்கு இருப்பு கொள்ளவில்லை. 'இதுதான் சரி' என்று குதித்தெழுந்தார். 'சக்கைப்போடு போட்டிருவோம்!' ஜமாய்ச்சுப் போடுவோம்' என்று சொல் உதிர்த்தபடி அங்குமிங்கும் நடந்தார். கைகளைத் தேய்த்துக் கொண்டார். தானாகவே சிரித்தார். "பேஷ் பேஷ் அருமையான ஐடியா!" என்று பாராட்டி மகிழ்ந்து போனார்.

முதல் வேலையாக மூக்கப்பிள்ளை செய்தது பஞ்சாங்கத்தைப் பார்த்து சித்திரா பௌர்ணமி என்று வருகிறது என்று கண்டுபிடித்ததுதான்.

பன்னிரண்டு நாட்கள் தான் இருந்தன.

பரவால்லே, அதுக்குள்ளே எல்லா ஏற்பாடுகளையும் முடித்துவிடலாம் என்று திருப்தி அடைந்தார் அவர்.

பிறகு காரியங்கள் துரிதமாக நடந்தன. நல்ல 'தவசிப் பிள்ளை இரண்டு பேரை வரவழைத்தார். தேவையான சாமான்களுக்கு பட்டியல் போட்டு அனைத்தையும் வாங்கித் தீர்த்தார்'.



மூக்கப்பிள்ளை எவருடனும் தாராளமாகக் கலந்து பழகுவதில்லை. ஆதலால் யாரும் அவர் வீட்டைத் தேடி வந்து பேசிப் பழகி "என்ன எது" என்று விசாரிப்பது கிடையாது.

இருப்பினும் மூக்கப்பிள்ளை என்னவோ பண்ணப்போறார் என்று மற்றவர்கள் யூகித்தார்கள். "அப்பாவி! என்னத்தையோ பண்ணிட்டுப் போறான்!'' என்று ஒன்றிருவர் கருத்து தெரிவித்தார்கள்.

மூக்கப்பிள்ளையும் தனது எண்ணத்துக்குத் தீவிர விளம்பரம் கொடுக்கத் தயாராக இல்லை, விருந்து அன்றைக்கு எல்லோருக்கும் சொன்னால் போதுமென்று நினைத்து விட்டார்.

'சித்திரா பௌர்ணமி மத்தியானம் விரதச் சாப்பாடு வீட்டிலேதான் சாப்பிடுவாங்க, ராத்திரிக்கு நம்ம சித்திரான்னச் சிறப்புச் சாப்பாடு. சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, எலுமிச்சம் பழச் சாதம், வடை, பூம்பருப்புச் சுண்டல்!' என்று திட்டம் தீட்டினார் அவர்.

அதன்படியே ஏற்பாடு செய்தார்.

காலையிலேயே 'அழைப்புக்காரன்' ஆறுமுகத்தைக் கூப்பிட்டு சிவபுரம் சுகவாசிகள் எல்லோர் வீட்டுக்கும்போய் "சித்திரா பௌர்ணமி சித்திரான்னச் சிறப்புச் சாப்பாடு" பற்றிச் சொல்லி, அழைக்கும்படி ஏற்பாடு.

வீட்டில் விளக்குகளை ஏற்றி வைத்துக்கொண்டு இலைகளை ரெடி பண்ணி வைக்கச் சொன்னார். ஆட்கள் ஏழுமணி முதல் தயாராக இருந்தார்கள்.

ஆனால், அழைக்கப்பட்ட நபர்களில் ஒருவர் கூட வரவில்லை.

மணி எட்டு... எட்டரை... ஒன்பது என்று ஓடியது. ஊகூம் ஒரு ஆளைக் கூடக் காணோம்.

மூக்கப்பிள்ளை மனம் குமுறிக் கொண்டிருந்தது. அவர் முகம் 'என்னமோ மாதிரி' மாறிவிட்டது. வீட்டில் அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தார்.

கொண்டிருந்த ஒரு சம்பவமும், அதைத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகளும் சம்பந்தமற்றது போலும், சம்பந்தமுடையன போலும் குழம்பின.

செட்டியார் வீட்டு அம்மாளை, பிரார்த்தனையை எண்ணியபோது, வீட்டை விட்டுக் கோபித்துக்கொண்டு வடக்கே வெகுதூரம் ஓடிப்போன அவள் மகனின் நினைவும் அவனுக்கு வந்தது.

இன்று அதிகாலையில், பூந்தோட்டத்துச் செடிகளுக்கு அவன் நீர்வார்த்துக் கொண்டிருந்தபோது பக்கத்தில் விம்மலும் அழுகையும் கலந்த பிரார்த்தனை கேட்டு அவன் திரும்பிப் பார்த்தபோது, மாணிக்கம் செட்டியாரின் மனைவி, குளித்து முழுகிய ஈரக் கோலத்தோடு கை நிறைய மஞ்சள் குவளை மலர்களை ஏந்திக்கொண்டு விநாயகர் சந்நிதியில் முழந்தாளிட்டு வேண்டிக் கொண்டிருந்தாள்.

என் அப்பனே.... விக்னேஸ்வரா... எனக்கு நீ குடுத்தது ஒண்ணுதான்.... அவன் நல்லாயிருக்கும்போதே என்னைக் கொண்டு போயிடு தெய்வமே!.... அந்தக் குறையும் பட்டு வாழ முடியாது அப்பனே!.... அவன் எங்கே இருந்தாலும் 'நல்லபடியாய் இருக்கேன்'னு அவன் கிட்டேருந்து ஒரு கடுதாசி வந்துட்டா வர வெள்ளிக்கிழமை உன் சந்நிதியிலே அம்பது தேங்காய் உடைக்கிறேன்...."

...தன்னையும், சூழ்நிலையையும் மறந்து அந்தத் தாய் அந்த நட்ட கல்லைத் தெய்ம் என்று நம்பிப் புலம்புவதைப் பூந்தோட்டத்துச் சாமியார் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தத் தள்ளாத சுமங்கலிக் கிழவியின் தாளாத ஏக்கம் - அவன் கண்களைக் கலக்கிற்று.

அவள் பிரார்த்தனை முடிந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்தபோது தன்னையே பார்த்தவாறு நிற்கும் பூந்தோட்டத்துச் சாமியாரைப் பார்த்தாள்.

''ரெண்டு நாளா ராத்திரியெல்லாம் தூக்கமில்லே சாமியாரே!.... நம்ம தம்பி இருக்கிற ஊர்லேதான் இப்ப கடுமையா சண்டை நடக்குதாம்; ஆஸ்பத்திரி மேலே எல்லாம் குண்டு



ஆறுமுகம் இதை எல்லாம் மூக்கப்பிள்ளையிடம் ரிப்போர்ட் பண்ணினான்.

தவசிப் பிள்ளைகளும் பரிமாற ரெடியாக நின்றவர்களும், பிள்ளையையும் சித்திரான்ன வகைகளையும் மாறி மாறிப் பார்த்தார்கள். இவ்வளவு ஏற்பாடுகளும் வீணாச்சுதே என்ற மனச்சுமை அவர்களுக்கு.

மூக்கப்பிள்ளை தொண்டையைச் செருமினார். ஆறுமுகம் என்றார்.

'ஐயா!' என்றான் அவன் பணிவோடு.

'உனக்கு அழைப்புக் கூலி ரெண்டு ரூபாயா? ரெண்டுதரம் அழைச்சிருக்கே நாலு ரூபாயாச்சு. இன்னும் ரெண்டு ரூபா வாங்கிக்கோ. இந்த ஊர் பெரியவாள்களும் பிரமுகர்களும் தானே நம்ம வீட்டு விருந்துக்கு வரமாட்டோம்னு சொல்லிப் போட்டாக! போகட்டும். நீ வடக்கூர், கீழூர் பக்கம் போயி, அங்கே உள்ள ஏழை எளிய பிள்ளைகளை எல்லாம் இங்கே வரச்சொல்லு. ஐயா வீட்டிலே நயினார் நோன்பு பூசை, சித்திரான்ன பிரசாதம்னு சொல்லி அனுப்பு. வருஷத்திலே ஒருநாள்! அதுக புதுமையா, திருப்தியாச் சாப்பிடட்டும்..... நீயும் வயிறாரச் சாப்பிடு. நீ சாப்பிட்ட பிறகு போனாப் போதும். வே, இலையைப் போடும். எனக்குப் பரிமாறும்! திண்ணையிலே இலை போட்டு ஆறுமுகத்துக்கும் பரிமாறும் என்று மிடுக்காக உத்தரவிட்டார்.'

'செய்தது எதுவும் வீணாகி விடாது!' என்றார் அவர். தவசிப் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்வது போல.

இருக்கிற சுகவாசிகளுக்கே மேலும் மேலும் விருந்தளிப்பதை விட, ஏழை எளியதுக வயிற்றுக்குச் சோறு போடுவது ரொம்பப் பெரிய விஷயமாக்கும்!

இப்படிப் பொன்மொழி தீட்டிக் கொண்டது மூக்கப்பிள்ளை மனம்.

# 2. சட்டை

**- ஜெயகாந்தன்**

அவன் துறவி!

வாழ்க்கையை வெறுப்பது அல்ல, வாழ்வைப் புரிந்துகொண்டு, அதன் பொய்யான மயக்கத்திற்கு ஆட்படாமல் வாழ முயல்வதுதான் துறவு எனில், அவன் துறவிதான்.

முப்பது வயதில் அவன் புலனின்ப உணர்வுகளை அடக்கப் பழகிக் கொண்டான் என்று சொல்வதை விட, அவற்றில் நாட்டம் இல்லாததே அவனது இயற்கையாய் இருந்தது என்று சொல்வதே பொருந்தும். இதற்கு அர்த்தம் அவனிடம் ஏதோ குறை என்பதல்ல. அவன் நிறைவான மனித வாழ்வின் தன்மையிலேயே குறைகள் கண்டான். 'ஓட்டைச் சடலம் உப்பிருந்த பாண்டம்' என்று பாடும் சித்தர்களின் கூற்றைப் பரிகாசிக்காமல் அந்தப் பரிகசிப்பின் காரணங்களை ஆராய்ந்து அதில் உண்மைகள் இருக்கக் கண்டான். எனவே, பக்தியின் காரணமாகவோ, மோட்சத்தை அடைய இது தவமார்க்கம் என்று கருதியோ அவன் துறவு பூணவில்லை.

சொல்லப்போனால் 'கண்ட கோயில் தெய்வம் என்று கையெடுப்பதில்லையே' என்ற சிவவாக்கியரின் ஞானபோதனையின்படி எவ்வித ஆசாரங்களையும் கைக்கொள்ளாமல்தான் இருந்தான்.

அவன் ஒவ்வொன்றையும் அறிந்து கொள்ள விரும்புகிறவன் மாதிரி விழித்தானே அல்லாமல், ஒவ்வொன்றையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை கொண்டானில்லை.

அவன் அந்தச் சிவன் கோயிலில் வாழ்ந்து வந்தான். அதற்குக் காரணம் பக்தி அல்ல; அங்கேதான் அவனுக்கு இடம் கிடைத்தது. கோயில் குருக்கள் அவனுக்கு மடப்பள்ளியிலிருந்து உணவு தந்தார். அதற்குப் பதிலாய் அவனிடம் வேலை வாங்கிக் கொண்டார். கோயிலின் பக்கத்திலுள்ள நந்தவனப் பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதும் சில சமயங்களில் பூப்பறித்துக் கொண்டு வருவதும் அவனுக்கு அவரிட்ட பணிகள்.

அரையில் ஒரு துண்டும், நெஞ்சுக்குழி வரை



அடர்ந்துவிட்ட தாடியும், உண்மையைத் தேடும் அவனது தீட்சண்யமான பார்வையும் - கொஞ்ச காலத்தில் அவனைப் பூந்தோட்டத்துச் சாமியாராக்கி விட்டது.

பூந்தோட்டத்துச் சாமியார் என்பதே இப்போது அவனுக்குப் பெயர் எனினும், அவன் சோம்பேறி அல்ல. சாமியார் என்ற பட்டம் பெற்ற பிறகும் கூட அவன் நாள் முழுவதும் ஏதோ ஒரு வேலையை யாருக்கோ செய்து கொண்டிருக்கிறான். வேலையின் தன்மைகளோ அது உயர்வா, தாழ்வா என்ற பாகுபாடோ அவனுக்கு ஒரு பொருட்டல்ல.

செடிகளுக்குத் தண்ணீர் இறைத்துக் கொட்டுவான். மடப்பள்ளிக்கு விறகு பிளந்து போடுவான். கோயில் பிரகாரத்தைக் கூட்டி வைப்பான்; குருக்கள் வீட்டுத் தென்னை மரத்தில் ஏறித் தேங்காய் பறிப்பான். செட்டியார் வீட்டுக்கு... எள் மூட்டை சுமப்பான்; பட்டாளத்துப் பிள்ளை வீட்டு வண்டியில் ஏறிப்போய் நெல் அரைத்துக்கொண்டு வருவான். அவன் எல்லோருக்கும் தொண்டன்.... ஒரு வேளை பிறவியின் அர்த்தமே இந்தப் பயன் கருதாத் தொண்டில் அவனுக்குக் கிட்டுகிறதோ என்னவோ?

''பூந்தோட்டத்துச் சாமி'' என்று யாராவது கூப்பிட்டுவிட்டால் போதும், சம்பளம் கொடுத்து வைத்துள்ள ஆள்கூட அவ்வளவு கடமை உணர்ச்சியோடு ஓடிவரமாட்டான்.

எனவே அவனுக்கு வேலையும் வேலையிடும் எஜமானர்களும் நிறையவே இருந்தனர்.

இரவு பதினோரு மணிக்குமேல் கோயில் பிரகாரத்தில் உபந்நியாசத்துக்காகப் போட்டிருந்த பந்தலடியில் இருளில் - நிலா வெளிச்சம் படாத நிழலில் - கருங்கல் தளவரிசையில் வெற்றுடம்போடு மல்லாந்து படுத்திருந்தான் பூந்தோட்டத்துச் சாமி.

பிரகாரம் எங்கணும் கொட்டகையின் கீற்றிடையே விழுந்த நிலவொளி வாரி இறைத்தது போல் ஒளி வட்டங்களை அவன் மீது தெளித்திருந்தன...

அவன் மனத்தில் அன்று காலையிலிருந்து உறுத்திக்

அணைத்துக் கொண்ட பிள்ளை, சற்று தானே தன் உணர்ச்சிகளைச் சமனப்படுத்திக் கொண்டு வழக்கமாய்ப் பத்திரிகை படித்து விவாதிக்கும் தொனியில் பேசினார்.

''நாம சண்டைக்குப் போகலே... எவ்வளவோ பொறுமையாகவே இருந்திருக்கோம்.... நல்லவங்க எவ்வளவுதான் விரும்பினாலும் கெட்டவங்க உலகத்திலே இருக்கற வரைக்கும் சண்டை இருக்கும் போலத்தான் தோணுது..... ஆனா, எம் மனசுக்கு இது சந்தோஷமாத்தான் இருக்கு.... பாத்துடுவோம் ஒரு கை. சண்டை வேண்டியதுதான்" என்று மீண்டும் உணர்ச்சி வெளியேறி அவர் பிதற்றிக் கொண்டிருக்கையில் மாணிக்கம் குறுக்கிட்டுக் கேட்டார்.

"சண்டை நடக்கிறது சரி, நீங்க சண்டை வேணும்னு சொல்லறது வேடிக்கையாய் இருக்கு. அதுவும் நீங்க, அந்தக் கொடுமையெல்லாம் பார்த்த நீங்க - அனுபவிச்ச நீங்க - அப்படிச் சொல்லலமா?" என்று கேட்டார். அப்போதுதான் பெரியசாமிப் பிள்ளைக்கும் நினைவு வந்தது. செட்டியாரின் மகன் - இப்போது நடக்கும் யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் ஜோத்பூரில் வேலை செய்து கொண்டிருக்கிறான் என்ற விவரம். அந்த - நினைவு வந்ததும் செட்டியாரின் முகத்தை ஒரு விநாடி உற்றுப்பார்த்துவிட்டு, அவரது தோளைப்பற்றி அழுத்தி, "பயப்படாதீர்! கடவுள் இருக்கிறான்" என்றார்.

அந்தச் சாதாரண நம்பிக்கைதான் செட்டியாருக்கு எவ்வளவு ஆறுதலாய் இருந்தது என்பது அந்நிலையிலிருந்து பார்க்கிறவர்களுக்குத்தான் தெரியும். பூந்தோட்டத்துச் சாமியாருக்கும் தெரிந்தது.

"ஐயோ! எவ்வளவு நாசம், எவ்வளவு அழிவு'' என்று முணுமுணுத்துக் கொண்டார் சோசியர்.

"அழியாட்டிப் போனா வளர்ச்சி ஏது? ஒண்ணு சொல்றேன். கேளும். தர்மம்! தர்மம் மட்டும் அழியாது. அதர்மமும் அக்குறும்பும்தான் சண்டை வந்தா அழிந்தே போகும். சத்தியத்துக்குத்தான் போராடற குணமும் உண்டு; பொறுத்திருக்கிற குணமும் உண்டு. சண்டைன்னு வந்துட்டா



போடறானுங்களாமே பாவிங்க.... எங்கப்பன் விக்னேஸ்வரரு என்னைச் சோதிக்க மாட்டாரு.... அப்புறம் கடவுள் சித்தம்!" என்று பொங்கி வரும் கண்ணீரை மீண்டும் முந்தானையால் துடைத்துக் கொண்டாள் கிழவி.

"விக்னேஸ்வரர் துணையிருப்பாரு; கவலைப்படாதீங்க அம்மா" என்று பூந்தோட்டத்துச் சாமியும் அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

"சாமியாரே!... உன் வார்த்தையை நான் விக்னேஸ்வரர் வாக்கா நம்பறேன். நீயும் அவர் மாதிரிதான்!" என்று அவனை வணங்கி ஏதோ ஒரு நம்பிக்கையும், ஆறுதலும் தைரியமும் பெற்று அங்கிருந்து நகர்ந்தாள் கிழவி.

பூந்தோட்டத்துச் சாமியார் அந்தப் பிள்ளையார் சிலையை வெறித்துப் பார்த்தான்.

'நட்ட கல்லைத் தெய்வம் என்று' பாட்டு அவன் மனத்தில் ஒலித்தது.

"இந்தக் கிழவிக்கு இந்த நட்டகல் தரும் ஆறுதல் பொய்யா?" என்று தோன்றியது.

நல்ல வேளை அந்தப் பாடலை அவள் படித்திருக்கவில்லையே என்றெண்ணி மகிழ்ச்சியுள்ளான் அவன்..

மத்தியானம் பிரகாரத்தில் கொட்டகை வேய்ந்து கொண்டிருந்தார்கள். இன்றிலிருந்து ஒரு வாரத்துக்குக் கோயிலில் பகவத் கீதை உபந்யாசம் நடக்கப்போகிறது. யாரோ பெரிய மகான் பட்டணத்திலிருந்து வந்து கீதை சொல்கிறாராம். சாயுங்காலத்தில் கோயில் கொள்ளாத ஜனக்கும்பல் வந்து விடும். பூந்தோட்டச் சாமியாருக்கும் வேலைக்குப் பஞ்சமில்லை.

கொட்டகை போடுவதற்காக மூங்கில் கட்டி மேலே உட்கார்ந்து ஓரை வேய்ந்து கொண்டிருந்தவர்களுக்கு உதவியாய்க் கீற்றையும், கயிற்றையும் ஏந்தி, அண்ணாந்து நின்று கொண்டிருந்தான் பூந்தோட்டத்துச் சாமியார்.

அப்போது அவனைத்தேடிக்கொண்டு வந்த தர்மகர்த்தா, "சாமி! ஓடிப்போயி நம்ப பட்டாளத்துப் பிள்ளை வீட்டிலே

அம்மாக்கிட்ட கேட்டு, கல்யாண சமக்காளம் இருக்காம் - வாங்கிக்கிட்டு வரச்சொன்னாங்கன்னு கேளுங்க. ஓடுங்க'' என்றதும், கையிலிருந்த கீற்றைப் போட்டுவிட்டு ஓடினான் அவன்.

அவன் பட்டாளத்துப் பிள்ளை வீட்டருகே வரும்போது அந்த வீட்டுத் திண்ணையில் ஒரு கூட்டமே கூடி நின்றிருந்தது.

பட்டாளத்துப் பிள்ளை என்று அழைக்கப்படும் பெரியசாமிப் பிள்ளை காலையிலும் மாலையிலும் பத்திரிகை படிக்கும் பழக்கமே அப்படித் தான்.

பட்சணக்கடை மணி முதலி, ஜோசியர் வையாபுரி, எண்ணெய்க்கடை மாணிக்கம் இன்னும் கீழே சில சிறுவர்கள் நின்றிருந்தனர். மடியில் மூன்று வயதுள்ள தன் பேரப்பையனை உட்கார வைத்துக்கொண்டு பெரியசாமிப் பிள்ளை பழுப்பேறிய தமது நரைத்த மீசையைத் திருகிக்கொண்டு உற்சாகமான குரலில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்.

பத்திரிகையிலிருந்து ஒரு செய்தியைப் படித்துவிட்டு,

"போடு....! இந்தியான்னா இளிச்சவாயன்னு நெனச்சிக்கிட்டு இருக்கானுவளா? நம்ப ஊர்லே செஞ்ச விமானங்கள் ஐயா... ஓய் செட்டி யாரே, இதைக் கவனியும் - ஜெட் விமானங்களை நொறுக்கிட்டு வருது ஐயா! சபாஷ் நானும் நெனைச்சிருக்கேன் ஒரு காலத்திலே.... நமக்கு எதுக்குப் பட்டாளம்... - இந்தத் தேசத்து மேலே எவன் படையெடுக்கப் போறான்னு.... இப்ப இல்லே தெரியுது - அந்தக் காலத்திலே ஹிட்லர் செஞ்ச மாதிரி டாங்கிப் படையெ வெச்செ நம்ப அடிச்சுடலாம்னு திட்டம். இந்தியத் துருப்புகள் கைப்பற்றியிருந்த டாங்கியின் படம் பிரசுரிக்கப்பட்டிருந்ததை உட்கார்ந்திருந்தவர்களிடம் காட்டினார் பெரியசாமிப் பிள்ளை".

"பயங்கரமான டாங்கி! அந்தக் காலத்திலே இவ்வளா பெரிசு கெடையாது... டாங்கின்னா என்னான்னு நெனக்கிறே.... ஊருக்குள்ளே பூந்துடுச்சின்னா அவ்வளவுதான்! ராட்சஸக் கூட்டம் வந்த மாதிரிதான். ஒண்ணும் பண்ண முடியாது - நம்ப ஊரிலே இப்ப டிராக்டர் வச்சு உழவு நடத்தல்லே அந்த மாதிரி



ஊரையே உழுதுட்டுப் போயிடும்... வீடு தெருவு கோயிலு எல்லாம் அதுபாட்டுக்கும் நொறுக்கித் தள்ளிட்டுக் காடு மலைன்னு பாக்காம குருட்டுத்தனமாப் போகும்! சும்மா... நம்ப படைங்க அந்த மாதிரி டாங்கிகளைப் போட்டு நொறுக்கி விளையாடுது போ! அடடா... நமக்கு வயசு இல்லியே.... இருந்தா போயிடுவேனய்யா பட்டாளத்துக்கு!" என்று உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்கையில், வையாபுரி சோசியரின் தோளுக்கு மேல் எக்கி அந்த டாங்கியின் படத்தைப் பார்த்தான் பூந்தோட்டத்துச் சாமியார்.

அவன் வந்து நிற்பதையே கவனிக்காத பிள்ளை தொடர்ந்து பத்திரிகையைப் படிக்கும்போது திடீரெனக் குரலைத் தாழ்த்தினார். ஒரு மேஜரின் வீரமரணம் - புதுடெல்லி, செம்பம்பர் பதினேழு, சென்ற பதிமூணாந் தேதியன்று சியால்கோட் அருகே நடந்த டாங்கிப் போரில் பகைவர்களால் சுடப்பட்ட மேஜர் முகமது ஷேக் வீர மரணம் எய்தினார்" என்பதைப் படித்துவிட்டு மௌனமாகத் தலைகுனிந்தார் பிள்ளை.

அவர் மடியிலிருந்த குழந்தை அவரது மீசையைப் பிடித்திழுத்துச் சிரித்தது.

சில வருடங்களுக்கு முன் போர் முனையில் வீரமரணமுற்ற இப் பேரக் குழந்தையின் தகப்பனின் - தன் மகனின்- நினைவு வரவே உணர்ச்சி மயமானார் கிழவர்.

"சண்டையினாலே ஏற்படற நஷ்டங்களைப் பார்த்தீரா?" என்றார் சோசியர் வையாபுரி.

சிவந்து கலங்கும் விழிகளோடும் முகம் நிமிர்ந்தார் பிள்ளை. "நஷ்டம் தான்..... அதுக்காக? மானம் பெரிசு செட்டியாரே, மானம் பெரிசு!..." என்று குழந்தையை மார்புறத் தழுவிக்கொண்டு கத்தினார் பிள்ளை. "என் வாழ்க்கையிலே பாதி நாளுக்கு மேலே ரெண்டு உலக யுத்தத்திலே கழிச்சிருக்கேன் நான்... என் ஒரே மகனையும் இந்தத் தேசத்துக்குக் குடுத்திட்டதிலே எனக்குப் பெருமைதான்.......... அவன் சொன்னானாமே... "பூ உதிரும் ஆனாலும், புதுசு புதுசாவும் பூக்கு'' மின்னு.... ஆ! அவன் வீரனய்யா.... வீரன்" என்று மீண்டும் குழந்தையை மார்போடு

சற்றுத் தள்ளிச் சென்று லாரி நின்றது...

அதிலிருந்து ஒரு ராணுவ வீரன் தொபீரெனக் குதித்து ‘சரக் சரக்’கென நடந்து வந்தான்...

தன் மகன் சோமநாதனே வருவது போன்ற பிரமிப்பில், வருவது யார் என்று தெரியாமல் பரவசமாகி நின்றிருந்தார் பிள்ளை.

வந்தவன் பேசிவிட்டுப் போகட்டும் என்ற நினைப்பிலோ, பட்டாளத்துக்காரன் என்ற பயத்திலோ குருக்கள் தெருவோரமாய் விலகி நின்றார்.

அருகில் வந்த நின்ற அந்த இளைஞனை மேலும் கீழும் பார்த்து, “தெரியலியே” என்றார் பிள்ளை.

“நான்தாங்க.... பூந்தோட்டச்சாமி, தெரியலிங்களா? என்ன சாமி... உங்களுக்குமா தெரியலை? உங்ககிட்ட எல்லாம் சொல்லிக்காம போறேனேன்னு நெனச்சேன்.... நல்ல வேளை பார்த்துட்டேன்... ரயிலுக்குப் போறோம், வரட்டுங்களா?” என்று கைகூப்பி நிற்கும் அவனை வெறித்துப் பார்த்த பிள்ளை, அவனை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டார்.

மழுங்கச் சிரைத்த மோவாயும் உதட்டுக்கு மேல் முறுக்கிவிட்ட மீசையும்.... கிராப்புத் தலையும், காக்கிச் சட்டைக்குள் புடைத்துக் கவசமிட்டது போல் கம்பீரமாய் உயர்ந்த மார்பும்....

“சபாஷ்” என்று அவன் முதுகில் தட்டினார் பிள்ளை.

சட்டையில்லாத வெற்றுடம்பில் அரைத்துண்டும், தலைநிறைய முடியும், தாடியுமாய் இருந்த அந்தப் பழைய கோலத்தையும் இந்தப் புதிய கோலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்த குருக்கள்...

“சட்டையெல்லாம் போட்டு, தாடியை எடுத்திட்டு... நம்ப பூந்தோட்டத்துச் சாமியா? நம்ப முடியலியே....’’ என்று கண்களைச் சிமிட்டினார்...

அவன் சிரித்தான்.



அப்புறம் சண்டையெ நெனச்சி பயப்படக்கூடாது. சண்டையில்லாத காலமெ கெடையாதே ஐயா!.... ராமாயண காலத்திலே, மகாபாரத காலத்திலே கூடத்தான் சண்டை இருந்திருக்கு.... யோசிச்சுப் பாரும். எந்தச் சண்டையிலேயாவது அநியாயம் ஜெயிச்சிருக்கா? சொல்லும்!.....”

....வந்த காரியத்தை மறந்துவிட்டு.... பிள்ளையின் பிரசங்கத்தை லயித்துக் கேட்டுக்கொண்டிருந்தான் பூந்தோட்டத்துச் சாமியார்.

“யாரு, பூந்தோட்டத்துச் சாமியா? எங்கே வந்தீங்க?” என்றார் பிள்ளை.

உறக்கத்திலிருந்து விழித்தவனைப் போல் ஒரு விநாடி சுதாகரித்து “தர்மகர்த்தா ஐயா ஜமுக்காளம் வாங்கிகிட்டு வரச் சொன்னாரு” என்றான்.

‘‘உள்ளே போயிக் கேளுங்க.... அம்மா, கௌரி..... பூந்தோட்டத்துச்சாமி வராரு பாரு.... அந்தக் கல்யாண ஜமுக்காளத்தை எடுத்துக்குடு... மத்தியானமே கேட்டாங்க. மறந்துட்டேன்” என்று உட்புறம் திரும்பிக் குரல் கொடுத்தார் பிள்ளை.

‘‘உங்களுக்கு சண்டையெத் தவிர வேற என்ன ஞாபகமிருக்கும்’’ என்று உள்ளேயிருந்து ஒலித்த தன் மனைவியின் குரலை அவர் பொருட்படுத்தவேயில்லை.

வீட்டிற்குள்ளே வந்து கூடத்து வாசற்படி அருகே நின்ற பூந்தோட்டத்துச் சாமியாரின் விழிகள் கௌரியைப் பார்க்கையில் கலங்கின. அவள் ஜமுக்காளத்தை எடுக்க அறைக்குள் போனாள். அப்போது கூடத்துச் சுவரில் மாட்டப்பட்டிருந்த ராணுவ உடையில் - பார்க்கப் பார்க்க விகசிப்பது போன்ற புன்னகையுடன் - உள்ள சோமநாதனின் போட்டோவை வெறித்துப் பார்த்தான் பூந்தோட்டத்துச் சாமியார்.

சோமநாதன் ராணுவத்தில் சேர்ந்த அடுத்த வருஷம் லீவில் வந்திருந்த போது கோயிலுக்கு வந்து தன்னோடு பேசியிருந்து குசலம் விசாரித்த நிகழ்ச்சிகள் எல்லாம் இப்போது மனத்தில் தோன்றின. பொழுது போகாததால் வீட்டைச் சுற்றிலும் புஷ்பச்

செடிகள் பயிராக்க எண்ணித் தன்னிடம் செடிகளும் விதைகளும் வாங்கி வந்து பயிரிட்ட சம்பவங்களெல்லாம் பெருகி வந்து நெஞ்சை அடைத்தன.

அவன் திரும்பி நின்று அந்த வீட்டைச் சுற்றிலும் செழித்துக் கிடக்கும் புஷ்பச் செடிகளைப் பார்த்து மீண்டும் திரும்பி அந்தப் போட்டோவைப் பார்த்தான்.

வெளியே வீட்டுத் திண்ணையில் பெரியசாமிப் பிள்ளை இன்னும் மிகுந்த உற்சாகத்தோடு யுத்தச்செய்திகளைப் படித்துக் கொண்டிருந்தார்.

அன்று மாலை கோயில் பிரகாரத்தில் ஜனக்கும்பல் நிரம்பி வழிந்தது.

காவி நிறப் பட்டிலே அங்கி தரித்தருந்த அந்தப் பண்டிதர் மிக அழகாக கீதையை உபதேசம் பண்ணினார். அந்தப் பண்டிதரின் ஒரு பழைய உதாரணம் பூந்தோட்டச் சாமியாருக்குப் புதுமையாகவும் மிகவும் பிடித்ததாகவும் இருந்தது. இந்த உடம்பு நம் ஆத்மாவின் சட்டை; சட்டை பழசானதும் ஆத்மா இதை உதறிவிடுகிறது... ''ஒன்றுமே செய்யாமல் ஒருவனுமே இருக்க முடியாது. எல்லா ஜீவன்களும் இயற்கையான தன்மையினாலே தமது இச்சையின்றியே ஏதாவது ஒரு தொழிலோடு பூட்டப்பட்டிருக்கின்றன". 'ஹே! அர்ஜுனா... உனக்குத் தொழில் செய்யத்தான் அதிகாரம் உண்டு. பயன்களில் உனக்கு எவ்வித அதிகாரமும் எப்போதும் இல்லை.... அவ்விதமான கர்மத்தின் பயனில் பற்றில்லாமல் செய்யவேண்டிய தொழிலை எவன் செய்துகொண்டிருக்கிறானோ அவனே துறவி, அவனே யோகி' என்பதாகவெல்லாம் பகவான் சொல்லியிருக்கிறார்.

....கூட்டத்தினர் அனைவரும் அந்தப் பண்டிதரின் ஞான வாசகங்களை ஏதோ பாட்டுக் கச்சேரி கேட்பது போல இடையிடையே 'ஹா ஹா' என்று சிலாகித்தவாறு கேட்டிருந்தனர்.

பூந்தோட்டத்துச் சாமியார் ஒரு மூலையில் பந்தக்காலைக் கட்டிக் கொண்டு தாடியை நெருடியவாறு அங்குப் பேசப்படும்



மெய்ஞ்ஞானங்களையெல்லாம் ஹிருதய பூர்வமாகக் கிரகிப்பது போல் கூரிய நோக்கோடு நின்றிருந்தான்.

உபந்நியாசம் முடிந்து கூட்டம் கலைந்த பிறகு பிரகாரத்தின் கருங்கல் தள வரிசையில் ஓர் ஓரமாய்ப் படுத்து வானத்தை வெறித்தவாறு யோசனையில் ஆழ்ந்திருந்த அவனுக்கு ஏனோ அடிக்கடி அந்தச் சோமநாதனின் முகமே எதிரில் வந்து தோன்றுகிறது.

பத்து வருஷங்களுக்கு முன் தனக்கு யாருமே பந்தம் இல்லாது போனதன் காரணமாய்ப் பிறந்த ஊரைவிட்டு ஓடிவந்துவிட்ட தன்னைப் பற்றியும் அவன் யோசிக்கிறான்.

வாழ்க்கையின் பெரும்பகுதியை ராணுவத்திலேயே கழித்துவிட்டு, தன் ஒரே மகனையும் யுத்தத்தில் இழந்து விட்டு, இன்னும்கூட மனத்தளர்ச்சியில்லாமல் தர்மத்தின் தன்மைகளைப் பற்றிப் பேசுகின்ற பெரியசாமிப் பிள்ளையை விட, கீதை உபந்நியாசம் பண்ணிய அந்த மகா பண்டிதர் எந்த விதத்தில் துறவி என்று எண்ணிப் பார்க்கிறான் அவன்.

அவன் வெகுநேரம் உறக்கமில்லாது வெறித்த விழிகளோடு எதை எதையோ சிந்தித்தபின், ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவன் போல் அங்கிருந்து எழுந்து நடந்து கோயிலை விட்டு வெளியேறினான்.

பிறகு அவன் திரும்பவே இல்லை!

ஒருநாள் கடைத்தெருவில் பெரியசாமிப் பிள்ளையைப் பார்த்த கோயில் குருக்கள் மனம் பொறுக்காமல் அங்கலாய்த்துக் கொண்டார். "மடப்பள்ளியிலே ரெண்டு வேளை சாப்பாடு போட்டு நல்லபடியா வெச்சிருந்தேன்... ஓய் பிள்ளை, இதைக் கேளும்!.... அந்தப் பூந்தோட்டத்துச் சாமியார் பய சொல்லாமல் கொள்ளாமல் எங்கேயோ ஓடிட்டான்....

நாலைஞ்சு நாளாச்சு.... நீர் எங்கேயாவது பார்த்தீரா?"

அப்போது ஒரு ராணுவ லாரி அவர்களைக் கடந்தது. பெரியசாமிப் பிள்ளை தமது வழக்கமான ஆர்வத்துடன் அந்த லாரி நிறைய நிற்கும் ராணுவ வீரர்களைப் பார்த்தார்.

ராமாயியின் குழந்தையை, அந்தத் தம்பதிகளுக்குத் தத்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய முன் வந்தார் கோவிராஜ். அதைக் கேட்டதும், கிராமத்துப் பெண்களுக்கு, பாதி ஆச்சரியம்.

“என்ன சொல்றீக நம்ம புள்ளையை வெள்ளைக்காரங்க, தத்து எடுத்துக்கிறாகளா'' என்று இடுங்கிய கண்களை அகலப்படுத்தினார் கிழவி செல்லாயி.

''கறுப்பு நிறம்னாலே வெள்ளைக்காரர்களுக்குப் பிடிக்காதுனு அய்யா சொல்லுவாகளே?” என்று கேட்டாள் சிகப்பி. அவளுடைய தாத்தா வெள்ளைச்சாமி, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஆகஸ்டு புரட்சியில் சிறைக்குப் போய்வந்த தியாகி.

''அய்யய்யோ.....! நம் பொண்ணு கஷ்டப்படக் கூடாதுனுதான், கள்ளிப்பால் கொடுத்துச் சாகடிக்கிறோம். இதை வெள்ளைக்காரங்களுக்குத் தூக்கிக் கொடுத்து, அங்கே அவங்க அதைக் கஷ்டப்படுத்தினா, யாரு கேக்கிறது?”

“அதெல்லாம் வேண்டாம்யா!... இது என்ன புதுப் பளக்கம்?... அதிலும் பொட்டப் புள்ளையை யாராச்சும் தத்து எடுத்துக்குவாகளா?”

“நம்ம வீட்டிலே பொறந்த புள்ளையை நாம வளக்கணும். இல்லேன்னா நாமே கொன்னு புதைச்சிடணும்.. நமக்குப் புள்ளை வளர்க்க வக்கு இல்லேங்கிறதுக்காக, வெள்ளைக்காரங்களுக்குக் குடுக்கறதா?.... அதெல்லாம் வேண்டாம்...'' என்று சுற்றியிருந்தவர்கள் எல்லாம் ஆட்சேபணை தெரிவித்தார்கள். ஆனால் பெற்றவளுக்கோ, தன் சிசுவைக் கொல்ல மனம் இல்லை. கண்காணாத தூரமாயிருந்தாலும், எங்கேயாவது உயிரோடே அவளுடைய குழந்தை இருந்தாலே போதும் என்றும் நினைத்தாள் அவள்....

“அடியே ராமாயி! ஊரிலே இல்லாத புது வளக்கம் எல்லாம் உண்டாக்காதே.... அப்புறம், பெரியவங்க எல்லாம் கூடி, உன்னை ஊரை விட்டே தள்ளிவச்சிருவாக...” என்று எச்சரிக்கை செய்தது ஒரு பெரிசு'....

கடைசியில், கோவிராஜின் முயற்சி வெற்றி பெற்றது.... ரிச்சர்ட் - லிஸி தம்பதிகளுக்கு, குழந்தையைத் தத்துக் கொடுக்க,



“ஆத்மாவுக்கு உடம்பே ஒரு சட்டைதானுங்களே.... இந்த ஆத்மாவுக்கு அந்தச் சட்டையே சம்பந்தமில்லே.... அதுக்கு மேலே எந்தச் சட்டெயப் போட்டுக்கிட்டாத்தான் என்ன? சொல்லுங்க சாமி?” என்றான்.

இந்தக் காக்கி உடுப்புக்குள் இருந்து இந்த வார்த்தை வருவதைக் கேட்கப் பிடிக்காத குருக்கள் குறுக்கிட்டார்.

“இந்தப் பேச்சையெல்லாம் இனிமே விடு. நீ வாழ்க்கையெ வெறுத்துச் சாமியாரா இருந்தப்போ அது சரி... இனிமே பொருந்தாது” என்றார் அவர்.

“வாழ்க்கையெ வெறுத்தா? வாழ்க்கையெ வெறுத்தவன் தற்கொலை பண்ணிக்குவான் சாமி - சாமியாராகிறதில்லே....” என்றான் அவன்.

தூரத்தில் அவனுக்காக நின்ற லாரி ஹாரனை முழக்கிற்று.

“அப்போ நான் வர்றேன்” - என்று பெரியசாமியையும், குருக்களையும் மீண்டும் வணங்கி விட்டு இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு லாரியை நோக்கி அந்தப் ‘பூந்தோட்டச்சாமி’ ஓடுவதைக் குருக்களும் பிள்ளையும் பார்த்தவாறு இருந்தனர்.

“ம் அவன் துறவிதான்” என்று தீர்மானமாகச் சொன்னார் பிள்ளை.

குருக்கள் கண் கலங்கப் பெருமூச்சு விட்டார்.

# 3. மண்

**- அய்க்கண்**

அன்று சூரப்பட்டி, மாரியம்மன் உற்சவம் போல், விழாக்கோலம் பூண்டிருந்தது.

ஊர் நுழைவாயில் கோயில் எதிரே கொட்டகை போட்டு, வாழை மரங்கள் கட்டியிருந்தார்கள். அங்கிருந்து, கிராமத்தின் ஒரே "தேசிய சாலை"யான வீதியில், இரண்டு பக்கங்களிலும் ராமாயி வீடு வரை, கம்பங்கள் நட்டு, தென்னங்குறுத்து, மாவிலைத் தோரணங்கள் காற்றிலே மெல்லச் சலசலத்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் பெரிய பெரிய கோலங்களில் பெண்களின் கைவண்ணம் மிளிர்ந்தது.

அந்த ஊரில் பிறந்த சின்னத்தாயி, இங்கிலாந்திலிருந்து பெற்றோருடன் - இருபத்தோரு ஆண்டுகளுக்குப் பிறகு - பெற்ற தாய் தந்தையின் கிராமத்திற்கு அன்று வருகிறாள்.

ஆனால் - 21 ஆண்டுகளுக்கு முன்பு - இந்தச் 'சின்னத்தாயி' ராமாயியின் குடிசையிலே மூன்றாவது பெண் குழந்தையாகப் பிறக்கும்போது -

அந்தக் குடிசையில் தான் எத்தனை மயான அமைதி...

ராமாயிக்கு ஏற்கனவே இரண்டு பெண் குழந்தைகள் அவதரித்து, அவள் வீட்டுத் தரித்திரத்தைப் பங்குபோட்டுக் கொண்டிருந்தன.

அவளுடைய கணவன் கருப்பையா, விவசாயக் கூலி, மழை பெய்து, கண்மாய்கள் நிறைந்தால், வருஷத்தில் மூன்று அல்லது நான்கு மாதங்கள், வேளாண்மை வேலைகள் கிடைக்கும். உழவு, நாற்றுப்பாவுதல், நடவு, களையெடுப்பு, அறுவடை என்று, மனைவியோடு சுற்றுப்புறக் கிராமங்களுக்கெல்லாம் நடந்து போய் வேலை பார்ப்பார்கள். கிடைக்கும் கூலியைக் கொண்டு வந்து, குடிசையிலே சேமித்து வைத்து, அவ்வப்போது கிடைக்கும் 'மெய்க்காட்டு' வேலைகளையும் பார்த்து, ஓர் ஆண்டுக் காலத்தில் அரைவயிற்றுக் கஞ்சியோடு, ஜீவனோபாயம் நடத்துகின்ற குடும்பம் அது...



அந்த வட்டாரத்தில, பெண் குழந்தை பிறந்து விட்டால், அந்த வீடு இழவு வீடுதான். சோகத்தில் மட்டுமல்ல - உண்மையிலே, அது 'இழவு வீடு' ஆகிவிடும்!

கள்ளிப்பால், கருக்காய், நெல் என்று ஏதாவது கொடுத்து, தாய்மார்களே ஒன்று கூடி சிசுவைக் கொன்று புதைத்துவிடுவார்கள். 'அப்பாடா! ஒரு பொட்டச்சி, கஸ்டப்படாம, கரை சேர்த்துட்டோம்....' என்ற மனநிறைவோடு மகிழ்ச்சியடையும் அந்த கிராமம்.

அப்படிப்பட்ட இழவு சம்பவம், ராமாயி வீட்டிலே ஏற்கனவே இரண்டு தடவை ஏற்பட இருந்தது. கையும் கள்ளிப் பாலுமாகச் சுற்றி நின்ற பெண்களிடம் கெஞ்சி, அழுது இரண்டு பெண்குழந்தைகளையும் புதை குழிகளிலிருந்து மீட்டு விட்டாள்.

"ஆத்தா!... பெண்டுகளா! எப்படியாச்சும் இந்தப் புள்ளையை நான் வளர்த்துக் காப்பாத்திடறேன். ஆத்தா! பெத்த வயிறு துடிக்கு. கள்ளிப்பால் குடுக்கு மனசு கேக்கலே!..." இந்தப் புள்ளையை விட்டுடுங்க.... என்று உறவினர்களிடும் கண்ணீர் மல்கக் கதறிக் கதறி, இரண்டு மகள்களையும் சாவிலிருந்து காப்பாற்றி விட்டாள்.

இப்போது மூன்றாவது பெண் குழந்தை!

அந்தக் கிராமத்துக்கு அடிக்கடி வந்து செல்லும் 'ஸேவா' என்னும் தொண்டு நிறுவனத்தின் கோவிராஜ், பெண்சிசுக் கொலையின் கொடுமையை அவ்வப்போது உருக்கமாக எடுத்துச் சொல்வார். அவர் பேச்சை சுவாரஸ்யமாகக் கேட்பார்கள். ஆனால், குழந்தை பிறந்த வீட்டில், பெண் சிசுவின் அழுகைக் குரல்தான், அவர்கள் நெஞ்சுக்குள் பாய்ந்து உலுக்குமே தவிர கோவிராஜின் பேச்சே நினைவுக்குள் எட்டிப பார்க்காது.

இந்தத் தடவை ராமாயிக்குக் குழந்தை பிறந்ததுமே, குடிசையின் முன்னால் வந்து ஆஜராகி விட்டார் அவர்.

அவருடைய தொண்டு நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் வந்து நிதியுதவி செய்யும் இங்கிலாந்து நாட்டுத் தம்பதிகள் ரிச்சர்டும் லிஸியும் குழந்தைப்பேறு இல்லாதவர்கள். ஆகையால் ஓர் ஏழைக் குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்ள விரும்புவதாக அவரிடம் தெரிவித்திருந்தார்கள்.

“மிஸ்டர் ரிச்சர்ட்! நீங்கள் பணம் கொடுத்தனுப்பியதை ராமாயியிடமும் கருப்பையாவிடமும் சொன்னேன். அவர்கள் அதை வாங்கிக் கொள்ள மறுத்து விட்டார்கள். நாங்கள் குழந்தையைக் கொடுத்தது பணத்திற்காக அல்ல. எங்களிடம் குழந்தைச் செல்வம் இருந்ததால் அவர்களுக்குத் தானம் கொடுத்தோம். விலைக்குக் கொடுக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். பணத்தை இத்துடன் திருப்பியனுப்பியிருக்கிறேன்” என்று எழுதியிருந்தார் கோவிராஜ்.

அதைப் பார்த்துத் திகைத்து நின்றார்கள் வெள்ளைக்காரத் தம்பதிகள்.

“ஓ! தீஸ் டமிலியன்ஸ் - கிரேட்டர் தேன் த கிரேட்டஸ்ட் பீப்பிள்! அந்த மண்ணிலேதான் திருக்குறளும் திருவாசகமும் சின்னத்தாயியும் பிறக்க முடியும் லிஸி!” என்று மனைவியிடம் நெஞ்சம் நெகிழிச் சொன்ன ரிச்சர்டின் நீல விழிகளில், கண்ணீர் வெள்ளிய துளியாய்ப் பளபளத்தது.



சட்டபூர்வமான நடவடிக்கைகள் எல்லாம் செய்து முடித்தார் அவர். பெற்றவளைத் தவிர, ஊரில் எல்லோரும் மறந்துபோன அந்தப் பெண்குழந்தைதான், இப்போது பருவப் பெண்ணாக, பெற்றெடுத்தவர்களைப் பார்க்க இங்கிலாந்திலிருந்து பறந்து வருகிறாள்!

இந்த 21 ஆண்டுகளில் சூரப்பட்டியும் எவ்வளவோ மாறிவிட்டது.

“அடடே! நம்ம வளக்கப்படி, பாட்டியோட பேரையே பேத்திக்கு வச்சிருக்காகளே, வெள்ளைக்காரங்க!'' என்ற வியப்புடனும், பெருமையுடனும் தங்கள் ஊரில் பிறந்த வெள்ளைக்காரியாய் வளர்ந்திருக்கிற ‘சின்னத்தாயி’யைப் பார்க்க ஆவலோடு காத்திருந்தார்கள், கிராம மக்கள்.

மதுரை விமான நிலையத்தில் வந்து இறங்கிய ரிச்சர்ட், லிஸி, சின்னத்தாயி குடும்பத்தை, காரில் அழைத்துக் கொண்டு, சூரப்பட்டிக்கு வந்தார் கோவிராஜ். அவர்கள் ஊருக்குள் நுழைந்ததும், குலவை ஒலிபோட்டுப் பாடி, மாலைகள் அணிவித்து, ராமாயியின் வீட்டு வாசலிலே ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள்.

சின்னத்தாயி, பெற்றோரைப் பார்த்ததும், உணர்ச்சி பொங்க, “ஆத்தா! அப்பா! நன்றாக இருக்கிறீர்களா? என்று குரல் கம்ம, கட்டிப்பிடித்துக் கண்கலங்கியதைக் கண்டு கிராமத்து மக்களுக்கு இரண்டு ஆச்சரியம் - பிறந்த உடனே வெள்ளைக்கார நாட்டுக்குப் போன பெண், எப்படி இவ்வளவு சுத்தமாகத் தமிழ் பேசுகிறாள்? அவள் மட்டுமல்ல - ரிச்சர்ட், லிஸி தம்பதியரும், தமிழில் பேசுகிறார்களே? மக்களுடைய முகத்தில் கவிந்த வியப்பைப் புரிந்து கொண்டார் கோவிராஜ்”.

‘‘டாக்டர் ஜி.யூ. போப்னு ஒரு பாதிரியார் ரொம்ப காலத்துக்கு முன்னாலே, தமிழ்நாட்டுக்கு வந்திருந்தார் தெரியுமா? திருக்குறளையும் திருவாசகத்தையும் இங்கிலீஷில் மொழிபெயர்த்து, உலகத்திற்குத் தமிழின் பெருமையை வெளிப்படுத்தினாரே, போப்?” என்று கேட்டார் கோவிராஜ்.

பாவம்! அந்தக் கிராமத்தார்களுக்கு, போப், திருக்குறள், திருவாசகம் என்பதெல்லாம் தெரியுமா? அவர்கள் மேலும் விழிபிதுங்கி நின்று கொண்டிருந்தார்கள்.

தன் கல்லறையில் "ஜி.யூ. போப் - ஒரு தமிழ் மாணவன்'னு எழுதச் சொன்னாரே, அந்த போப் பரம்பரையில் வந்தவர்கள் தான் இந்த ரிச்சர்ட் ஸார் குடும்பம்''... என்று அறிமுகப்படுத்தினார் கோவிராஜ்.

"யா.... சிறுவயதிலிருந்தே தமிழையும் கற்றுக் கொள்வது எங்கள் குடும்பப் பழக்கம். யாராவது தமிழர்களைக் கண்டால், அவர்களோடு தமிழிலேயே பேசி சந்தோஷப்படுவோம்..." என்று ஆமோதித்தார் ரிச்சர்ட்.

"சின்னத்தாயியின் குழந்தைப் பருவத்திலிருந்தே, உங்களைப் பற்றிச் சொல்லியே வளர்த்தோம். இப்போது, அவள் உங்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்ற ஆசைப்பட்டாள். அதற்காகத்தான் அவளை அழைத்துக் கொண்டு வந்தோம். உங்களைப் பார்த்ததில் அவளுக்கு மட்டுமல்ல... எங்களுக்கும் சந்தோஷம்!" என்று சிவந்த முகமெல்லாம் சிரிப்புப் பொங்கி மலரச் சொன்னாள் லிஸி.

அன்றைக்கு என்று அரிசிச் சோறு வடித்து, குழம்பு, காய்கறிகள், ரஸம், பாயசம் வைத்துப் பரிமாறினாள் ராமாயி. இருபத்தோரு ஆண்டுகளுக்குப் பிறகு, தன் வயிற்றில் பிறந்த மகளுக்கு உணவூட்டி மகிழ்ந்தாள் அந்தத் தாய்.

வெள்ளைக்காரக் குடும்பம் இங்கிலாந்திலிருந்து வந்து அங்கே தங்கியிருக்கும் செய்தி, வெளியில் பரவி, பத்திரிக்கைக்காரர்கள், பேட்டி காண வந்து விட்டார்கள்.

"நான் பிறந்த புனித பூமியை மீண்டும் தரிசிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனாலும் என் பெற்றோர், இன்னும் வறுமையிலே வாடுவதைத்தான், என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்த மண்ணில், எப்போது பொன் விளையும் என்று ஆதங்கப்படுகிறேன்" என்று கண்களில் நீர் மல்கக் கூறி அழுதாள் சின்னத்தாயி.

கிராமத்தில் எல்லோருடைய வீடுகளுக்கும் சென்று, பார்த்து, அவர்கள் அன்புடன் தந்த கூழ், கஞ்சி, பானகம், பனங்கிழங்கு, பதனீர், சோளக்கதிர், பனம் நுங்குகளை மகிழ்ச்சியுடன் வாங்கிச் சாப்பிட்டார்கள். வெள்ளைக்காரத் தம்பதிகளும் மகளும்.



மூன்று நாட்கள் கழித்து, நெஞ்சம் கலங்கி வருந்தப் பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டாள் சின்னத்தாயி. ராமாயியும், கருப்பையாவும் கண்ணீர்ப் படலம் விழிகளை முட்டித் தெறிக்கப் பெற்ற மகளை அனுப்பி வைத்தார்கள்.

மதுரை விமான நிலையத்திற்கு வந்ததும், ரிச்சர்டும், லிஸியும் கோவிராஜைத் தனியே அழைத்துக் கொண்டுபோய்ப் பேசினார்கள்.

''மிஸ்டர் கோவிராஜ்! என் மகளின் குடும்பத்தின் வறுமையைப் பார்க்க எங்களுக்கு வருத்தமா யிருக்கிறது. இவ்வளவு ஏழ்மையிலும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அவர்கள் எங்களிடம் காட்டிய அன்பை எங்களால் மறக்க முடியாது'' என்று மனப்பூர்வமாகக் குரல் தழுதழுக்கச் சொன்னாள் லிஸி.

"யா... மிஸ்டர் கோவிராஜ்! பெற்ற தாயும் தந்தையும் இவ்வளவு வறுமையில் வாடிக் கொண்டிருப்பதால், அவர்களுக்கு நாம் பொருளுதவி செய்வோம் என்று எங்களிடம் ஒரு வார்த்தை கூட சின்னத்தாயி சொல்லவில்லை. அது எங்கள் மனத்தை உருக்கிவிட்டது. எங்கள் அனுமதி இல்லாமலே அவளால் அவர்களுக்குப் பண உதவி செய்யமுடியும். ஆனாலும் அவள், அப்படி எங்களை மீறிச் செய்யவில்லை. உண்மையில் இந்த மண்ணின் மகளது உத்தமப் பண்பைப் பார்த்து நான் ரொம்பப் பெருமைப்படுகிறேன். எஸ் வீ ஆர் ரியலி ப்ரவுடு ஆஃப் ஹாவிங் ஹெர் அஸ் அவர் டாட்டர்!" என்று பெருமிதம் பொங்கும் குரலில் சொல்லி மகிழ்ந்தார் தந்தை.

அந்தத் தம்பதியரின் உணர்வு கமழும் பேச்சு, கோவிராஜின் மனத்திற்குள் ஆழ்ந்த சிலிர்ப்பைப் பரப்பியது. தன்கைப்பையிலிருந்து நோட்டுக் கற்றைகளை எடுத்து, அவரிடம் நீட்டினார் ரிச்சர்ட்.

"மிஸ்டர் கோவிராஜ்! இந்தப் பணம் - இந்திய ரூபாயில் சுமார் இரண்டு லட்சம் இருக்கும் - இதை ராமாயியிடம் கொடுங்கள். அவர்களுக்கு உதவியாக இருக்கும்'' என்று கொடுத்து விட்டுப் புறப்பட்டார் அவர்.

அவர்கள் இங்கிலாந்து போய்ச் சேர்ந்த போதே, கோவிராஜிடமிருந்து கடிதமும் வந்து சேர்ந்தது.

வந்து நிறுத்தினான் அந்தப் பால்காரன்.

பசுவின் மடியும் பால் சுரந்தது; கண்களில் நீரும் வழிந்தது; அது கதறிய கதறலுக்கு, சுவருக்கு அப்பால் நின்ற காளைமாடும் எதிரொலி கொடுத்தது.

தைப்பொங்கல் வந்தது. மனிதர்கள் சாப்பிட்ட மறுநாள் மாட்டுக்காகவும் பொங்கல் வைத்தார்கள்.

அடுத்தவீட்டுக் காளைக்கு அதன் சொந்தக்காரன் கொம்பு சீவிவிட்டு, அலங்காரங்கள் செய்து வைத்து, அதைத் தட்டிக் கொடுத்து ஊர் சுற்ற அனுப்பி வைத்தான். கிராமத்தில் அது இருந்தபோது மஞ்சுவிரட்டில் கலந்து கொண்டு ஊரையே கதி கலக்கிய காளை. பட்டணத்திற்கு வந்த பிறகு அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை. பார வண்டி இழுப்பதோடு சரி.

அந்தக் காளைமாட்டுக்கு மஞ்சு விரட்டு நினைவு வந்து விட்டது. அந்த நினைவோடு சுவருக்கப்பால் நின்ற பசுவை எட்டிப் பார்த்தது. பசு தனக்கெதிரில் வைத்த பொங்கலை முதலில் முகர்ந்து பார்த்து கண்ணீர் வடித்தது; பிறகு தன் கொம்புகளால் அந்தப் பாத்திரத்தையே மோதிக் கீழே உருட்டி விட்டது.

மாடசாமிக்கு ஒன்றும் புரியவில்லை; அருகில் நின்ற அவனுடைய மகனுக்கும் ஒன்றும் புரியவில்லை. மாடசாமி பசுவின் கழுத்தில் அன்போடு தட்டிக் கொடுத்துப் பார்த்தான். அதன் முகத்தில் மெதுவாகத் தட்டிக் கொடுத்தான். மறுபடியும் சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்து அதன் அருகில் கொண்டு வந்தான்.

இந்த வேலைகளுக்கிடையில் அவனுடைய மகன் குமரன் சற்று விலகிப் போய் விளையாடியதை அவன் கவனிக்கவில்லை.

திடீரென்று ஏதோ ஓர் பரபரப்பான சத்தம் கேட்டது. நாலுகால் பாய்ச்சலில் தெருவே அதிரும் ஓசையுடன் அடுத்த வீட்டுக் காளை அங்கே வந்து கொண்டிருந்தது. சீவி விட்ட கொம்புகள் மின்னல் கீற்றுகளைப் போல் ஒளிர்ந்தன. கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன.



## 4. தாய்ப்பசு

– அகிலன்

பட்டணத்துப் பால்காரன் மாடசாமியின் வீட்டுப் பசு மாடு ஒரு காளைக் கன்றுக்குத் தாயாகி இருந்தது. பசுவுக்கு இது இரண்டாவது ஈற்று. முதலில் பிறந்த கிடாரிக் கன்று வளர்ந்து பெரிதாகி எங்கோ கைமாறிப் போய்விட்டது. இப்போது இது இரண்டாவது குழந்தை; ஆண் குழந்தை. அது அங்குமிங்கும் துள்ளிக் குதித்து ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தது.

தாய்ப்பசுவுக்குப் பெருமை தாங்கவில்லை. மடி நிறையப் பால் சுரந்திருந்தும்கூட, அதைக் குடிக்காமல், இப்படி முட்டி மோதிக்கொண்டு எந்தப் பிள்ளையாவது விளையாடித் திரியுமா?

சீம்பாலைக் கறந்து விற்க முடியாது என்பதால் மாடசாமியும் கன்றுக் குட்டியைப் பிடித்துக் கட்டி வைக்கவில்லை. குடித்தால் குடித்துவிட்டுப் போகட்டுமே என்கிற தாராள.

கன்றுக்குட்டிக்கோ நினைத்தபோதெல்லாம் குடித்துக் கொள்ளலாமே என்ற ஒரு அலட்சியம்.

அதற்கு ஒரு தோழனும் கிடைத்துவிட்டான்; மாடசாமியின் மகன் குமரன் - முதலாளியின் மகனும் தன் மகனும் ஒன்றாய்க் குலவுவதைக் கண்ட தாய்ப்பசு, பெருமையோடு அதைத் தன் துணைவனுக்குச் சுட்டிக் காட்டுவதற்காக அடுத்த வீட்டுப் பக்கம் திரும்பியது.

அடுத்த வீட்டுக் காளைதான் அந்தப் பசுவுக்குத் துணை; அதன் குழந்தைகளின் தகப்பன்.

அந்தச் செவலைக் காளையும் அப்போது துள்ளிக் குதிக்கும் தன் கன்றுக்குட்டியைத்தான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. “பார்த்தாயா உன் மகனை, உன்னைப் போலவே பிறந்திருக்கிறான்!” என்று பசு தன் கண்களால் பேசிய பேச்சை அது புரிந்து கொள்ளாமல் இல்லை.

காளைக்கன்று ஓடியாடித் திரிந்து விட்டுத் தன் தாயின்

அருகில் வந்து நின்றது. அதன் தோழனான குமரனும் கன்றுக்குட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு பசுவின் அருகில் வந்தான். பசு இருவரையும் மாறி மாறிப் பார்த்தது. இரண்டு குழந்தைகளுமே தன் குழந்தைகள் என்பது போல் நாக்கால் குமரனையும் கன்றுக் குட்டியையும் மாறி மாறித் தடவிக் கொடுத்தது.

ஒருவகையில் பார்க்கப் போனால் குமரனும் தாய்ப் பசுவின் குழந்தைதான். மாடசாமியின் மனைவி அவனைப் பெற்றுவிட்டாளே தவிர, அவளிடம் பிள்ளையை வளர்ப்பதற்குப் பால் இல்லை. பசுவின் பால்தான் இப்போது அவனுடைய தேகத்தில் ஓடும் இரத்தம்.

இரண்டு மூன்று நாட்கள் சென்றன.

காளைக் கன்றுக்குட்டிக்குக் கழுத்துச் சங்கிலியோடு வாய்ப்பூட்டான கூடையும் கிடைத்தது. நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியவில்லை.

பால் கறக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக்குட்டியை அவிழ்த்துவிடும் மாடசாமி, சரியாகப் பால் சுரந்து அதன் வாய்க்கு வரும் நேரத்தில் அதை இழுத்துப் பிடித்துக் கட்டி விட்டுக் கறக்கத் தொடங்கிவிடுவான். அவன் கறந்து முடித்துவிட்டு அவிழ்த்து விடும் போதோ மடியில் ஒரு சொட்டுப் பால் கூட மீதமிருக்காது.

கன்றுக்குட்டி முட்டிப் பார்க்கும்; மோதிப் பார்க்கும்; கதறிப் பார்க்கும். இந்தத் துடிப்பைக் காணும் அடுத்த வீட்டுக் காளையோ தன் அடித் தொண்டையிலிருந்து குரல் எழுப்பும்; குறுக்கே நிற்கும் சுவரில் தன் கொம்புகளை அது மோதுவதும் உண்டு.

தாய்ப்பசுவுக்கோ இந்த வேதனைகளைத் தாங்கவே முடிவதில்லை. அதனால் என்ன செய்யமுடியும்?

கன்றுக் குட்டியின் கன்னங்கரிய பெருவிழிகள் இரண்டும் ஒளி இழந்து வந்தன. அதனால் துள்ளவும் முடியவில்லை. குதிக்கவும் முடியவில்லை. தளதளவென்று சதைப் பிடிப்போடு இருக்கவேண்டிய மேனியில் எலும்புக் கூடு புறப்படத் தொடங்கியது.



கன்று தாயை ஏக்கத்தோடு பார்க்கும்; தாய் ஏக்கத்தோடு கன்றைப் பார்க்கும். இரண்டும் சேர்த்துப் பார்க்கும் அடுத்த வீட்டுக் காளையோ மூச்சுவிடுவதற்குப் பதிலாக நெருப்புக் கனலைக் கக்கும்.

இந்தச் சமயத்தில்தான் ஒருநாள் மாடசாமி வழியில் போய்க் கொண்டிருந்த மற்றொரு பால்காரனைக் கூப்பிட்டு அவனோடு ஏதோ பேச்சுக் கொடுத்தான். அந்தப் பால் காரனின் தோளிலும் ஒரு கன்றுக்குட்டி இருந்தது. ஆனால், அது உயிரில்லாத கன்றுக்குட்டி, தோலை உரித்து உள்ளே வைக்கோலைத் திணித்து, ஏதோ குச்சிகளை வைத்துக் கட்டி, சோளக் கொல்லை பொம்மை போல் ஒரு உருவத்தை வைத்துக் கொண்டிருந்தான் அவன்.

“மாடசாமி! கிடாரிக் கண்ணுக்குட்டியா இருந்தாலும் பரவாயில்லை. வளர்த்தாலும் நாளைக்குப் பால் கொடுக்கும். நல்ல விலைக்கு யாரும் கேட்டாலும் கொடுத்திடலாம்.. இதை வச்சுக்கிட்டடு என்ன செய்யப் போறே?'' ‘‘என்ன செய்யறதுன்னுதான எனக்கும் புரியலே. ஒரு நாளைக்கு இதுவே ஒரு படிப் பாலைக் குடிச்சிடும் போலே இருக்கு!”

மாடசாமியின் பேச்சைத் துளிகூட நம்பாத அந்தப் பால்காரன் கலகலவென்று சிரித்தான். “செய் செய் நான் எதைச் செய்தேனோ அதைத்தான் நீயும் செய்துகிட்டுவர்றே! துணிஞ்சு செய்! இன்னம் ஒரு வாரம் இப்படியே செய்தீன்னா தன்னாலே எல்லாம் சரியாப் போகும்!”

சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே அவன் போய் விட்டான். ‘மனிதர்களையும் சரி, மிருகங்களையும் சரி, வயிற்றில் அடித்துப் பட்டினிபோட்டு அணுஅணுவாகக் கொன்றால், அதைத் தடுப்பதற்கு எந்தச் சட்டமுமில்லை’ என்று அவன் மறைமுகமாக உபதேசம் செய்துவிட்டுக் கிளம்பி விட்டான்.

ஒரு வாரம் கூடத் தாங்கவில்லை. ஒருநாள் காலையில் கன்று குட்டியின் முகத்தில் ஈக்கள் மொய்த்தன. அதை எங்கேயோ இழுத்துக் கொண்டு போய்விட்டான் மாடசாமி. சில தினங்களுக்குள்ளாகவே தாய்ப் பசுவுக்கு முன்னால் ஒரு வைக்கோல் போர் அடைத்த கன்றுக் குட்டியைக் கொண்டு

"வந்திடும், இல்லாட்டா முன்னாடியே கொடுப்பாரா?"... இது எவ்வளவு அழகா இருக்கு பாருடா! இந்த உள்ளூ இப்ப என்ன ஜோரா இருக்கு பாத்தியா! அந்தக் கிருஷ்ணர் உடம்பைப் பாத்தியா, பளபள பளபளன்னு! தலையிலே பார், மயில்தோகை! நெஜம் மயில் தோகை மாதிரி இல்லே! இதைப் பார்த்துக்கிண்டே நிக்கணும் போல இருக்குடா எனக்கு! சாப்பிடப்படாது; பள்ளிக்கூடம் போகப்படாது; தூங்கப்படாது; ராத்திரிகூட லைட்டைப் போட்டுண்டு இதைப் பாத்துக்கொண்டே நிக்கணும்..."

"ஏய் மணி ஒன்பது அடிக்கிறதுடா, காப்பி எழுதவே இல்லியே!"

"ஆமாண்டா ஐயையோ.... கிடுகிடுன்னு எழுதணும்".

"இன்னிக்கு எழுத்து நன்னாவே இல்லேடா. அவசர அவசரமா எழுதினா இப்படித்தான். நீ படம் படம்னு காலண்டரைப் பார்த்துண்டே நின்னுட்டே; சரி, நான் போய்ட்டு வரட்டுமா?"

"சரி"

"போய்க் குளிக்கிறத்துக்குக் கூட நாழி இல்லை"

"ஆமாம்டா, சட்டுனு போ"

"ஏய் ரமணா!"

"என்ன?"

"நீ செய்வியா?"

"நான் ஒண்ணு சொல்றேன்; அது மாதிரி நீ செய்யறியா"
"என்ன"

"என்னன்னு சொல்லேன்"

"நீ செய்வேன்னு சொல்லு"

"என்னன்னு சொன்னாத்தானேடா தெரியும்"

"நீ செய்வியா, மாட்டியா?"

"போடா"



தரையைக் குத்திக் கிளறி, ஒவ்வொரு கொம்பிலும் ஒவ்வொரு பிடி மண்ணைச் சுமந்துகொண்டு, அது அடுத்த பாய்ச்சலுக்கு மாடசாமியின் மகன் குமரனைக் குறி வைத்தது.

மாடசாமி வெடவெடத்துப் போனான். மகனைக் காப்பாற்றப் போனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்ற பயம் வந்துவிட்டது அவனுக்கு. குலை நடுக்கத்தில் ஏதோதோ உளறிக் கூக்குரலிட்டான்.

நொடிப்பொழுதில் என்னென்னவோ நடந்து விட்டது.

தாய்ப்பசு முளைக் கயிற்றை அறுத்துக்கொண்டு, நாலு கால் பாய்ச்சலில் போய்க் குமரனுக்கும் காளை மாட்டுக்கும் இடையில் நின்றது. காளைமாட்டின் கொம்புகள் அதன் கழுத்தில் பாய்ந்தன. குறுக்கே விழுந்த பசுவைக் கண்டவுடன் காளையின் சீற்றம் பசுவின் பக்கம் திரும்பியது. அது அலறிய அலறலில், "கொலைக்குக் கொலை! பழிக்குப் பழி" என்ற ஆவேசம் குமுறியது.

தாய்ப்பசுவும் பதிலுக்கு அதைப் பார்த்துக் கதறியது. "சீ! நீ என்ன, மனிதனைப் போல் கேவலமாய் நடந்து கொள்கிறாய்? குமரனும் என்பால் குடித்து வளர்ந்தவன்!... உனக்கு ஏன் இவ்வளவு வெறி வந்துவிட்டது?" என்று ஆத்திரத்தோடு கதறியது.

'மனித'னான மாடசாமிக்கு எதுவுமே புரியவில்லை! மாடுகள் புரிந்துகொண்டு கண்ணீர் வடித்தன.

# 5. சத்தியமா!

– தி. ஜானகிராமன்

"இது ஏதுடா காலண்டர்?"

"நான்தாண்டா வாங்கிண்டு வந்தேன் - மண்ணெண்ணெய்க் கடை நாயக்கர் கிட்டேருந்து".

"ரொம்ப நன்னாருக்குடா. என்ன விலைடா இது?"

"விலைக்குக் கொடுக்கமாட்டா இந்தக் காலண்டரை, தெரிஞ்சவாளுக்கு மாத்திரம் இனாமாகக் கொடுப்பா".

"உங்கப்பாவுக்குத் தெரியுமா அவரை?"

"எங்கப்பாவுக்குத் தெரிஞ்சிருந்தா ஜனவரி மாசமே வாங்கியிருக்க மாட்டாரா?" நான்தான் அந்தக் கடை வாசல்லே நின்னுண்டு தினமும் பார்த்துண்டேயிருப்பேன். அந்தக் கிருஷ்ணர் சிரித்த மூஞ்சியா புல்லாங்குழல் வாசிக்கிறார்பாரு; காது ரெண்டையும் தூக்கிண்டு அந்தப் பசுங்கன்னுக்குட்டி அதைக் கேட்டுண்டு நிக்கிதுபார், எவ்வளவு அழகாயிருக்கு பாத்தியா! நித்தியம் பள்ளிக் கூடத்திலேருந்து வரப்போதெல்லாம் அதைப் பாத்துண்டே நின்னிண்டிருப்பேன். அங்கே ஒரு கணக்குப்பிள்ளை இருக்கு பாரு. ஒல்லியா, குடுமி வச்சிண்டு, உர்ருன்னு மூஞ்சியை வச்சிண்டு, ஓணான் மாதிரி! ஜுன் மாதம் பள்ளிக்கூடம் திறந்த உடனே 'மாமா மாமா, அந்தக் காலண்டரை எனக்குத் தரேளா?'ன்னு கேட்டேன். அது 'பத்து ரூபா'டா விலை காதிலே பென்சிலை வச்சிண்டு, மூக்கு நுனியிலே கண்ணாடியை நழுவி விழுந்துடறாபோலப் போட்டுண்டு நிமிந்து பாத்துச் சொல்லித்து, ஒரு ரூபா தரேன்னான். மாட்டேன்னுடுத்து, தினமும் கேட்டுண்டே இருந்தேன். அதெல்லாம் கொடுக்கறதுக்கு இல்லே. கம்பெனிலேயிருந்து ஒண்ணே ஒண்ணுத்தான் அனுப்பிச்சிருக்கா, கடையிலே வச்சுக்கணும்னு அதனாலே அதைக் கொடுக்கப்படாது. கொடுத்த கம்பெனிக்காரன் கோச்சுக்குவான்'னு சொல்லிடுத்து. நான் அப்புறம் கேக்கவே இல்லெ. ஆனா, தினமும் பார்த்துண்டே ரொம்ப நாழி நிப்பேன்.



நேத்திக்கு என்ன ஆச்சு தெரியுமா? முதலாளி இருக்காரு பாரு, குப்புசாமி நாயக்கர், நாமம் போட்டுண்டு அம்மை வடுமூஞ்சியா, வெத்திலை போட்டுண்டே இருப்பாரே, வைரக்கடுக்கன் போட்டுண்டு?".

"குண்டா!"

"ஆமாம், அவரே நேத்திக்குச் சாயங்காலம் உக்காந்திருந்தார். நான் பாத்துண்டே நின்னிண்டிருந்தேன். அவர் ரொம்ப நல்லவர்டா! அவர் என்ன செஞ்சார் தெரியுமா? 'ஏய்தம்பி!'ன்னு கூப்பிட்டார். கிட்டப் போனேன். 'நீ யாரு?'ன்னார். 'ஸப் ரிஜிஸ்தர் கே.ஒய். சுந்தரம் பிள்ளை'ன்னேன். 'எத்தனாவது படிக்கிறே?'ன்னார்? 'பஸ்ட் பாரம்'ன்னு சொன்னேன். 'எதுக்காக வெறுமனே வெறுமனே இங்கே வந்து நிக்கறே?'ன்னார். 'அந்தக் காலண்டரைப் பாக்கறதுக்காக நிக்கறே'ன்னேன். 'அது உனக்கு வேணுமா?'ன்னு கேட்டார் அவர். 'ஒண்ணே ஒண்ணுதான் கம்பெனியிலேர்ந்து அனுப்பிச்சாளாமா! அதைக் கொடுத்தாக் கோச்சுப்பாளா'மேன்னேன். 'யார் சொன்னா அப்படி உனக்கு?'ன்னு கேட்டார். "அந்த குமாஸ்தா மாமா சொன்னார்'னு சொன்னேன். உடனே அவர் என்ன பண்ணினார் தெரியுமா? 'கணகுப் பிள்ளே!'ன்னு கூப்பிட்டார். 'ஏன்?'னு அது மூக்குக் கண்ணாடியை மூக்கு நுனியிலே வச்சிண்டு நிமிர்ந்து பாத்துது. 'ஒரு கார்டை எடுத்து இந்தக் காலண்டரைக் கொடுத்துட்றதுக்கு உத்தரவு போடணும்னு இன்னிக்கே கம்பெனிக்கு எழுதிப்போடுங்க. உடனே அர்ஜென்டா ஆர்டர் போடச் சொல்லணும் தெரியுமா?' என்று நாய்க்கர் சொன்னார். அவரே சொல்லிப்பிட்டார். என்ன செய்வது? அது சரீன்னுடுத்து.

"அந்தக் காலண்டரை எடுத்து இப்படிக்கொடுங்க"ன்னார் நாயக்கர். அது எடுத்துக் கொடுத்தது, அவர் கையிலே அதை வாங்கி, 'தம்பி, உனக்காக ஸ்பெஷலா ஆர்டர் போட்டுடச் சொல்றேன். இந்தா எடுத்துக்கிட்டுப் போ. ஜாக்கிரதையா வச்சுக்க'ன்னு சொன்னார். சரி மாமா'ன்னு நான் எடுத்துக்கிட்டு வந்துட்டேன். எவ்வளவு நல்லவர் பாத்தயா? இன்னொருத்தர்னாக் கொடுப்பாளா? எனக்காக அர்ஜென்டா ஆர்டர் வாங்கிக்கிறேன்னு சொன்னார்".

"ஆர்டர் வராட்டா?"

“ஏண்டா, மாட்டேன்னு சொல்லறதுக்கென்ன? இதுக்கு வாயில்லையே இந்தப் பிள்ளைக்கு”

“கையிலே மூணு தரம் சத்யமாச் செய்யறேன்னு அடிச்சுக் கொடுத்தேன். எனக்கு அதை கேக்கப் போறான்னு தெரியுமா?”

“அதுக்குத்தான் அவ்வளவு கஷ்டப்பட்டு அதை வாங்கிண்டு வந்தியா?”

“அந்தப் புள்ளைக்குத்தா அதைக் கேக்க மனசு வந்துது பாருங்களேன்! ஏ அம்மாடி! அப்பன், ஆயி பிள்ளை எல்லாம் ஒண்ணைப் பாத்தாப்போல ஒண்ணு இருக்கு. எரிச்சல்! அசூயை, பிறத்தியார் பண்டத்திலே ஆசை எல்லாத்தையும் பிள்ளை அப்படியே வாங்கிண்டிருக்கான்”

“நான் கூப்பிடறேன். எப்படி ஓடறான் தெரியுமோ அந்தப் பய! ஒரு நொடியிலே வீட்டுக்குள்ளே மறைஞ்சுட்டான்!”

“பண்டம் போயிடுத்தே, அதுக்கு என்ன வழி இப்போ?”

“ஏய் ரமணா, நீ தான் வாங்கிண்டு வரணும் அதைத் திருப்பி”

“.................................”

“என்ன பேசாமெ நிக்கறே? இதே மாதிரி அவன் வித்தையை அவன்கிட்டே காமி. அவன் கிட்டேயும் சத்தியம் வாங்கிண்டு அந்தக் காலண்டரைத் திருப்பி வாங்கிண்டு வந்துடணும். என்ன?”

“.....................”

“என்ன பேசமாட்டேங்கறே?”

“எப்படிப்பா வாங்கறது?”

“அவன் கேட்டாப் போலவே, சத்யமாச் செய்யறேன்னு சொல்லச் சொல்லி அதைக் கேட்டு வாங்கிண்டு வா. வந்தாத்தான் ஆச்சு இல்லாட்டாச் சோறு கிடையாது”

“காலண்டரை இஞ்ச மாட்டிப்பிட்டியாடா சின்னாணி”

“இந்த இடத்திலே மாட்டினா நன்னா இருக்கோல்லியோ?”

“நன்னா இருக்கு....”



“அப்பன்னா நான் போறேன், போ”

‘‘ஆமாண்டா, நீ உடனே கோச்சுக்கறே, என்ன செய்யணும்னு சொல்லேன்”

“செய்வேன்னு சொல்லு”

“சரிடா, செய்யறேன்”

“நிச்சயமாச் செய்யறேன்னு சொல்லு”

“நிச்சயமாச் செய்யறேன்”

“சத்யமாச் செய்யறேன்னு சொல்லு”

“சத்யமாச் செய்யறேன்”

‘‘என் உள்ளங்கையிலே அடிச்சு மூணு தடவை சாமி சாட்சியா, சத்யமாச் செய்யறேன்னு சொல்லு”

“சாமி சாட்சி சத்யமாச் செய்யறேன். சத்யமாச் செய்யறேன். சத்யமாச் செய்யறேன். போதுமா?”

“அப்புறம் மாட்டேன்னு சொல்லப்படாது”

“இல்லெ”

“சொல்லட்டுமா?”

“சொல்லேன்”

“அந்தக் காலண்டரை எனக்குக் கொடுத்துடு”

“இதையா, இந்தக் காலண்டரையா!”

“ஆமாம்”

‘‘நேத்திக்கு ராத்திரி தானேடா வாங்கிண்டு வந்தேன். இன்னொரு காலண்டர் தரேனே. இதைவிட நன்னா இருக்கும்”.

“எனக்கு இதுதான் வேணும்”

“என்னடா நீ?”

“என்னமோ சத்யமாக் கொடுக்கறேன்னு சாமி சாட்சியாச் சொன்னியே”

"அதுக்காக இதைக் கொடுக்கச் சொல்றியே"

''சத்தியம் பண்ணிப்பிட்டா எதைக் கேட்டாலும் கொடுக்கணும். அதுவும் சாமி சாட்சிச் சொல்லியிருக்கே".

"சத்யமாச் செய்யறேன்"

"சரிடா, தரேன்"

"............................................."

"இந்தா"

"சரி நான், போயிட்டு வரட்டுமா?"

"ஓடுடி, ஓடு. இந்தப் பயலுக்கு இருக்கிற சாமர்த்தியத்தைப் பாரு. ஓடுடி, ஓடு. கூப்பிடு அந்தப் பயலை"

"யாரை?"

''எதிர்த்த வீட்டுப் பயலைடி; கூப்பிடேன். அப்புறம் பேசிக்கலாம். சரி, நான் கூப்பிடறேன். எலே, சின்னாணி, இஞ்ச வரியா இல்லையா, ஏய் ஓடறதைப் பாரேன்".

"ஏன் திரும்பி வந்துட்டேள்?"

"வீட்டுக்குள்ளே ஓடிப்போயிட்டான்"

"ஏன் என்னத்துக்கு"

''உம் பிள்ளை இருக்கான் பாருடி ஜடபரதர். அதை ஏச்சுப்பிட்டான் அந்தப் பய"

"என்ன?"

"ரூம்லெ உக்காந்து கேட்டுண்டே இருந்தேன். என்னமோ, 'சத்யமாச் செய்யறேன்னு சொல்லு; சத்தியமாச் செய்யறேன்னு சொல்லு'ன்னு அந்தப் பய இவனைக் கேட்டுண்டே இருந்தான். இதுவும் செய்யறேன்னு சொல்லித்து. அந்தக் காலண்டரை வாங்கிண்டு போயிட்டான் அந்தப் பய".

"எதை? நேத்திக்கு வாங்கிண்டு வந்தானே, அதையா?"

"ஆமாம்"



"ஐயையோ! துடைகாலி! நன்னா இருந்துதே! ஏண்டா கொடுத்தே அதை? ஏன் விசும்பி விசும்பி அழறே கொடுத்துட்டு? சரி, அழாதே ஏன் கொடுத்தே?"

''ஒண்ணுசொல்வேன் செய்யறியா செய்யறியான்னு கேட்டான். சத்தியமாச் செய்யணும்னு சொன்னான். சாமி சாட்சியா, சத்தியமாச் செய்யறேன்னு சொன்னேன். அப்புறம் அந்தக் காலண்டர் வேணும்னு கேட்டுட்டான்".

"மாட்டேன்னு சொல்றதுக்கு என்ன?"

"சத்தியம் பண்ணினப்புறம் எப்படி மாட்டேங்கிறதாம்?"

"நீ எப்படிடா பொழைக்கப்போறே! தரித்ரமே! அழகாப் பளிச்சுனு இருந்ததே! அதைப்போய்க் கொடுத் திட்டியே. அப்பாவைக் கேட்காமெ கொடுக்க மாட்டேன்னு சொல்றதுக்கென்ன"

"..........................."

"என்னடா முழிக்கிறே?"

''அவன் தானேடி வாங்கிண்டு வந்திருக்கான். சுதந்தர பாத்தியமாக் கொடுத்திட்டான்".

"கொடுத்துட்டு அழுதுண்டு நில்லு"

"அந்தப் பய அப்படிப் பண்ணிவிட்டான்டி அவனை. ஆணி அறஞ்சாப்போலென்னா சத்தியம் வாங்கிப்பிட்டான். இனிமே, பொழைக்கிற பிள்ளைன்னா வக்கீல் குமாஸ்தா கணேசன் பிள்ளை மாதிரி பிறந்து வரணும். முன்னாடி, ஒண்ணு சொல்றேன் செய்வியான்னான். இவன் என்ன, என்னன்னு தலைகீழே நின்னான். அந்தப்பய சொல்ல மாட்டேன்னுட்டான். அப்புறம் கோச்சுக்க ஆரம்பிச்சான். இவன் சமாதானம் பண்ணினான் அவனை. அப்புறம் அந்தப் பய சத்யம பண்ணச் சொன்னான் இவனை. இது பண்ணித்து கடைசியிலே அடி மடியிலே கையைப் போட்டுட்டான் அந்தப் பய! எவ்வளவு அஸ்திவாரம்! எவ்வளவு பீடிகை! இது கொடுத்துட்டு அழறது! எனக்கு ஆச்சரியமாயிருக்கு".

“அதைக் கேக்கலியா?”

“அது எனக்கு வாண்டாம்பா. எனக்கு இது பிடிக்கலெ”

“ஏண்டா?”

“என்னமோ பிடிக்கலெ”

“பலேடா சிங்கம்… சரி போ”

“ஏய் யாரு உள்ளே, இஞ்ச வாயேன்”

“என்ன”

“இஞ்ச வா”

“குழந்தை எங்கே?”

“சாப்பிடச் சொன்னேன். கொல்லையிலே போயிருக்கான் கைகால் அலம்ப’

‘‘இதைப் பாரு, உம் பிள்ளை சாமர்த்தியத்தை, எதிராளாத்துப் பயல்கிட்டேருந்து இதைச் சாமர்த்தியமா வாங்கிண்டு வந்துட்டானாம்! சொல்லிக்கிறான்”

“இது என்ன ரப்பரா?”

‘‘மசி அழிக்கிறதாம் ரொம்ப ஒஸ்திங்கறான். காலண்டருக்குப் பிரதி”

“நீங்க ஏன் காலண்டர் காலண்டர்னு நச்சரிக்கிறேள் அவனை?”

“இல்லேடி இந்த மாதிரி தெய்வங்கள்லாம் இந்தப் பூமிலே ஏண்டி பிறக்கிறதுகள்? இது கெட்டிக்கார உலக மாச்சே. அதுக்குன்னு சொல்றேன்”.

“உங்க மனசு இன்னும் பலமாத்தான் இருக்கு. கண்ணைத் துடைச்சுக்குங்கோ வாங்கோ சாப்பிட. வயசானாத் தானா புத்தி வராது”.



‘‘ஆமாம்மா, ரமணன்தாம்மா இந்தக் காலண்டரை, இவன்தாம்மா எனக்குக் கொடுத்தான்”

“ஏண்டா. நீதான் கொடுத்தியா?”

“ஆமாம் மாமி”

“சின்னாணீ. கிழிச்சுப்பிடாமெ ஜாக்கிரதையா வச்சுக்கோ”

“சரீம்மா…. ஏய் வாடா. வாசல்லே போய் விளையாடுவோம்”

“ஏய் அந்தக் கன்னுக்குட்டி எப்படிக் காதைத் தூக்கிண்டு நிக்கறது பார்”

“ஆமாம்”

“மொழு மொழுன்னு எப்படி இருக்கு பார். அது”

“ஆமாம்… போவோமா?”

“இருடா போவோம்”

“அப்புறம் நாழியாயிடும, இருட்டிப் போயிடும்”

‘‘போறதுன்னா இப்பவே போய் விளையாட்டிட்டு வந்துடணும். ராத்திரி எட்டு மணிக்கு வரப்படாது! தெரியறதாடா?”

“சரீம்மா, பாத்தியாடா; சட்டுன்னு வாடா, அப்புறம் நாழியாயிடுத்துனா எங்கம்மா அடிப்பா”

“சரி”

“என்ன விளையாடலாம்?”

“ஏதாவது விளையாடலாம்டா”

“ஏதாவதுன்னா?”

“ஏதாவது விளையாடுவோம்”

“ஏன், உனக்கு உடம்பு சரியா இல்லை?”

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை”

“பின்னே ஏன், என்னமோபொலே இருக்கே”

“ஒண்ணுமில்லை... இன்னிக்கு விளையாட வாண்டாமே”

“ஏன்?”

“சும்மாத்தான்”

“பின்னே விளையாடாமே என்ன பண்ணறது?”

“நான் ஒண்ணு சொல்றேன். கேக்கறியா?”

“என்ன”

“நான் ஒண்ணு கேப்பேன் தருவியா?”

“என்ன?”

“தரேன்னு சொல்லு”

“என்னன்னு சொல்லு”

“நீ தரேன்னு சொல்லு”

“முடிஞ்சாத் தரேன்”

“அப்படின்னா?”

“எனக்குத் தர முடிஞ்சாத்தான்”

“உனக்கு முடியும்”

“என்ன சொல்லேன்”

“நிச்சயமாத் தரேன்னு சொல்லு”

“முடிஞ்சா நிச்சயமாத் தரேன்”

“சத்யமா”

“முடிஞ்சாச் சத்யமாத் தரேன்”

“வந்து, வந்து நீ ஒரு ரப்பர் வச்சிருக்கே பாரு, பென்சில் மசி ரண்டையும் அழிக்குமே, அதைக் கொடுப்பியா?”

“அப்பாடா, இதானே! என்னடாப்பான்னு பாத்தேன். வேற எதையோ கேக்கப் போறேன்னு நெனைச்சுட்டேன்”. “என்ன?”

“உனக்கு இப்பவே வேணுமா?”



“இப்பவே வாண்டாம். விளையாடி முடிஞ்சப்புறம் உன் வீட்டுக்கு வந்து வாங்கிக்கறேன்”.

“இப்பவே இருக்கு. ட்ராயர் பையிலே. இதோ பாத்தியா இந்தா எடுத்துக்கோ. அப்புறம் ஒண்ணும் கேக்கப்படாது”.

“இல்லெ”

“எங்கேடா, காலண்டர்?”

“பாத்தியாப்பா, சின்னாணி கிட்டேருந்து இந்த ரப்பரை வாங்கிண்டு வந்துட்டேன். இது மசியைக்கூட அழிக்கும்பா ஒஸ்தி ரப்பர்!”

“காலண்டர் கேட்டியா?”

“இல்லை”

“ஏன்”

“எப்படிப்பா கேக்கறது?”

“அவன் கேட்ட மாதிரியே கேக்கறது”

“வாண்டாம்பா”

“என்னடா வாண்டாம்”

“எனக்குப் பயமாயிருக்கு”

“என்ன பயம்?”

“கேக்கறதுக்கு”

“எதைக் கேக்கறதுக்கு?”

“அதைத்தாம்பா, காலண்டரை”

“என்ன”

‘‘இந்த ரப்பர் ஒஸ்தி ரப்பர் அப்பா, இது இப்பக் கிடைக்கவே இல்லெ”

“இதைத்தான் கேட்டியா”

“ஆமாம்”

"நம்ம அப்பா மாதிரி இந்த ஊரிலே யாரு பிள்ளைகளுக்கு இப்படிப் பகிர்ந்து கொடுத்திருக்காங்க" என்று பிள்ளைகள் பெருமையாக நினைத்துக் கொண்டார்கள்.

"பொல்லாத கிழவரு! இது மாதிரி இன்னும் எம்புட்டுப் பணத்தை எங்கெங்கே புதைச்சி வச்சிருக்காரோ?" என்று எல்லோரும் நினைத்தார்கள்.

பாறைப்பட்டி கவலைப்பட்டார்.

"இப்போ இந்தக் கிழவர் பண்ணியது வம்பான வேலை. பையன்களுக்கு ஏற்கெனவே போதுமான அளவு கொடுத்திருக்காரு. வத்தல், பருத்தி, உளுந்து, மல்லி முதல் கொண்டு அவ்வளவும் கொடுத்தாச்சு. இப்பப் போயி இவரு ஏன் பணத்தையும் பகிர்ந்து கொடுக்கணும். நோக்காடு, சாவுன்னா பிரயோசனப்படுமே'' என்று பாறைப்பட்டி நினைத்துக் கொண்டார்.

நிம்மாண்டு, பாறைப்பட்டியைப் பார்த்துச் சொன்னார். "இத்தனை நாள் பிள்ளைகள் என் கையை எதிர்பார்த்து இருந்தாங்க. இனி நான் அவங்க கையை எதிர்பார்த்து இருக்கணும்" என்று சொன்னார்.

பிறகு பிள்ளைகளைப் பார்த்துச் சொன்னார். "பாருங்கப்பா! இருக்கிறது எல்லாத்தையும் உங்களுக்குக் கொடுத்தாச்சு. அம்மா போட்டிருக்கிற கம்மல், நான் போட்டிருக்கிற வெள்ளி அரணாக்கயிறு மட்டும்தான் மிச்சம். இனி எங்களுக்கென்ன? மூணு வேளைக் கஞ்சி. கட்டிக்கிடத் துணி, தலைக்கு எண்ணெய்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார் நிம்மாண்டு நாயக்கர்.

நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் ஒவ்வொரு மாதமும் ஒரு மகன் வீட்டில் இருப்பது என்று முடிவானது.

முதல் தடவை எந்தப் பிரச்சனையும் இல்லை. நாலு வீட்டிலும் நல்ல கவனிப்பு. நாளாக நாளாக நிலைமை மோசமானது.

மூன்று வேளைச் சாப்பாடு இரண்டு வேளை ஆனது. இரண்டு வேளைக் காப்பி ஒரு வேளை ஆனது. பேரக்காள்



# 6. காய்ச்ச மரம்

**- கி. ராஜநாராயணன்**

நிம்மாண்டு நாயக்கர் வயசாளி. பேரக்காள் அவர் மனைவி. அந்த இருவரின் முடிவு காலத்தைப் பற்றிய கதை இது.

நிம்மாண்டு நாயக்கர் பெரிய சம்சாரி. எம்பது ஏக்கர் கருசக்காடு.

நாலு சோடி உழவு மாடு. தொழு நிறைய கால்நடைச் செல்வங்கள். நிறைஞ்ச வெள்ளாமைக் குடியிருக்கும் வீடு பூர்வீக வீடு போக மூணு கார வீடுகள்.

நிம்மாண்டு நாயக்கருக்கும் பேரக்காளுக்கும் மொத்தம் 8 பிள்ளைகள். 4 ஆம்பளப் பிள்ளைகள், 4 பொம்பளப் பிள்ளைகள். பொம்பளப் பிள்ளைகளை நல்ல இடத்துல கட்டிக் கொடுத்திருக்கு. ஆம்பிளப் பிள்ளைகள் நாலு பேருக்கும் நல்ல இடத்திலே பெண் எடுத்திருக்கு. நிம்மாண்டு நாயக்கருக்கு பேரக்காளுக்கும் பிள்ளைகள் மேல் கொள்ளைப் பிரியம் பேரக்காள் வாக்கப்பட்டு வரும் போது 100 பவுன் நகையோடு வந்தாள். அந்தக் காலத்திலே நூறு பவுன்னா சும்மாவா? பொம்பளப் பிள்ளைகளுக்குப் போட்டது போக மீதியைப் பேரப் பிள்ளைகளுக்கும் போட்டாச்சு.

நாளடைவில் சொத்தைப் பிரிக்கணும். சொத்தைப் பிரிக்கணும் என்று சிறிசுகளுக்குத் தோன்ற ஆரம்பித்தது. ஆனால், சொத்தைப் பிரிச்சுக் கொடுங்க என்று நேரடியாக அப்பாவைக் கேட்க பையன்களுக்குப் பயம். எப்படியோ இந்த விசயம் பெரியவரின் காதுகளுக்கு எட்டியது. ஒரு நாள் பருத்திக் காட்டுக்குப் போய்விட்டுத் திரும்பும் போது அலுப்புத் தாங்க முடியாமல் நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள். பேரக்காளைப் பார்த்து, பேரக்காள் என்னடி சொல்றே? பையன்கள் சொத்தைப் பிரிக்கணும்னு ஆசைப்படுறாங்களாம். நீ ஏதும் கேள்விப்பட்டாயா?" என்றார் நிம்மாண்டு.

"இதிலே என்ன இருக்கு?" எப்ப இருந்தாலும் அவங்ககிட்ட

ஒப்படைக்க வேண்டிய பாரம்தானே. பிரிச்சுக் கொடுத்திட வேண்டியது தானே? நமக்கும் வயசாகிப் போச்சு. கிட்ணா, ராமான்னு உட்கார்ந்து சாப்பிட வேண்டிய காலத்திலே ஏன் இப்படி லோலோன்னு அலைஞ்சு திரியணும்'' என்றாள் பேரக்காள்.

பேரக்காள் சொன்ன பிறகு அப்பீல் ஏது?

மறுநாள் பையன்கள் நாலு பேரையும் வரச் சொன்னார். நிம்மாண்டு நாயக்கர். பாகப் பிரிவினை பற்றி அவர்களிடம் பேசினார். அவர்களும் சரி என்று தலையாட்டினார்கள்.

"சரி, அப்ப நீங்க மத்தியஸ்தர் ஒருவரைக் கூட்டி வாருங்கள்" என்றார் பெரியவர்.

"நீங்க பார்த்து எப்படிச் செய்தாலும் சரிதாம்பா. நீங்க என்ன ஒரு கண்ணில் வெண்ணெயும், ஒரு கண்ணில் சுண்ணாம்புமா வைக்கப்போறீங்க" என்றார்கள் பையன்கள்.

"அப்படி இல்லேடா கோட்டிப் பயபுள்ளைகளா! பாகம் பிரிக்கிறதுண்ணா மத்தியஸ்தர் ஒருத்தர் கட்டாயம் வேணும். போயி யாரையாவது ஒருத்தரைக் கூட்டிக்கிட்டு வாங்க" என்றார் பெரியவர்.

பையன்கள் நால்வரும் பாறைப்பட்டி கந்தசாமி நாயக்கரைக் கூட்டி வந்தார்கள். பாறைப்பட்டி நாயக்கர் எல்லோருக்கும் பொது வானவர். ஊர்ப் பெரிய மனுசன். தெற்கு வடக்கு போய் வரும் மனுசன். விபரம் தெரிந்தவர்.

பாறைப்பட்டி நாயக்கர் வந்தார். "வாங்க பாறைப்பட்டி மாப்ள!" என்று சிரித்தபடி நிம்மாண்டு நாயக்கர் வரவேற்றார். பாறைப்பட்டி நாயக்கர் தொழுத்திலேயே உட்கார்ந்து கொண்டார். வீட்டுக்குள் உட்கார்ந்தா வெத்திலை எச்சி துப்பி எந்திரிச்சு எந்திரிச்சு வெளியே வரணும். தொழுவம்தான் சரி.

பேரக்கா காப்பித் தண்ணி கொண்டு வந்தாள். காப்பி குடித்த பின்பு பாறைப்பட்டி நாயக்கர் வெற்றிலை போட்டார். நிம்மாண்டு மெல்லப் பையன்களின் ஆசைகளைச் சொன்னார்.



"என்னக்கி இருந்தாலும் அதைச் செஞ்சிட வேண்டியது தானே" என்று ஒத்துக்கொண்டார் பாறைப் பட்டி நாயக்கர்.

வீட்டிலிருந்த பருத்தி, வத்தல், மல்லி, தானியங்கள் உட்பட மொத்த சொத்தும் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டன. எல்லாம் வாய்க்கணக்காகவே. சரி தானே என்று கேட்டார் பாறைப்பட்டி. பையன்கள் தங்கள் மனைவிமார்களிடம் சென்று கலந்து பேசினார்கள். பின்பு வந்து சரி என்றார்கள்.

நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்ட சொத்துக்கள் துண்டுச் சீட்டுக்களில் எழுதப்பட்டன. அவற்றைப் பாறைப் பட்டி நாயக்கர் சுருட்டிக் குலுக்கிப் போட்டார். இளையவன் முதலில் ஒரு சீட்டை எடுத்தான். பிறகு ஒவ்வொருத்தராக வந்து சீட்டு எடுத்தார்கள். சீட்டில் எழுதப்பட்டுள்ள சொத்துக்கள் எடுத்தவர்க்கு.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வீடு என்று பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வசதியும் இருந்தது. வசதிக்குறைவும் இருந்தது. மருமகள்கள் கண்களுக்கு வசதிக் குறைவே பெரிதாகப்பட்டது. பூர்வீக வீடு அண்ணனுக்குக் கிடைத்தது. அண்ணன் யோகக்காரன் என்று தம்பிகளுக்குப் பட்டது. வயித்தெரிச்சல் தொடங்கி விட்டது.

பாகப் பிரிவினை ஒருவழியாக முடிந்தது என்று பாறைப்பட்டி நாயக்கர் நினைத்துக் கொண்டார். இந்த நேரத்தில் நிம்மாண்டு நாயக்கர் விறுவிறு என்று பூர்வீக வீட்டுக்குள் போனார். வெங்கலத்தவலை ஒன்றைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தார். பாறைப்பட்டி நாயக்கருக்கு முன்னால் தவலையைக் கவுத்துத் தட்டினார். நாணயங்கள் விழுந்தன. எல்லாம் வெள்ளிக் காசுகள், வெள்ளைக்காரன் காலத்து வெள்ளிக்காசுகள்.

அந்தக் காலத்தில் 12 வெள்ளிக் காசுகளுக்கு ஒரு பவுன் தங்கம் வாங்கலாம். மொத்தம் 2000 காசுகள் இருந்தன. காசுகளையும் சரிசமமாகப் பகிர்ந்தார்கள். காசுகளை மகன்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் போது நிம்மாண்டு நாயக்கரின் முகத்தைப் பார்க்கணுமே. மனுசன் முகத்திலே ஒரே சந்தோசம்.

# 7. விடிவதற்குள்....

– அசோகமித்திரன்

பங்கஜத்துக்கு முத்துவை எழுப்புவதற்கு வேதனையாகத் தான் இருந்தது. ஒன்றுக்குள் ஒன்றாக நான்கு பிளாஸ்டிக் வாளிகளை எடுத்து வந்து வாசல்படியில் வைத்தாள். இனியும் தாமதிக்க முடியாது என்று தீர்மானித்து, "முத்து, முத்து" என்று அழைத்தாள்.

முத்து படுக்கையில் அசைந்து கொடுத்தான். ''முத்து, எழுந்திரு. என் கண்ணோல்லியோ'' என்றாள் அவ்வளவு இருட்டிலும் அவன் ஒருமுறை கண் விழித்துப் பார்த்தது அவளுக்குத் தெரிந்தது.

"இதுக்குள்ளே தண்ணி வந்திருக்காதும்மா" என்று முத்து சொன்னாள்.

"வந்துடும்டா, கண்ணு. தெருக்காரா எல்லாம் போயிட்டா. இப்போவே போனாத்தான் இரண்டு மணிக்காவது தண்ணி பிடிச்சுண்டு வந்து கொஞ்சம் கண்ணசரலாம்".

"நீ போய் பக்கெட்டை வைச்சுட்டு வாம்மா. நான் இதோ வந்துடறேன்".

பங்கஜம் வாசல் கதவைத் தாளிடாமல் வெறுமனே சாத்திவிட்டுத் தெருவுக்கு வந்தாள். ஒரு தெரு விளக்கும் எரியாது போனாலும், வீட்டை விட வெட்ட வெளியில் கண் நன்றாகத் தெரிந்தது. விறுவிறுப்பாகப் பல உருவங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன.

பங்கஜம் சாலையைக் கடந்து, எதிர்சாரியில் மூடிக் கிடந்த பல கடைகள் நடுவே மறைந்து கிடந்த ஒரு குறுகலான சந்துக்குச் சென்றாள். சந்து இடைவெளியில் காலி வாளியே இருமுறை பக்கத்துச் சுவரில் இடித்தது. சந்து ஒரு வீட்டின் முற்றத்தில் முடிந்தது. அந்த இருட்டிலும் அங்கு டஜன் கணக்கில் தவலைகளும், வாளிகளும் பரத்தி வைத்தது தெரிந்தது. சுவரோரமாகப் பதித்து வைத்திருந்த தண்ணீர் பம்பு அருகே



பிரியமாய்ப் போடும் வெற்றிலையும் நிறுத்தப்பட்டது. அடுத்த அடுத்த மாதங்களில் தலைக்கு எண்ணெயும் போச்சு. உடுமாத்துத் துணி குறைஞ்சாச்சு.

வயசாளிகள் இருவரும் மெலிந்து போனார்கள். உடம்பெல்லாம் வங்கு வத்திப் போச்சு. இரண்டு பேரும் சாயம்போன கந்தல் துணி போல ஆயிப் போயிட்டாங்க.

எண்ணெய் தேய்க்காததால் தலை அட்டுப் பிடித்து பிசுபிசுவென்று ஆகிப்போனது. தாங்க முடியாமல் பேரக்காள் ஊர்க்குளத்தில் போய்க் களிமண்ணைத் தலையில் தேய்த்துக் குளித்து வந்தாள்.

அன்று பார்த்து, தற்செயலாய்ச் சின்ன மகள் அப்பா அம்மாவைப் பார்த்துப் போக வந்தாள். வந்தவள் நிலைமையைப் புரிந்து கொண்டாள். கோபத்தோடும் ஆங்காரத்தோடும் அண்ணன்களையும் மதினிகளையும் திட்டித் தீர்த்தாள்.

நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் குனிந்த தலைநிமிராமல் கண்ணீர் வடித்தார்கள். தன்னோடு வந்து விடும்படி மகள், அம்மா அப்பாவைக் கேட்டாள். கொஞ்ச நேரம் பெரியவர் பேசவில்லை. பிறகு சொன்னார்.

"சம்மந்தகாரங்க வீட்டுல போய் இருக்கிறது நல்லது இல்ல அம்மா! நீ நிம்மதியா ஊருக்குப் போம்மா!" என்றார்.

அன்று இரவு வயசாளிகள் இரண்டு பேருக்கும் தூக்கம் வரலை. ஆதரவு இல்லாத நிலையை நினைச்சு நினைச்சு கலங்கினாங்க. பேரக்காள் நிம்மாண்டு நாயக்கரின் காதில் மெதுவாகக் கேட்டாள். ''எங்கேயாவது கண்காணாத இடத்துக்குப் போயிருவோமா?"

அவருக்கும் அதுதான் சரி என்றுபட்டது. சரி என்றார் நிம்மாண்டு. இரண்டு நாள் கழித்து நடுவுள்ள மகள் வந்தாள். அப்பா அம்மாவுக்குப் பிடிச்ச பலகாரம் பண்டமெல்லாம் கொண்டாந்து தந்தாள். அவர்கள் நிலைமையைக் கண்டு கண்ணீர் விட்டாள். போகும் போது அப்பா அம்மா கையில் கொஞ்சம் பணம் கொடுத்து, "நினைக்கிறத வாங்கித் தின்னுங்க!" என்று சொல்லி விட்டுப் போனாள்.

ஊரைவிட்டுப் போக நினைச்சிக்கிட்டு இருந்த அவங்களுக்கு இந்தப் பணம் உதவியாக இருந்தது. மகள் கொடுத்த பணத்தை வைத்துக்கொண்டு ஒரு நாள் அதிகாலை வயசாளிகள் இருவரும் கோவில்பட்டி புறப்பட்டுப் போனார்கள். தெரிந்தவர்கள் கண்ணில் படாமல் பயந்து பயந்து நடந்தார்கள். கம்மலையும், வெள்ளி அரணாக் கயித்தையும் விற்றார்கள். சாமியைக் கும்பிட்டு ரயிலேறி மதுரைக்குப் போனார்கள்.

மதுரை ரயில்வே ஸ்டேசனில் கணக்கு வழக்கில்லாத கூட்டம். என்ன செய்யிறது. எங்கே போறதுண்ணு தெரியாம இரண்டு பேரும் உட்கார்ந்து இருந்தாங்க.

அந்தக் கூட்டத்திலேயும் பேரக்காகிட்டே ஒரு சின்ன குழந்தை வந்து ஒட்டிக்கிட்டது. பேரக்கா குழந்தையை அணைச்சிக்கிட்டாள். குழந்தையின் குடும்பம் இராமேஸ்வரம் போகுது. எங்க போறதுன்னு தெரியாம முழிச்சிட்டு இருந்து இவங்களும் ராமேஸ்வரம் போயிடலாம்னு முடிவு பண்ணி புறப்பட்டுப் போனாங்க.

ரயில் பேரக்காளைக் குலுக்கிக் குலுக்கித் தாலாட்டியது. பேரக்காள் ரயிலில் தூங்கினாள். “எப்பேர்ப்பட்ட குடும்பத்தில் பிறந்த பொண்ணு! இப்படி ஆயிட்டதே”ன்னு பேரக்காளைப் பார்த்து நிம்மாண்டு நினைத்தார். நினைக்கவும் அவருக்குக் கண் கலங்கியது.

இவர்கள் கண்காணாமல் போன சமாச்சார முதலில் ஊருக்கு தெரிந்து விட்டது. பிறகுதான் பிள்ளைகளுக்குத் தெரிந்தது. பிள்ளைகள் மனசு பதறுச்சு. என்ன இருந்தாலும் பெற்ற தாய் தகப்பன் இல்லையா.

மருமக்கமார்கள் ‘எங்கனயாவது கிடக்கும்’னு எரிச்சலோடு சொன்னாங்க.

ஒருநாள் ஒரு செய்தி காட்டுத் தீ போல் வந்தத. “கிணத்துல ஒரு தாத்தாவும் பாட்டியும் பொணமா மல்லாக்க மெதக்குறாங்களாம்!”

எல்லோரும் ஓடிப்போய்ப் பார்த்தாங்க. ஆனா இவங்க இல்ல.



பிள்ளைகள் கொஞ்ச நாள் தாய் தகப்பனை ஓடி ஆடித் தேடினார்கள். ஒரு தகவலும் கிடைக்கலை. நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் கண்காணாமல் போய் நாலைஞ்சு வருசமாச்சு. ஊரு மறந்து போச்சு.

ஒருநாள் நேத்திக்கடன் செலுத்த பாறைப்பட்டி நாயக்கர் ராமேஸ்வரம் போனார். சாமி கும்பிடுவதற்காக கோவிலுக்குப் போனார். கோவில் வாயிலில் இரண்டு பக்கத்திலும் பிச்சைக்காரங்க உட்கார்ந்திருந்தாங்க. பாறைப்பட்டி நாயக்கர் தற்செயலாத் திரும்பிப் பார்த்தார். திகைச்சு நின்னுட்டார். எங்கேயோ பார்த்த முகமா இருக்கேன்னு கவனிச்சார். பதறிப் போனார். அந்தப் பிச்சைக்காரர்கள் வரிசையில் நிம்மாண்டு நாயக்கரும், பேரக்காளும் இருந்தாங்க. ரெண்டு பேர் தலையும் மொட்டை போட்டிருக்கு. பாறைப்பட்டியால தாங்க முடியல. தலையில தலையில அடிச்சுக்கிட்டார். ‘கோன்னு’ அழுதார்.

வயசாளிகள் இருவரும் அழவில்லை. கண்ணில் இருந்து ஒரு பொட்டுக் கண்ணீர் வரலை. நிம்மாண்டு நாயக்கர் பாறைப்பட்டி நாயக்கரை முன்னப் பின்னத் தெரியாத ஆளைப்பார்ப்பது போல் பார்த்தார்.

பேரக்காளுக்கு பாறைப்பட்டி நாயக்கரை அடையாளம் தெரிந்தது. வாயைத் திறந்து ஒரே ஒரு வார்த்தை மட்டும் பேசினாள்.

“எம்பிள்ளைக எல்லாரும் நல்லா இருக்காகளா?”

ஒரு கிழவி பங்கஜத்தைத் தடுத்தாள். "பன்னென்டு மணிக்கே நான் வந்து பாத்திரம் வைச்சிருக்கேன்".

கிழவி சந்தேகத்துடன் பங்கஜத்தைப் பார்த்தாள். பங்கஜம் அந்தக் கும்பலில் அந்தக் குறுகலான சந்துக்குள் முன்னேறிச் சென்றாள்.

அந்தச் சாலையில் தண்ணீர் வந்த ஐந்தாறு வீடுகளில், அந்த ஒரு வீட்டு பம்பில்தான் சிறிது அதிகமாக வரும். ஆதலால் தண்ணீர் பிடிக்க வருபவர்களும் அங்குதான் அதிகம். பம்பு அருகே நின்றவர்களுடன் பங்கஜமும் முண்டியடித்துக் கொண்டு தன் முறைக்குக் காத்திருந்தாள். தண்ணீர் இன்னும் சிறிது நேரமே வரும் என்ற உணர்வில் ஒருவர் தவறாமல் பம்புப் பிடியை அரக்கத்தனமாக இயக்கிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு அடியும் சம்மட்டியடி போல ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது. பங்கஜத்துக்கு முந்தைய இடத்தில் பாத்திரம் வைத்திருந்த அம்மாள், தலைப்பை இழுத்துச் சொருகிக் கொண்டு தயாராக இருந்தாள். அவள்முறை வந்ததும் பங்கஜமே அந்த அம்மாளுடைய தவலையைப் பம்படியில் நகர்த்தி வைத்தாள். அதைத் தவலை என்பதைவிட வேறு பெயர் ஏதாவது தான் சொல்ல வேண்டும். அது நிரம்பினால் எப்படி நகர்த்துவது என்று ஒரு கணம் பங்கஜத்துக்குப் பயம் எழுந்தது. பாவம், அந்த அம்மாள் வீட்டில் எவ்வளவு நபர்களோ? ஆனால் ஒருவர்கூட அவளுக்குத் துணை வரவில்லை.

தவலை பாதி நிரம்பியபோதே அந்த அம்மாள் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் இருந்தாள். தவலைக்குப் பிறகு இன்னும் நான்கு பெரிய அடுக்குகள். அதன் பிறகு பங்கஜத்தின் முறை.

இரண்டாம் அடுக்கு நிரம்புவதற்குள் அந்த அம்மாளுக்குப் பெரிதாக மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கத் தொடங்கியது. பம்பு அடிப்பதிலும் கை தடுமாறியது. "நான் அடிக்கிறேன். நீங்க பாத்திரத்தை நகர்த்துங்க" என்று சொல்லிப் பங்கஜம் பம்ப் பிடியை வாங்கிக் கொண்டாள். பம்பைச் சுவரில் பதித்து வைத்திருந்தால் ஒரே பக்கமாக ஒரே கையில்தான் அடிக்க முடியும். நிதானமாக அடித்தாலே ஒரு பாத்திரத்திற்குள் கை சளைத்து விடும்.



நான்கைந்து ஆண்கள் இருந்தார்கள். அதில் ஒருவர் பங்கஜத்தைப் பார்த்து, "இனிமே இங்கே வராதீங்கன்னு போன தடவையே சொன்னேனே?" என்றார்.

"இன்னிக்கு மட்டும் தயவு பண்ணுங்க. நாளைக்கு வேறே இடத்துக்குப் போறேன்" என்று பங்கஜம் சொன்னாள்.

"இங்கே வீட்டிலே இருக்கிறவங்களுக்கே தண்ணி பத்தலே. சும்மா சும்மா வந்த கூட்டம் கூடினா?"

பங்கஜம் பதில் சொல்லாமல் நின்றாள்.

"பக்கெட்டை வைச்சிட்டு வெளியே நில்லுங்க. தண்ணி வந்தா உள்ளே வந்துக்கலாம்...."

பங்கஜம் வாளிகளை ஒரு மூலையில் வைத்துவிட்டு மீண்டும் சாலைக்கு வந்தாள். நட்ட நடுநிசியில் அப்படிச் சாலையோரமாக நிற்பது அவளுக்கு அசாதாரணமாகத் தோன்றாமல்போய் மாதக்கணக்கில் ஆயிற்று. கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் கிடப்பது சாதாரணமாக இருந்தது. குழாய்த் தண்ணீர் ஒருநாள் விட்டு ஒருநாள் வருவதாகப் பேச்சு. ஆனால் வீட்டுக் குழாயில் வராது. எங்கே வருகிறதென்று தேடிப் பிடித்து அது வரும் இரு மணி நேரத்தில் பரபரக்க ஏராளமானவரோடு தேவையற்ற துவேஷம் வளர்த்து, இது பாத்திரங்களில் வண்டலும் வடிசலுமாகத் தண்ணீர் பிடித்து எடுத்து வந்தால், இரு நாட்களுக்கு அதைச் சமையலுக்கும் வைத்துக் கொண்டு குடி தண்ணீராகவும் கொட்டிக்கொள்ள வேண்டும். இன்றிரவு இங்கு ஒருவழியாகச் சமாளித்தால் நாளை மறுநாள் இப்படி நடுத்தெருவில் அலைய மனதைத் திடப்படுத்திக் கொண்டால் போதும்.

நடைபாதை ஓரக்கல்லிலும் இன்னும் பலர் காத்துக் கிடந்தார்கள். அங்கு சாதாரணமாகக் கிடக்கும் அசுத்தத்தில் பகல் வெளிச்சத்தில் நிற்கக்கூட அருவருப்பாயிருக்கும்.

தொளதொளவென்று ஒரு சட்டையில் ஒழுங்காகப் பொத்தான்கூடப் போடாமல் முத்து வந்து சேர்ந்தான். பங்கஜம் முத்துவைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். "குழந்தை தூங்கிண்டு இருக்காளா?" என்று கேட்டாள்.

"நான் பார்க்கலேம்மா. ஆனா அவ அழலே" என்று முத்து சொன்னான்.

"கதவைச் சாத்திண்டுதானே வந்திருக்கே"

"ஆமாம்".

"நீ இங்கேயே நில்லு. நான் தவலையை எடுத்துண்டு ஐஸ்டெப்போலே ஒரு தடவை தண்ணி பிடிச்சுண்டு வந்திடறேன்".

"இங்கே தண்ணி வந்துடுத்தா?"

"இன்னும் வரலே. வீட்டுக்காரர் இப்போதான் பம்பை மாட்டிண்டு இருக்கா".

பங்கஜம் சாலையைக் கடக்கவிருந்தவள் சட்டென்று நின்றாள். அசாத்திய வேகத்தில் ஒரு லாரி அவளைக் கடந்து சென்று மறைந்தது. அதை அடுத்து இன்னும் ஒரு காரும் மோட்டார் சைக்கிளும் பறந்து சென்றன.

பங்கஜம் முத்துவைக் கவலையோடு திரும்பிப் பார்த்தாள். பிறகு அவள் வீட்டுக்கு ஓட்டமும் நடையுமாகப் போனாள். தெருவில் அப்போதுதான் யாரோ கைவண்டியில் எங்கிருந்தோ தண்ணீர் பிடித்துக்கொண்டு போயிருக்கிறார்கள். சிந்திய தண்ணீர் தெரு நடுவில் பட்டையாகக் கோடிட்டிருந்தது.

போட்ட படுக்கைக்குச் சம்பந்தமே இல்லாமல் சம்பா தரையில் தூங்கிக் கொண்டிருந்தாள். பங்கஜம் அவளைத் தூக்கவில்லை. படுக்கையில் கிடத்தும்போது குழந்தை விழித்துக் கொண்டால் என்ன செய்வது? பெரியவர்களைப் போலக் குழந்தையும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தூங்கக் கற்றுக் கொள்ளவில்லை.

பங்கஜம் தண்ணீர்த் தவலையுடன் ஒரு வெண்கலப் பானையையும் தூக்கிக் கொண்டு மீண்டும் தெருவுக்கு வந்தாள். எதை நம்பி இருட்டில் குழந்தையைத் தனியே விட்டுவிட்டு வீட்டையும் தாளிடாமல் போகிறோம்? கணவன் ஊரிலிருந்தாலும் இல்லாது போனாலும் இதுவரை



தண்ணீருக்காக அவன் இன்னொருவர் வீட்டுக் கொல்லையில் நிற்கப் போவதில்லை. ஆனால் வீட்டுக்கும் குழந்தைக்குமாவது காவலாக இருக்கலாம்.

ஐஸ் டெப்போ காவல்காரன், "ஏய் எங்கே போறே?" என்றான். பங்கஜம் இடுப்பிலிருந்து கால் ரூபாய் சில்லரை எடுத்தாள். அவன் அதைக் கவனியாது போல, "போம்மா. போ போ போ. இன்னிக்கு ஒருத்தரை உள்ளே விட முடியாது. போ போ போ!" என்றான். அங்கு கூடியிருந்த கூட்டம் அவனிடம் அந்தக் கடுமையை உண்டு பண்ணியிருக்க வேண்டும். அதைப் பொருட்படுத்தாமல் எல்லா வயதுக்காரர்களும் அவனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்கள். பங்கஜமும் அவள் பங்குக்கு, "இன்னிக்கு ஒருநாள் மட்டுங்க" என்றாள். ஒருநாள் மட்டும், ஒருநாள் மட்டும் என்றே எவ்வளவு நாட்களாகி விட்டன? இன்னும் எவ்வளவு நாட்கள் இப்படி?

முத்து அவளைத் தேடி வந்துவிட்டான். "இன்னும் மூணு பேர் பிடிச்சப்புறம் நம்பதாம்மா" என்றான்.

"நாலு பக்கெட்டும் சரியா இருக்கா"

"இருக்கே...."

"நீ இங்கே நில்லு. நான் போய் தண்ணி அடிச்சு வைச்சுட்டு உன்னைக் கூப்பிடறேன்"

"இந்த வெங்கலப் பானையை ஏம்மா எடுத்துண்டு வந்தே? இதிலே தண்ணியும் ரொம்பக் கொள்ளலே, தூக்கறதும் கஷ்டமாயிருக்கே?"

"என்ன பண்ணறதுடா? பெரிய அடுக்குலே நேத்திக்குத் துணி அலசின தண்ணியைச் சேத்து வைச்சிருக்கேன்"

முத்துவிடம் தவலையையும் வெண்கலப் பானையையும் ஒப்படைத்துவிட்டுப் பங்கஜம் வாளிகளை வைத்திருந்த வீட்டுக்கு விரைந்தாள். அங்கு இப்போது அசாத்தியக் கும்பல் சேர்ந்திருந்தது. "இப்போ வந்துட்டு எங்கே உள்ளே போறே? நாங்கள்ளாம் உனக்கு மனுஷாள்களாகத் தெரியலியா" என்று

# 8. வேலை(ளை) வந்துவிட்டது

- ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

ஏதாவது ஒரு பெரிய கம்பெனியில் கெமிஸ்டாகச் சேரலாம். இல்லையென்றால் கெமிகல் அனலிஸ்டாகப் போகலாம். அதுவும் கிடைக்காவிட்டால் மெடிகல் ரெப்ரசென்டேடிவ் அல்லது லாப் அஸிஸ்டென்ட். உருப்படியாக எந்த வேலையும் அமையாவிட்டால் இருக்கவே இருக்கிறது ஏதாவது ஒரு கல்லூரியில் கெமிஸ்டரி டெமான்ஸ்ட்ரேட்டர் உத்தியோகம்.

இப்படித்தான் நினைத்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தேன். நெல்லை எக்ஸ்பிரஸை விட்டு இறங்கிய என்னை வரவேற்க எழும்பூர் ரயிலடிக்கு யாருமே வரவில்லை. இத்தனைக்கும் பொன்னையா மாமாவுக்குக் கடிதம் எழுதியிருந்தேன்; கண்டிப்பாக ஸ்டேஷனுக்கு வரவேண்டுமென்று.

பொன்னையா மாமா வேறு யாருமல்லர்; என் அம்மாவின் உடன்பிறப்பு. இன்னும் நெருக்கமாகச் சொல்வதானால் என்னுடைய சொந்த அக்காவின் கணவர். அவர்கள் வீட்டில் தங்கியிருந்து தான் வேலை தேட வேண்டும்.

''என்னங்க ஊர்லேந்து இன்னிக்கு ரகு வர்றான். ஸ்டேஷனுக்குப் போய் கூட்டிட்டு வாங்க...'' என்றிருப்பாள் அக்கா.

“ஆமா இவன் பெரிய இவன். சீமையிலேர்ந்து வர்றான். இவனைப் போய் ஸ்டேஷன்லே காத்து நின்று மாலை போட்டு வரவேற்கணுமாக்கும். அட்ரஸ்தான் கையிலே இருக்கே. மூதேவி மாமா. அவரைத் தெரியாதா எனக்கு?”.

இப்ப இவரு மதிக்கமாட்டார். ஏன்னா எனக்கு உத்தியோகம் இல்லை. நாளைக்கே ஒரு பெரிய கம்பெனியிலே கெமிஸ்ட்டா, மெடிகல் ரெப்ரசென் டேடிவா.... லாப் அஸிஸ்டெண்டா.... காலேஜ் டெமான்ஸ்ட் ரேட்டரா..

கனவுகள் விரிந்தன. ஆசையில் ஊறிய எச்சிலே எனக்கு



பங்கஜம் அந்த அம்மாளின் பாத்திரங்கள் அனைத்திற்கும் தண்ணீர் அடித்துத் தந்துவிட்டுத் தன் வாளியை நகர்த்தி வைத்தாள். அங்கு நின்றிருந்த ஒருவர், “ஒருத்தரே அண்டா அண்டாவாத் தண்ணி எடுத்துப்போனா, மத்தவங்க என்ன பண்ணுவாங்க? என்று சொன்னார். மூச்சிறைத்த பங்கஜம்ட, “இதுதான் என்னுது முதல் பாத்திரம்” என்றாள்.

அந்த நபர், “யோவ், சந்தானம்! இங்கே என்ன கேள்வி கேப்பாரு யாருமில்லே? இந்தப் பொம்பளைங்க இப்படி ஒரேயடியா பம்பைப் பிடிச்சு வளைச்சிட்டிருக்காங்களே! விடும்மா. நாங்களும் தண்ணி பிடிக்கத்தான் மணிக்கணக்கா நின்னுட்டிருக்கோம்” என்றார்.

தண்ணீர் நிரம்பிய அடுக்குகளை எடுத்துப் போய்க் கொண்டிருந்த அம்மாளிடம் பங்கஜம், “நீங்க தான் அவர் கிட்டே சொல்லுங்கம்மா” என்றாள்.

அந்த அம்மாள் அந்த நபரிடம், ''அவுங்க இன்னும் பிடிக்கவேயில்லப்பா” என்றாள்.

“ஆமாம், இதுல கூட்டு”

பங்கஜத்தின் தோலே கழண்டுவிடும் போல இருந்தது. இன்னும் மூன்று வாளிகள் அடித்தாக வேண்டும். கொண்டு வந்தவற்றில் முழுக்கத் தண்ணீர் எடுத்துக் கொண்டு போனால்கூட, இரண்டாம்நாள் மாலையில் எல்லாம் சரியாகக் களைய முடியாது. சட்டென்று யாராவது ஊரிலிருந்து வந்து விட்டால், முகம் கழுவிக்கொள்ள ஒரு செம்புத் தண்ணீர் தர முடியாது. மறுநாள் சுத்தமான வேஷ்டி புடவை வேண்டும் என்றால் துணி நனைத்து உலர்த்த முடியாது.

பங்கஜம் அவளுக்கு ஞாபகமிருந்த தோத்திரங்களை மனதுக்குள் சொல்லிக்கொண்டு, பம்பை அடித்தவண்ணம் இருந்தாள். ஒருமுறை கூட ஒரு தோத்திரத்தைக்கூட முழுக்கச் சொல்ல முடியவில்லை. அங்கு விரலிடுக்குக்கு இடமில்லாமல் நிறைந்திருந்த மக்களும் பாத்திரங்களும், அவருடைய கண்ணில் மிக இலேசான நிழலாகத் தென்பட்டது போலத் தோத்திரங்களும், ஒரே குழப்பமான குவியலாக வந்து போய்க்

கொண்டிருந்தன. லலிதா சகஸ்ர நாமத்தில் சௌந்தர்ய லகரி. நடுவே கிருஷ்ணாஷ்டகம். பித்துக்குளி முருகதாஸ் பஜன் பாட்டு. அம்மா! அம்மா! அம்மா!

பங்கஜத்துக்கு அம்மாவென்று கத்தியழைக்கக்கூட முடியாதுபோலத் தோன்றிற்று. அவளுடைய கை ஏதோ தனிப்பட்டுப் போனதுபோல ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. மார்பு எவ்வளவு கனத்ததோ அந்த அளவு மனது காலியாக இருந்தது. அவள் அவளே இல்லை. அவள் வேறு யாரோ. வேறு யாரோ என்று சொல்வதுகூடத் தவறு. வேறு ஏதோ.

மூன்றாவது வாளி அடிக்கும்போது முத்து வந்து விட்டான். ஐஸ் டெப்போவில் என்ன ஆயிற்று என்று கேட்கக்கூட முடியாமல் பம்புப்பிடியை பங்கஜம் முத்துவிடம் கொடுத்தாள். அவன் ஒரு கையால் அடிக்க முடியாமல் இரு கைகளாலும் பிடியைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு முறையும் தன் முழு உடலையும் உயர்த்தி அடித்தான்.

பங்கஜம் ஒவ்வொரு வாளியாகத் தூக்கிச் சாலை நடைபாதையில் கொண்டு போய் வைத்தாள். அங்கே இன்னும் எவ்வளவோ பேர் தண்ணீர் பிடித்தும் பிடிக்காததுமாகப் பாத்திரங்களையும் வாளிகளையும் வைத்திருந்தார்கள். ஆண்கள் சைக்கிள்களில் எப்படியெல்லாமோ குடங்களையும் தவலைகளையும் கட்டித் தொங்க விட்டுக்கொண்டு அலைந்து கொண்டிருந்தார்கள். ஊரே வெறி பிடித்ததுபோல் குழாய்த் தண்ணீருக்கு அலை பாய்ந்து கொண்டிருந்தது.

பங்கஜத்துக்கு அடிவயிற்றில் சுளீரென்று ஒருமுறை வலித்தது. போன தடவையும் இப்படித்தான் வலி வந்து, தெருவிலேயே சுருண்டு விழுந்திருந்தாள். சம்பா பிறந்தவுடனே அவளது கணவன் ஆஸ்பத்திரியில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான். ஆபரேஷன் ஆனபோது பெரிய தொந்தரவு இருக்கவில்லை. ஆனால் இப்போது இரண்டு வருடங்கள் கழித்து வலிவரத் தொடங்கியிருக்கிறது. பெரிதாகிப் போய்ப் படுத்த படுக்கையாகத் தள்ளிவிடக் கூடாது.

கடைசி வாளி அடித்துவிட்டுத் தூக்கமாட்டாமல் அதைச் சிறிது சிறிதாக நகர்த்திக் கொண்டு முத்துவும் நடைபாதைக்கு



வந்து சேர்ந்தான். அவனுக்கும் வயிற்றை வலிக்கு. ஹெர்னியா என்று சொல்லிப் போன வருஷமே ஆபரேஷன் செய்ய வேண்டுமென்று டாக்டர் சொன்னார். சொன்னவர் பயமுறுத்திச் சொல்லியிருந்தால் ஒருவேளை உடனே ஏதாவது செய்து இருக்கலாம். பங்கஜம் முத்துவை அணைத்துக் கொண்டாள். “நீ போடா வீட்டுக்கு. நான் ஒவ்வொண்ணா கொண்டு வந்துடறேன்” என்றாள்.

‘‘ஐஸ் டெப்போலே சாவித்திரிகிட்டே சொல்லிட்டு வந்திருக்கேன். அதையும் அடிச்சுட்டுப் போறேம்மா” என்று முத்து சொன்னான்.

“வேண்டாம்டா, கண்ணா. இது போறும். எப்படியாவது பார்த்துக்கலாம்”.

“அப்போ அங்கே போய்க் காலி பாத்திரத்தை எடுத்துண்டு போகட்டுமா”

“இல்லை. நீ வீட்டுக்குப் போ. நான் எடுத்துண்டு வறேன்”.

பங்கஜம் ஒவ்வொரு வாளியாகச் சாலையைக் கடந்து மறுபுறமிருந்த நடைபாதையில் கொண்டு போய் வைத்தாள். அங்கே ஒரு கன்றுக்குட்டி அவளருகே வந்து. “போ போ”, என்று விரட்டினாள். அது நகராமல் அங்கேயே நின்றது. அடுத்த வாளி எடுத்துவர அவள் நகர்ந்தவுடன், அது நிச்சயம் தண்ணீரில் வாயை வைத்துவிடும்.

பங்கஜம் மறுபடியும் அந்தக் கன்றுக்குட்டியை விரட்ட முயன்றாள். எந்தத் துவேஷமும் பாராட்டாமல், அது சொறிந்து கொடுக்க வாகாகத் தலையை உயர்த்தியது.

“சரி குடி” என்று பங்கஜம் சொன்னாள். சாலை மறுபுறத்தில் வைத்திருந்த இதர பக்கெட்டுகளை எடுத்துவர விரைந்தாள். நாளை மறுநாள் இந்த அளவு தண்ணீராவது கிடைக்குமா என்று தெரியாது. ஆனால் இன்றையப்போது இதோடு முடிந்து விட்டது. விடிய இன்னும் வெகுநேரம் இருந்துங்கூட.

முருகன் அண்ணாச்சி சொன்னதுபோல, அவரை மட்டுமே என நம்பிக் கொண்டிருக்கவேண்டும். நானும் முயற்சி செய்ய வேண்டுமல்லவா! அம்பத்தூர் பஸ்ஸைப் பிடித்தேன், ராஜாசிங்கைப் பார்க்க....

''தம்பி நீ.... நம்ப ராமசாமி ஆச்சாரியோட மூத்த மகன்தானே....?''

என்னைச் சட்டென்று அடையாளம் கண்டு கொண்டு அன்போடு வரவேற்றதால் அவரைப் பற்றிய மரியாதை என்னுள் விலைவாசியானது. மகிழ்ச்சிப் பிரவாகத்தில் நம்பிக்கை துளிர்விட்டது. வந்த விஷயத்தைச் சொல்லி முடித்தேன்.

"தொழிற்சங்கத் தலைவன்னா வேலைக்கு வந்தவங்களோட நலனைக் கவனிக்கிறவன் தானேயொழிய வேலைக்குப் போக ஏற்பாடு பண்ற எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் இல்லே. என்னைக் கேட்டா ஒவ்வொரு இளைஞனுக்கும் தன்னோட சொந்தக் காலில் நிக்கிற துணிச்சலும் திறமையும் வரணும்தான் சொல்வேன். இந்த சிபாரிசுகள்லே எனக்கு நம்பிக்கையும் கிடையாது, விருப்பமும் கிடையாது".

பெரிய வீட்டு ராஜாசிங் ஒரு பேருரையையே நிகழ்த்தி அனுப்பி வைத்து விட்டார். அவரைப் பார்க்கப் போன வகையில் பஸ், டிபன் செலவுக்காகத் தண்டச் செலவு முப்பத்தேழு ரூபாய் ஐம்பது காசு.

''உன்னைப் போல ஒரு கூமுட்டை எவனும் இருக்க மாட்டான். அவுகளை வீட்டிலே போய்ப் பாருலேன்னு சொன்னா யூனியன் ஆபீஸிலே - அதுவும் தொழிலாளர்கள் மத்தியில போய்ப் பார்த்திருக்கே. அவுங்க முன்னால அவுக அப்படித்தான் பேசுவாக - தனியாப் போயிருந்தா காரியம் பழமாகியிருக்கும். காரியத்தைக் கெடுத்திட்டியேலே. உனக்கெல்லாம் எங்கே வேலை கிடைக்கப் போகுது?"

மாமா எரிந்து விழுந்தார். இது நேருக்கு நேர். இன்னும் அக்காவிடம் என்னென்னவெல்லாம் திட்டினாரோ? அக்காவும் இப்போதெல்லாம் அடிக்கடி புத்திமதிகள் சொல்லத் தொடங்கி விட்டாள்.



குளுக்கோஸ்-டி தெம்பை அளித்தது. உற்சாகமாக ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தேன்.

அடேயப்பா.... எவ்வளவு பெரிய நகரம்! வள்ளியூர் தெப்பத் திருவிழாவன்று வருகிற கூட்டம் இங்கே சாதாரண நாள்களில் கூட இருக்கிறதே. குரங்குகள் போல இந்த மனிதக் கூட்டம்தான் என்னமாய் பஸ்களிலும், ரயில்களிலும் தொற்றிக் கொண்டு போகிறது? எத்தனை கடைகள்.... எத்தனை வாகனங்கள்... எத்தனை ரகங்கள்!

ஆண்கள்.... பெண்கள்! இந்தப் பெண்களில்தான் எத்தனை நிறங்கள்!

"அமிஞ்சிக்கரைக்கு எந்த பஸ் போகுது சார்?"

"27, 27ஏ"

அமிஞ்சிக்கரைக்கு வந்தாகிவிட்டது. இனி அடுத்த வேலை கண்ணையாச் செட்டி தெருவை கண்டுபிடிக்க வேண்டும்.

நேராகப் போய், பீச்சாங்கை பக்கம் கட் பண்ணி சோத்துக்கை பக்கம் திரும்பி, அப்பால நேராப் போய் வெற்றிலைப் பாக்கு கடைகளில் கேட்டு அலைந்து, அலுத்து, களைத்து இறுதியாக பஸ்ஸை விட்டு இறங்கிய இடத்திற்குப் பக்கத்திலேயே கண்ணையாச் செட்டி தெரு, கண்ணையாத் தெருவாகக் கண்ணில் பட்டது.

இந்தத் தெருவில் இனி அந்த ஒன்பதாம் நம்பர்.

கதவிலக்கங்கள் கட்டுப்பாடில்லாமல் எங்கெங்கோ இருக்க, மிகுந்த குழப்பத்தோடு திரிந்து கொண்டிருந்த கொஞ்ச நேரத்தில் அக்காவே எதிரில் வந்தாள்.

''ரகு... இப்பத்தான் வர்றியா?... ஊர்ல அம்மா அப்பாவெல்லாம் சொகமா இருக்காங்களா?"

''ம்''... எனக்கு கோபம். அதிகம் பேசவில்லை. முகம் உம்மென்று இருக்கிறது.

"உன்னைப் பார்க்கறதுக்குத்தான் மாமா ஸ்டேஷனுக்குப்

புறப்பட்டாக. ஆனா புறப்பட்ட நேரத்திலே அரும்பாக்கத்திலேர்ந்து ஒருத்தர் வந்து வாசக்கால் போடணும்னு அவசரமாக கூட்டிட்டுப் போய்ட்டார்."

"அதனாலென்ன பரவாயில்லே. நான்தான் பத்திரமா வந்துட்டேனே..."

பேசிக்கொண்டே வந்தவள் ஒரு குடிசைக்கு முன்னால் நின்றாள்.

"குனிஞ்சுப்போ ரகு..."

இதுவா இவர்கள் இருக்கிற வீடு! நம்பர் ஒன்பது, ஒரு பங்களாவாக இல்லாமற்போனால் பரவாயில்லை. குறைந்தபட்சம் ஓரிரு அறைகள் கொண்ட ஒரு ஓட்டு வீடாகவாவது இருக்குமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். குடிசையாக இருக்கிறதே...

தலையில் சுமந்து வந்த கூடையை இறக்கி வைத்தாள் அக்கா. மாமாவின் பட்டறையிலிருந்து மரஇழைப்புத் தூளை அள்ளிக் கொண்டு வந்திருந்தாள். தூசியும், தூளுமான அந்த மரத்தூள் நெடி பக்கத்தில் இருந்த கூவத்தின் மணத்தோடு கூட்டணி அமைத்துக் கொண்டது.

"அக்கா இதிலேயா இருக்கே! இதுக்கு வாடகை எவ்வளவு?"

"300 ரூபா. நம்ப ஊர்ல 300 ரூபாய்க்கு ஒரு பெரிய மச்சு வீடே கிடைக்கும். அது சரி, அப்பாவுக்கு வேலை நடக்கா?".

"ஆமாக்கா.... நம்மவூர் முருகன் கோவில் தேர் ரிப்பேர் வேலை நடந்திட்டிருக்கு. அப்பாதான் அதை ஏத்துச் செய்திட்டிருக்காக. வெட்டூர்ணிமடத்திலேர்ந்து ரத வேலைக்காக நிறைய வந்திருக்காக. ஆனாலும் அப்பா ரொம்ப கஷ்டப்படறாக..... வயசாயிடுச்சில்லையா...."

ஆம்.... நான் உத்தியோகத்துக்குப் போய்விட்டால்...

கெமிஸ்ட்... கெமிகல் அனலிஸ்ட்.... மெடிகல் ரெப்ரசென்டேடிவ்... லாப் அஸிஸ்டென்ட்.... காலேஜ் டெமான்ஸ்ட்ரேட்டர் என்று மீண்டும் கனவுகள் விரிந்தன.



அடுத்த நாள் காலை ராகு காலம், எமகண்டம் நீங்கலாக ஒரு நல்ல நேரம். எதிரே யார் வருகிறார் என்று பார்த்து அக்கா என்னை வெளியே அனுப்பி வைத்தாள். இனி வேலை வேட வேண்டும். ஊரிலிருந்து வரும்போதே சென்னையில் உத்தியோகம்பார்க்கும் சில வள்ளியூர்க்காரர்களின் முகவரிகளைக் குறித்து வைத்திருந்தேன்.

"முருகன் அண்ணாச்சி ஸ்டேட் பாங்க் ஹெட் ஆபீஸிலே இருக்காக. முதல்லே அவுகளைப் போய்ப் பாரு. பல பெரிய இடங்கள்லே அவுகளுக்குப் பழக்கம் இருக்கும். அவுக மனசு வச்சா உனக்கு ஒரு நல்ல வேலை வாங்கிக் கொடுக்க முடியும்".

இம்பொஸிஷன் போட்ட மாதிரி அப்பாதான் இதை எத்தனைமுறை சொல்லிருப்பார். முருகன் சார்வாளிடம் தான் முதலில் சென்றேன்.

எல்லாம் சரிதான் தம்பி... இங்கே எண்பத்திரண்டாம் வருஷம் பதிஞ்சவங்களுக்கே இப்பத்தான் எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ்சேஞ்சிலேர்ந்து இண்டர்வியூ கார்டு வரத் தொடங்கியிருக்கு. நீ என்னடான்னா போன மாசம் பாஸ் பண்ணிட்டு வந்து உடனேயே வேலை வேணுங்கிறியே...!

அண்ணாச்சி..... பாங்கிலே முடியலேன்னா பரவாயில்லே... ஏதாவது ஒரு பிரைவேட் கம்பெனியிலேயாவது....

"பார்க்கறேன். ஆனால் என்னை மட்டும் நம்பிட்டிருக்காம நீயும் ட்ரை பண்ணிட்டிரு...."

பஸ்ஸில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது சினிமாவில் வருகிற பிளாஷ்பேக் மாதிரி மறுபடியும் அப்பா வந்தார். சென்னையில் நான் அவசியம் பார்க்க வேண்டிய நபர்கள் பட்டியலில் அடுத்த பெயரை நினைவுக்குக் கொண்டு வந்தார் பிளாஷ்பேக் அப்பா.

"நம்ப பெரிய வீட்டு ராஜாசிங் அம்பத்தூர்ல ஒரு கம்பெனியிலே யூனியன் தலைவர். வேலை கிடைக்காம ஊர் சுத்திருட்டிருந்த அந்தத் தம்பி எப்படியோ இப்படியொரு பெரிய நிலைக்கு வந்திருக்காக. அவுக நினைச்சா உனக்கா அங்கே ஒரு வேகன்ஸியையே உண்டாக்க முடியும்....."

நாள்கள் சில நகர்ந்திருக்கும். அக்கா இப்போது புதிதாய் ஒரு சங்கடத்தை உருவாக்கி விட்டாள். “ரகு, அங்கே பாரு! உங்க மாமா தனியா பலகையை இழைச்சிட்டிருக்காக... கூட மாட கொஞ்சம் ஒத்தாசை பண்ணக் கூடாதா?” என்று சொல்லும் போதெல்லாம் ஒப்புக்குக் கொஞ்சம் இழைத்து விட்டு நழுவிக் கொள்வேன். பி.எஸ்.ஸி., கெமிஸ்டரி, ஹைசெகன்ட் கிளாஸ் தச்சுவேலை செய்வதா..!

“படிச்சவன் பாட்டைக் கெடுத்தான். எழுதினவன் ஏட்டைக் கெடுத்தவன். இவன் வந்து ரெண்டு மாசமாச்சு. இன்னும் ஒரு உத்தியோகத்தைத் தேடிக்க வக்கில்லே. நானென்ன இவனை மாதிரியா படிச்சிருக்கேன். கையெழுத்துகூடப் போடத் தெரியாது. மெட்ராஸுக்கு வந்து இறங்கின மறுநாளே வேலை கிடைச்சிட்டுது. அப்பவே தினமும் 20 ரூபா சம்பாதிப்பேன்”.

மாமா வருத்தப்படுவதாக அக்கா கூறினாள்.

“மெட்ராஸுக்கு வந்த மறுநாளே வேலை கிடைக்கிறதுக்கு நானென்ன தச்சு வேலைக்கா வந்திருக்கேன்? ஆபீஸ் உத்தியோகம் - அது மெதுவாகக் கிடைச்சாலும் எடுத்த எடுப்பிலேயே நாலாயிரம் ரூபாய்க்குக் குறையாத சம்பளம் கிடைக்கும்”.

“ஆமா, ஆயிரத்தை நம்பிகிட்டு அரை ரூபாய்க்குக்கூட பிரயோஜனமில்லாம சுத்தறதுதான் மிச்சம். அறுபது காசு கொடுத்துக் கவர் வாங்கணும்னா கூட இன்னொருத்தர் கையைத் தானே நம்பிட்டிருக்கே...”

அக்கா இப்படிச் சொன்னது கொள்ளிக் கட்டையால் என் கண்களைத் தொட்டதுபோலச் சுட்டது. எனக்கும், என்னுடைய பி.எஸ்.ஸி., ஹைசெகன்ட் கிளாஸுக்கும் இதைக் காட்டிலும் பெரிய அவமாதை வேறெதுவும் இருக்க முடியாது.

இவரென்ன கைநாட்டு, இவர்கிட்ட இனிமே சல்லிக்காசு கூட கேட்கக் கூடாது. முடிந்தால்.. கண்டிப்பாக முடியும். இவர் வீட்டில் சாப்பிடுகிற சாப்பாட்டுக்கும் ஏதாவது பணத்தைக் கொடுத்து விட வேண்டும்.

“ரகு எனக்கு நேரமாச்சு. நான் வேலைக்குப் புறப்படுகிறேன். உங்கக்கா வீட்டிலே இல்லே. எக்மோர் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கா. இன்னிக்கு நீ எங்கேயும் போக வேண்டாம். போனாலும் என்ன வேலையா கிடைச்சிடப் போவுது. அண்ணா நகர்லேர்ந்து நம்ம குப்புசாமி ஆச்சாரி ஒரு பையனை அனுப்பறதாச் சொல்லியிருந்தார். அந்தப் பையன் வந்தான்னா திண்ணையிலே கிடக்கிற பலகைகளையெல்லாம் இழைச்சுப் போடச் சொல்லு. சாயங்காலம் நான் வர்றதுக்கு லேட்டாய்ட்டா இந்தா... இந்த அம்பது ரூபா சம்பளத்தை அவனுக்குக் கொடுத்து அனுப்பிடு. உங்கப்பாவுக்குக் கடுதாசி போட்டியானா செலவுக்குக் கொஞ்சம் பணம் கேட்டு வாங்கி வச்சிக்கோ, விலை பிடிக்க முடியலே... நீயும் கொஞ்சம் பணம் கொடுத்தியானாதான் சாப்பாட்டுச் செலவைத் தாக்குப் பிடிக்கலாம்... இப்படிச் சொன்னேன்னு உங்க அக்காகிட்டே சொல்லித் தொலைச்சிடாதேலே....”

அக்கா வீட்டிலே இல்லாததைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களோடு நானிருப்பதைப் பாரமென்று சுட்டிக்காட்டிய மாமாச் சனியன் அம்பது ரூபாயைக் கையில் திணித்து விட்டு வெளியேறியது. எனக்கு அவமானமாகப் போயிற்று. இரண்டு மூன்று மாதங்களாக இவர்கள் வீட்டில் சாப்பிட்ட உணவு தண்டச் சோறுதான். அதை அவர்களே சுட்டிக் காட்டிய பிறகு... இனிமேல் சாப்பிட்டால் குமட்டிக் கொண்டல்லவா வரும்?

மாலையில் வீடு திரும்பிய மாமா விசாரித்தார். ‘இந்தத் தண்டச் சோற்றை எங்கே புள்ளே காணோம்? குப்புசாமி ஆச்சாரி அனுப்பின பயலுக்கு வேலை வச்சிட்டு போயிருந்தேன். வேலை முடிஞ்சிதோ சம்பளம் கொடுத்தானோ தெரியலே. கொஞ்சம் அசந்திருந்தா அதையும் செலவழிச்சிட்டு வந்து அப்ளிகேஷன் அனுப்பச் செலவாயிடுச்சின்னு சொல்லுவான்’.

வசவுகளை முற்றிலும் வழங்கி முடிக்கவில்லை. மாமாவுக்கு முன்னால் பிரசன்னமானேன்.

“என்ன மாமா சொன்னீங்க.... தண்டச்சோறா... இதுவரை அப்படியே இருந்துட்டேன். இனிமே அப்படியில்லே. இந்தாங்க இதிலே அம்பது ரூபா இருக்கு. இரண்டு நாள் சாப்பாடு போடுங்க...”



“எலே ரகு, குப்புசாமி ஆச்சாரி அனுப்பிய பயலுக்குக் கொடுத்த கூலியை நீயே வச்சிக்கிட்டியா...?”

“ஆமா, நான்தான் வச்சிக்கிட்டேன். வேலையை அவன் செய்து கூலி வாங்கினா என்ன? நான் செய்து வாங்கினா என்ன? உங்களுக்குத் வேலைதானே முடியணும்? பேனாவும், தாளும் எனக்குத் தராத வேலையை இந்த இழப்புளியும் மட்டப்பலகையும் தரலாமில்லையா...? இந்தாங்க என் சம்பளம்.....”

இருபது ரூபாயை மாமாவிடம் நீட்டியபோது பழக்கமில்லாத வேலையைச் செய்திருந்த என் பூவிரல்கள் சிவந்து இருப்பதைப் பார்த்து அக்காவின் கண்களில் நீர் அரும்பியது. அதில் வருத்தமிருந்த அளவுக்கு பெருமிதமும் இருந்தது.

இப்போது வேலையில்லாப் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் ஒன்று குறைந்துவிட்டது.